# தமிழரசு

16 மே 1973

40 காசு



# உங்களுக்கு தெரியுமா?




## உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.

உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

# தமிழரசு

மலர்:3 . இதழ்:22

16-5-1973





## சமதர்மச் சாதனைகளில் பெருமைக்குரியது!

### முதல்வர் டாக்டர் கலைஞர்

“இன்று எனக்கு ஒரு மகிழ்ச்சிகரமான நாள். இங்கிருந்து முதல் கணை கிளம்புகிறது. இந்தக்கணை பிற்போக்கு வாதிகளுக்கு அக்கினிக் கணையாகத் தோன்றலாம். முற்போக்கு வாதிகளுக்கு மலர்க் கணையாகத் தோன்றலாம்.

“கண்ணகிக்கு யார் யாரோ சிலை எழுப்பியிருந்தாலும், முதன் முதலாகச் சிலை எழுப்பியவன் சேரன் செங்குட்டுவன்தான்.

அதேபோலத் தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பங்கு என்கின்ற திட்டம் முதன் முதலாகத் தொடங்கிவைக்கப் பெறுவது இந்தச் சேரன் போக்குவரத்துக் கழகத்தில்தான்!

''இந்தியப் பூபாகத்திற்குள்ளே ஏற்கெனவே இருந்த, இந்தியாவில்-இன்றைக்குப் பங்களா தேசமாக ஆகியிருக்கிற அந்தப் பகுதியில், அது பங்களா தேசமாக மாறுவதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் முஜிபுர் ரகிமான் அவர்கள் ஒரு தேர்தல் பிரகடனத்தை வைத்தார்கள்.

''அதிலே இந்தத் திட்டத்தையும் அறிவித்தார்கள். அதற்குப் பின் தேர்தல் முடிந்து அதிலே முஜிபுர் ரகிமான் வெற்றி பெற்று அதன்பின் அந்த நாட்டிலே பெரும் புரட்சி கிளம்பிப் பின் அமைதி அடைந்து, இன்றைக்கு வேறு ஒரு நாடாக அமைந்திருக்கிறது. அதற்குப் பின்னும் ஒரு பொதுத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது! அந்தத் தேர்தல் பிரகடனத்தையும் நான் படித்துப் பார்த்தேன்! அவர்களும் செய்யாத அந்தத் திட்டத்தை நாம் இன்றைக்கு இங்கு முதன் முதலாகத் தொடங்கி வைக்கிறோம்!

பேரறிஞர் அண்ணா அவர்களிடம் ஒரு முறை நிருபர்கள் கேட்டார்கள். 'நீங்களும் சோஷலிஷம் கேட்கிறீர்கள்; இந்தியாவில் இருக்கிற பல்வேறு கட்சிகளும் சோஷலிஷம் கேட்கிறார்கள்! இப்படி எல்லாரும் கேட்கும் போது உங்களுக்கு மட்டும் ஏன் தனியாக ஒரு கட்சி?' என்று கேட்டார்கள்.

அதற்கு அண்ணா அவர்கள் ''அவர்கள் எல்லாம் சோஷலிசத்தை வாயளவில் பேசுவதற்காகவே கட்சி வைத்திருக்கிறார்கள். நான் அதனைச் செயல்படுத்துவதற்காகக் கட்சி வைத்திருக்கிறேன்'' என்று பதில் கூறினார்கள்.

அண்ணா வழியில் நடைபெறுகின்ற இந்த அரசு அண்ணா சொன்ன அந்த மொழியை இதயத்தில் ஆழமாகப் பதிய வைத்துக் கொண்டு சமதர்மத் திட்டங்களை உதட்டளவு உச்சரிப்பாக ஆக்கிவிடாமல், அதை உருவாக்கிடச் - செயல்படுத்திட அவைகளை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்திட ஆர்வத்துடன் பல்வேறு கட்டங்களில் தன் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்திருக்கிறது; சமதர்மப் பயணத்தை எத்தனையோ இடையூறுகளுக்கிடையேயும் நடத்தி வருகிறது.

தொழிலாளர்கள் என்பவர்கள் போக்குவரத்துத் துறையில் மாத்திரமல்ல; ஆலைகளில் பணியாற்றுகிறவர்கள் மாத்திரமல்ல —தொழிலாளர்; ரிக்ஷா இழுப்பவர்களும் தொழிலாளர்கள்தான்; காலையிலிருந்து மாலைவரை கழனி திருத்துபவனும் தொழிலாளிதான்; மூட்டை தூக்குபவனும் தொழிலாளிதான்; சலவை செய்கிறானே அவனும் தொழிலாளிதான்—சிகை அலங்காரம் செய்கிறானே அவனும் தொழிலாளிதான். ஆகவே, காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன் காணத் தகுந்தது வறுமையும், பூணத் தகுந்தது பொறுமையும் என்ற நிலை இருக்கலாமா?

''காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்—அவன் காணத் தகுந்தது வறுமையாம்!



பூணத் தகுந்தது பொறுமையாம்!''
என்று 'புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் கேட்டார்.

அவன் காணத் தகுந்தது வறுமை அல்ல; அவன் பூணத் தகுந்தது பொறுமை அல்ல. அந்த வறுமையை விரட்டுவோம்! கொடுமைக்கும் ஓர் எல்லை உண்டு அதனை அந்தக் கொடுமை மீறிப் போகாமல்-அவன் பொங்குமாங் கடலாக மாருமல் அதனை அடக்குகின்ற ஒரே ஆயுதம் அடக்குமுறை அல்ல; அதை அடக்குகின்ற ஒரே ஒரு ஆயுதம் துப்பாக்கிவேட்டுச் சத்தமல்ல; அதனை அடக்குகின்ற ஆயுதம்· சமதர்மத் திட்டங்கள்தான் என்பதை உணர்ந்த அரசு இன்றைக்குத் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

என்னை இங்குப் பலமாகப் பாராட்டினுர்கள். மாலைகள் எல்லாம் மலைபோல் குவிந்தன. நான்தான் உரியவன் இவ்வளவு பாராட்டுகளுக்கும் என்று எண்ணிக் கொண்டால் என்னைப் போன்ற பைத்தியக்காரன் வேறு யாருமல்ல!

ஏனென்ருல், இதுபோன்ற காரியங்களில் நான் ஒருவன் தனியாயாக நின்றல்ல; நம் கழகத்தைதைச் சேர்ந்தவர்கள், அமைச்சரவையிலே வீற்றிருப்பவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுவுடைமைத் தத்துவத்திலே மனம் கொண்ட தோழர்கள், அத்தனை பேரும் என்னை இயக்கி வைக்கிருர்கள்· எனக்குக் கட்டளை இடுகிருர்கள்; அவர்கள் வில்லாக இருக்கிருர்கள்; நான் அம்பாக இருக்கிறேன் என்பதை மாத்திரம் யாரும் மறந்துவிடக்கூடாது! அப்படிப் பயன்படுத்திக் கொள்கிருர்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த வகையிலே தான், நான் இப்படிப் பட்ட காரியங்கள் நடைபெறுகிற நேரத்திலே பெருமையும் உற்சாகமும் கொள்கிறேனே அல்லாமல், என்னுல் அல்லவா இது நடக்கிறது- நானல்லவா இதற்குக் காரணம் என்று இதற்கெல்லாம் 'நானேதான் காரணம்' என்று எல்லாம் நானேதான் என்று கூறிக்கொள்கிற 'ஆணவம்' என் தலையிலே என்றைக்கும் ஏருது என்பதைக் கூறிக் கொள்கிறேன். நாங்கள் அனைவரும் சேர்ந்து செய்கிற காரியம் என்றுதான் இங்குக் குறிப்பிடுகிறேன்.

அதன் வெற்றியைத்தான் இங்கே பார்க்கிறீர்கள்! இன்றைக்குச் சேரன் போக்குவரத்துக் கழகத்திலே கிட்டத்தட்ட 1,500 பேர் நிர்வாகத்திலே பொறுப்பேற்க முன் வந்திருக்கிருர்கள். அவர்களுக்குப் பங்குதாரர்களாகும் உரிமை இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. முதலீட்டில் பங்குபெறுகின்ற உரிமையை இன்று அவர்கள் பெற்றிருக்கிருர்கள்!



# தொழிலாளிக்கு முதலீட்டில் பங்கும் நிருவாகத்தில் பொறுப்பும்

இவை சாதாரணமான விஷயங்கள் அல்ல. ஒரு வங்கி விழாவில் பேசும் போது நண்பர் இராஜாவினிடத்தில் கூறினேன். ஒரு காரியம் நடைபெறும் வரை பெரிதாகத் தோன்றும். நடைபெற்று முடிந்த பிறகு 'என்ன பிரமாதம்?—இது சாதாரணம் இது நம்மால் முடியாதா?' என்று கூடப் பலருக்கு எண்ணத் தோன்றும்!

ஆனால், நடை பெறுகிற வரையில் அதை யார் நினைத்தார்கள்? யார் செயல் படுத்தினார்கள்? எந்த உள்ளத்திலே இது தோன்றியது? அல்லது யார்—எந்த அரசு—எந்த இயக்கம்—எந்த ஆட்சி நடத்துபவர்கள் செய்தார்கள்? என்பதுதான் முக்கியம்.

எங்களுக்கு இருப்பதெல்லாம் இதைச் செய்து எங்களைச் சாதாரணமானவர்கள் என்று பிறர் கருதினால் அதை நாங்கள் மிகப் பெருமையாகக் கருதுவோம்!

ஆகவேதான், இது மாதிரியான மிகச் சாதாரணமான காரியங்களைச் சாதாரணமான நாங்கள் சாதாரணமாகவே செய்திருக்கிறோம். பெரியவர்களுக்கு அது சாதாரணமாகத் தெரியும். ஏனென்றால் கருணாநிதியின் உள்ளத்திலே இருந்து கிளம்பியதால் மிகச் சாதாரணமாகத் தான் தெரியும்.

எங்களைப் பொறுத்தவரையிலே இந்தக் காரியங்களை நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த நாட்டு மக்களுக்காக—தொழிலாளி சமுதாயத்துக்காக—பாட்டாளி வர்க்கத்துக்காக—இன்றைக்கு நாம் ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்த அன்று எவை எவை செய்திட வேண்டும் என்று அன்று இருந்த ஆளுங் கட்சியைப் பார்த்துச் சொன்னோமோ, அவைகளை எல்லாம் நடத்திக் காட்ட வேண்டிய பொறுப்பிலே நாம் இருக்கின்ற காரணத்தால், அதைச் செய்தே தீர வேண்டும்.

இன்றைக்கு இந்தப் போக்குவரத்துக் கழகத்திலே இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோமென்றால், நான் கூடச் சற்று எண்ணிப் பார்த்தேன். இதிலே 1,500 பேர் சேர்கிறார்கள் என்றால் எங்கே இதில் தொழிலாளர்கள் சேர்வார்களோ முன் வருவார்களோ என்று அச்சப்பட்டேன்.

ஏனென்றால், இந்த அச்சத்தை உருவாக்கிடுவதற்குத் தான் நிறைய 'நல்லவர்கள்' இருக்கிறார்களே என்பதால் சந்தேகப்பட்டோம்.

ஆனால், இவை அனைத்தையும் மீறி 1,500 பேர் இந்தத் திட்டத்திலே சேர்ந்து அரசாங்கத்தின் திட்டத்துக்கு அனுகூலமாக இருக்கிறார்கள் என்றால், மிச்சமுள்ளவர்களும் இன்னும் ஒரு வாரம், இருவார காலத்திற்குள் சேர்ந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு!

குறைந்த பட்சம் 500 ரூபாய் செலுத்தி அவர்கள் இந்தத் திட்டத்திலே பங்குதாரராகச் சேருவார்கள் என்றால் அவர்கட்குக் குறைந்த பட்சம் 8 சதவிகிதமாவது அந்த 500 முதலீடு செய்வதற்காக, அவர்களுக்குக் கிடைத்திட வேண்டும்' இலாப நட்டக் கணக்குப் பார்க்கின்ற காலத்தில், எழுதுவதை விடச் செலவினக் கணக்குகள் எழுதப்படுகிற நேரத்திலேயே அந்த 8 சதவிகிதக் கணக்கும் தொழிலாளர் கணக்காக எழுதப்பட்டாக வேண்டும், அதற்கு வருமான வரி விலக்கு வேண்டும். அதற்குச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய கடிதத்தில் மிக உற்சாகமான திட்டமிது. அனைவரையும் கவரக் கூடிய திட்டமிது; இதைப்பற்றிப் பரிசீலித்து கொண்டிருக்கிறோம். என்று எழுதியிருக்கிறார்கள். உள்ளபடியே அதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆகவே, விரைவில் நமக்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கும்.

இதிலே 500 ரூபாய் பங்கு போட்டவர்கள், எங்கே நமக்கு அந்த 500 ரூபாயாவது கிடைக்குமா என்று கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால் சோஷலிசத்தின் மாதா இன்று இந்தியாவின் பிரதமராக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்!

ஆகவே, அந்த அனுமதி நிச்சயம் நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு. அந்த நம்பிக்கையோடு இந்தத் திட்டத்தை நாம் செயல் படுத்த வேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் நாம் இந்தத் திட்டத்தைத் தொடங்குவதாக இருக்கிறோம்!

முதலிலே சேரன் போக்குவரத்து; அடுத்ததாகப் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் சூன் திங்கள் பத்தாம் தேதி இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு இருக்கிறது. இதைப் பாண்டியனின் சார்பாகச் சேரனுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

**சமதர்மத் திட்டங்களால் புதிய வாழ்வு பெற**
**இடையூறுகளைத் துச்சமாக்கி ஏறுநடை போடுவோம்**

அம்பு வேகமாகப் போகக் கூடியது. ஆகவே, முதலில் ஆரம் பித்திருக்கிறோம். மீனும் அம்புக் குச் சளைத்ததல்ல—அது நீந்திப் போகக்கூடியது. ஆகவே நீந்திச் செல்கின்ற பாண்டியன் போக்கு வரத்தில் அடுத்தபடியாக செயல் படுத்தப்படுகிறது, வில்லுக்கு அடுத்து மீனுக்குத் தந்திருக்கி றோயே! சோழனுக்குத் தர வில்லையே என்று தஞ்சை மாவட் டத்துக்காரர்கள் கேட்டால் புலி எப்போதும் சற்றுப் பதுங்கித்தான் பாயும் என்ப தால் அதில் அடுத்துத் துவங்கும்!

பல்லவன் போக்கு வரத்துக் கழகம் சிங்கச் சின்னம்! என் றைக்கும் சிங்கம் அவசரப்படாது. சிங்கம் என்றும் திரும்பிப் பார்த் துத்தான் முன்னேறும்! அடுத்து அண்ணா போக்குவரத்துக் கழகத் திலும், படிப்படியாக இந்த ஆண்டுக்குள்ளாக எல்லாப் போக்குவரத்திலும் இந்தத் திட்டம் அமலுக்கு வரும்.

போக்குவரத்துத் தொழிலாளர் களுக்கு நன்மை செய்திருக்கிற இந்த நேரத்தில் இதைவிடத் தொழிலாளர்கட்கு நன்மை செய்கிற சர்க்கார் எது இருக்க முடியும் என்று செழியன் அவர் கள் கேட்டார்கள். தொழி லாளர் சமுதாயத்திற்குச் சங்கடங்கள் இல்லாமலில்லை. இன்றைக்கு மின்வெட்டின் காரணமாகத் தொழிலாளர்கள் சமுதாயத்திலே பலர் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அவற்றைக் களைவதற்காக நாம் முயற்சித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டு வருகிறோம்! இங்கு என்னைச் சந்தித்த நிருபர்க ளெல்லாம் அதைப்பற்றிப் பல விளக்கங்களைக் கேட்டார்கள்.

நூல் பற்றாக் குறையின் காரணமாகக் கைத்தறித் தொழிலாளர்கள் மிகுந்த இடருக்கு ஆளாகியிருக்கிறார்கள். மூன்று இலட்சம் பேர் இன்று அவதிக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

தமிழக அரசின் சார்பாக நமது அமைச்சர் மாதவன் எவ்வளவு தீவிரமாகத் திட்டங் கள் தீட்டிப் பற்றாக் குறையைத் தீர்த்திட முயன்றார்கள்!

நூல் பற்றாக்குறையின் காரண மாக நூல்களை அளிக்கின்ற அந்த முழு உரிமையை நாம் இன்னும் பெற்றாகவில்லை! அந்தப்பெரும் பொறுப்பு மத்திய அரசிடத்தில் இருக்கிறது. நான் மத்திய அர சையும் குறைகூறவில்லை. அவர் களுக்கும் சில சங்கடங்கள் இருக் கின்றன. ஆகவேதான் நூல் பற்றாக்குறை காரணமாகக் கைத்தறித் தொழிலாளர்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி யிருக்கின்றனர். இங்கு கூட அவர்களைச் சார்ந்தவர்கள் சிலர் என்னைச் சந்தித்துப் பேசினார்கள்; மோட்டா நூல் கிடைக்கவில்லை என்றார்கள்!

கடைசியாக அவர்கள் என் னிடத்தில் கேட்டார்கள்! இந்த மின்வெட்டுத் தீர்கிற வரையா வது எங்களுக்கு ஏதாவது கடன் உதவியாவது செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள்.

நானும் அதைப்பற்றி யோசித் தேன். மாவட்ட ஆட்சித் தலை வரைக் கலந்து பேசினேன். இது கோவை மாவட்டத்துப் பிரச்சினை மாத்திரம் அல்ல. தமிழ்நாடு முழுவதும் உயர்ந்த ரக நூல் கிடைக்காத காரணத் தினால் கைத்தறியாளர்கள் மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகி யிருக்கிறார்கள். ஆகவேதான் சென்னையிலிருக்கின்ற நிதித் துறைச்செயலாளரோடு தொடர்பு கொண்டு பேசினேன்.

பேசியதற்குப் பின்னர் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். தொழிலாளருக்காக நடைபெறு கிற இந்தக் கூட்டத்தில் கைத் தறித் தொழிலாளருக்காக ஓர் அறிவிப்பினைத் தருவது முறை என்று கருதுகிறேன். ஏன் அவர்களுக்குக் கடன் நிவாரணம் தரக்கூடாது என்று காலையிலே பேசிய நிருபர்கள் கேட்டார்கள்.

இப்படி ஒரு நிலைமை வந்து எந்த மாநிலத்திலாவது செய் திருக்கிறார்களா என்று கேட் டேன்.

அவர்களிலே ஒரு நிருபர் ''ஆலைகள் மூடப்பட்ட நேரத் தில் தொழிலாளர்களுக்கு முத லமைச்சர் நிதியிலிருந்து ரூ. 6 இலட்சம் அளித்தீர்களே! எந்த மாநிலத்திலாவது கொடுத் தார்களா''! என்று என்னையே திருப்பிக் கேட்டார்.

'இல்லை' என்று சொன்னேன்!

'அதுபோல் இப்போதும் இவர்களுக்கு உதவி செய்து மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டியாக இருக்கக் கூடாதா?' என்று கேட்டார்

அவர் கேட்டதை மனத்திலே வைத்துக்கொண்டு பல்லாயிரக் கணக்கில் அவதிப்படுகின்ற உயர் ரக நூல் கிடைக்காமல் அவதிப் படுகின்ற கைத்தறியாளருக்குக் கடனை ஒரு கோடி ரூபாய் தமிழ்நாடு அரசாங்கம் தருகிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த ஒரு கோடி ரூபாயில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் பயன் பெறுகிற அளவுக்கு, இந்த மாதம் 15-ஆம் தேதியிலி ருந்து தலைக்கு ரூபாய் நூறு கட னாகத் தரப்படும். அதனை அவர்கள் ஆகஸ்டு மாதத்திலி ருந்து மாதம் பத்து ரூபாய் வீதம் கட்டினால் போதுமானது என்ற அறிவிப்பினையும் தருகின்றேன்!

### ஏர் இந்தியா

வருகின்ற ஜூன் திங்களில் ஏர் இந்தியாவின் பணி தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவேறுகின்றன. அகில உலக நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இது சாதாரண மானதுதான். உலகத்தில் 18வது இடத்தைப் பெறுகிறது.

ஏர் இந்தியா, ஆடவர், பெண்டிர் உட்பட ஏறக்குறைய 10,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிறது. 1971-72-ல் 79·92 கோடி ரூபாய் தேடியுள்ள இந்த நிறுவனம், 81·58 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது.

### தீத் தடுப்பு

நல்ல நாகரிக வாழ்வில், தீத்தடுப்புப் படையினரின் தொண்டு மிக மிகத் தேவைப்படுகிறது. தமிழ்நாடு, உத் தரப் பிரதேசம், அரியானா, மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்களில் மாநில அரசினரின் பொறுப்பில் உள்ள இந் தப் படை மராட்டியம், குசராத், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் நகராட்சியின் நிருவாகத்திலுள்ளது.

சென்னையில் மட்டும் 13 தீத்தடுப்பு நிலையங்களும் பல்வேறு சிறிய நகரங்களிலெல்லாம் சேர்த்து 47 நிலையங்களும், மதுரையில் 2 நிலையங்களும் ஆகத் தமிழ் நாட்டில் மொத்தம் 62 தீத்தடுப்பு நிலையங்கள் உள்ளன.

# வருவாய்த்துறையில்...

குமார்--

விவாதத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள் வருவாய்த் துறையைக் குறை சொல்லாமல் பேசினர்கள். நிரம்பவும் நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். அதிலே அலட்சியம் காட்டினர்கள் என்று நான் கருதவில்லை. அதிகம் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. ஏனென்ருல், வருவாய்த்துறை அவ்வளவு சிறப்போடு நடக்கிறது என்று எல்லாரும் ஒத்துக்கொள்கிருர்கள் என்று கருதுகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் பேசும் பொழுது, உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று சொன்ஞர்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படிக்கும் போது உழுபவன் நிலத்தை வாங்கிக் கொள்கிற அளவிலே சட்டம் வர இருக்கிறது என்று சொன்ஞர்கள். சட்டம் வர இருக்கிறது. அதைப்பார்க்கப் போகிறீர்கள். அந்தச் சட்டம் வரும்போது அதுபற்றி விரிவாகப் பேசலாம்.

நிலம் வழங்குவதிலே குறைபாடு இருக்கிறது என்று சொல்கிருர்கள். அது எனக்குப் புரியவில்லை. சாதாரணமாக, புறம்போக்கு நிலத்தைக் கொடுக்கும் போது தவறு நடக்கிறது என்று சொல்கிருர்களா, அல்லது 1 இலட்சத்து 57 ஆயிரம் பேருக்குக் குடியிருப்பு மனை கொடுத்ததில் தவறு ஏற்பட்டது என்று கருதுகிருர்களா என்று தெரியவில்லை. 1 இலட்சத்து 57 ஆயிரம் பேருக்கு மனை கொடுத்தும்கூட, சில பேருக்கு வழங்கியதில் தகராறு இருக்கிறது.

பேசிய அத்தனை பேரும் குடியிருப்பு மனைக்கு 5 சென்ட் வேண்டுமென்று கேட்டார்கள். 3 சென்டுக்கு மேல் குடியிருப்பு மனை தேவையில்லை யென்று அரசு கருதுகிறது. இப்பொழுதே ஏராளமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இப்படிச் சொல்வதால், குடியிருப்புச் சட்டத்தின் கீழ் எவ்வளவு நிலத்தை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்களோ, அது முழுவதுமே பட்டா செய்து கொடுக்கப்படும். அது 10 சென்டாக இருந்தாலும், 3 5 சென்டாக இருந்தாலும், 3 சென்டாக இருந்தாலும், 2 சென்டாக இருந்தாலும், 1 சென்டாக இருந்தாலும் முழுவதும் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிருேம். ஆனல், புறம்போக்கு நிலத்திலே 3 சென்ட் கொடுத்தால் போதும் என்று விதிவைத்து அதற்கேற்றவாறு பிரித்துக் கொடுத்துக்கொண்டிருக்கிருேம்.

பொதுவாக, பீனல் வாட்டர் ரேட் கூடாது என்று சொன்ஞர்கள். மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா கூட பேசினர்கள். தண்டத் தீர்வை இருக்கக் கூடாது என்று பேசினர்கள். அதை விதிக்காமல் இருக்க முடியாது. அது தேவையில்லையென்றுசொன்ஞல்கீழ் ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் பாயாது. ஒரு அணை கட்டும் பொழுது, மேல் ஆயக் கட்டுக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கும், கீழ் ஆயக்கட்டுக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று திட்டம் போட்டுக் கட்டுகிருேம். தண்டத் தீர்வை விதிப்பதில்லையென்ருல், கீழ் ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் போகாமல், மேல் ஆயக் கட்டில் வைத்திருப்பவர்களுக்கே தண்ணீர் போகும். ஆகவே, கீழ் ஆயக் கட்டிலிருப்பவர்கள் பயன்படுத்தாமல் மேல் ஆயக் கட்டிலிருப்பவர்களே பயன் படுத்திக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்வது நியாயம் அல்ல. இது நீதி மன்றத்திற்குச் சென்ருல் கீழ் ஆயக்கட்டை வைத்திருப்பவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகும். ஆகவே, தண்டத் தீர்வையை எடுக்க வேண்டுமென்று சொல்வது நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். தவருகத் தண்ணீரை யார் எடுத்தாலும் நிச்சயமாகத் தண்டத் தீர்வை விதிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதில் யாருக்கும் ஆட்சேபனை தேவையில்லையென்றும் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் இராதாபுரம் பகுதியில் பெரும் பகுதி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் வரியையெல்லாம் நீக்கவேண்டும், ரத்துச் செய்ய வேண்டுமென்றும் சொன்ஞர்கள். பொதுவாக, தமிழ்நாட்டிலே இப்படி இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிருேம். எந்த எந்தப் பகுதியிலே வறட்சி நிலைமையிலாயினும் சரி, மின்சார வெட்டினலாயினும் சரி, பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்ஞல், முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிருர்கள், பஞ்சமோ, வெள்ளமோ வந்தால் எப்படிவிவசாயிகளுக்குச் சலுகைகள் அளிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட சலுகைகள் மின்சார வெட்டினல் பாதிக்கப் பட்டவர்களுக்கும் அளிக்கப்படும் என்று.

கடன் ஒத்திவைப்புப் பற்றி வலியுறுத்திச் சொல்கிருர்கள். கடனைத் திருப்பிச் செலுத்திட வசதியிருந்தாலும் அவர்களுக்கும் கடன் வசூலை ஒத்திவைக்கவேண்டுமென்றுசொல்வது சரியல்ல. ஆனல், கெடுபிடி செய்து வசூலிப்பதாக இல்லை. கெடுபிடி செய்வதாக இல்லையென்ற காரணத்திற்காகக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம், கொடுக்கத் தேவையில்லையென்ற அளவுக்கு வந்துவிடக் கூடாது.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் பேசும் பொழுது, 5 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்து, வசூலிக்க முடியாமல் இருக்கிற வரிகள் அத்தனையும் ரத்துச் செய்ய வேண்டுமென்று சொன்ஞர்களென்று கருதுகிறேன். அப்படிச் சொல்வது சரியல்ல ; அவர்கள் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். 5 பசலி, 6 பசலி செலுத்த வேண்டியிருக்குமானல், பாக்கி இருக்குமானல், இப்பொழுது நடைமுறைக்கான வரியையும், பழைய பாக்கியில் ஒரு பசலிக்கான வரியையும் சேர்த்து வசூலிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிருேம்.

முதலிலே இருக்கிற பாக்கியில் ஒரு பசலி வரி, கரன்ட் பசலிக்கான வரி, இரண்டையும் சேர்த்துத் தொகை வசூலித்தால் போதும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. எல்லாவற்றையும் சேர்த்து வசூலிக்க வேண்டாமென்று சொல்லியிருக்கிறேன். இது விவசாயிகளுக்குச் சலுகையாக இருக்கும். ஆகவே, அவர் அதை வற்புறுத்தத் தேவையில்லையென்று சொல்லிக் கொள்கிறேன்.

கடனுக்கு, வட்டிக்கு வட்டி போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது எனக்குப் புரியவில்லை. இதை, திரு பொம்மன் அவர்கள் தெரிவித்தார்கள். வட்டிக்கு வட்டி கேட்பதில்லை. ஐ.எம்.எஸ் லோனோ, தக்காவி லோனோ வாங்கி இருப்பார்களானால், அந்தக் குறிப்பிட்ட தேதியன்று அதைக் கட்டியாக வேண்டும். அடுத்த நாள் கட்டினால் கூட, ஒரு வருடத்திற்கான வட்டியையும் சேர்த்துக் கட்டவேண்டுமென்று முன்பு ஏற்கெனவே உத்தரவு இருந்தது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அதனால், அதை மாற்றி எத்தனை மாதம் பொறுத்துக் கட்டுகிறார்களோ அத்தனை மாதத்து வட்டியை வாங்கினால் போதும், ஒரு நாளைக்காக ஒரு வருடத்து வட்டியை வாங்க வேண்டாம் என்று தெரிவித்து இருக்கிறோம். அது விவசாயிகளுக்குச் சலுகையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய வருமான வரியை ரூ. 5,000 ஆக இருப்பதை மேலும் அதிகமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்தார்கள். உண்மையை ஒத்துக் கொண்டு ஒன்று சொல்கிறேன். ஏற்கெனவே இருந்த அரசு விவசாய வருமானத்தின்மூலமாக எவ்வளவு வரும் என்று எதிர்பார்த்தார்களோ, அதைவிடக் குறைவாகத் தான் இப்பொழுது வருமானம் வருகிறது. அவ்வளவு சலுகைகளைக் கொடுத்திருக்கிறோம். நாம் கொடுத்திருப்பது ஏராளம். பொம்மன் அவர்களும் மற்ற நண்பர்களும் பேசும்பொழுது மத்திய அரசினுடைய விவசாய வருமான வரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த விவசாய வருமானத்தை, இன்கம் டாக்சுக்கு, ஸ்லாப் ரேட்டுக்குக் கணக்கில் சேர்க்கப் போகிறோம் என்று அவர்கள் சொன்னால், மறைமுகமாக விவசாய வருமானத்திற்கு வரிபோல் ஆகும் என்று ஒத்துக்கொள்கிறேன். ஆனால், பெரும்பாலும் இன்கம்-டாக்ஸ் கொடுப்பவர்களைத்தான் பாதிக்கும்.

ஆனால், அவர்கள் கணக்கு வைக்கவேண்டும். கணக்கை வைக்கவேண்டாம் என்று தமிழக அரசு சொல்லிற்று. ஆனால், மத்திய அரசு உத்தரவுப்படி கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு வருமானம் என்பதற்குத் தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரையில் கணக்கு வைக்கவேண்டியதில்லை. என்ன பயிர் வைக்கிறார்களோ, அதற்கு ஏற்றவாறு, ஸ்டாண்டர்டு ஏக்கர்களாக மாற்றி அதன் மீது வரி கட்டினால் போதும் என்று சொன்னோம். ஆனால், மத்திய அரசு போட்டிருப்பதில் கணக்கு வைக்கவேண்டுமென்பது இப்பொழுதிருக்கிறது. முன்பு விவசாயிகள் போராட்டத்தின்போது, தமிழக அரசு கணக்கு கேட்கலாமா, இதைச் செய்யலாமா, என்று சொன்னவர்கள் இப்பொழுது என்ன பேசுகிறார்களோ எனக்குத் தெரியாது.

நிரந்தரமாகப் பட்டா வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது புரவிசனல் பட்டா அளித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். விரைவிலே நிரந்தரமான பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில மாவட்டங்களைப் பிரிக்கவேண்டுமென்று சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இராமநாதபுர மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இது நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற கோரிக்கை. இதிலே அரசியல் புகுந்து விடுகின்ற காரணத்தினால் யார் ஆட்சியிலே இருந்தாலும் பிரிப்பது கஷ்டமாகப் போய்விடுகிறது. எல்லாக் கட்சியினரும் ஒத்துக்கொண்டால் செய்வதிலே கஷ்டம் இருக்காது. இராமநாதபுரத்தைப் பிரிக்க வேண்டுமென்றால் சிலர் விருதுநகர்தான் இருக்கவேண்டுமென்று சொல்வார்கள், சிலர் சிவகங்கைதான் இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். இப்படிச் சில அரசியல் ஆகிவிடும்.




பப்ளிக் டிரஸ்டுகளின் கீழ் 20 ஸ்டான்டர்டு ஏக்கருக்குமேல் பயிர்செய்யக்கூடாது என்று இருந்தாலும் சிலர் அதற்கு மேல் பயிர் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். எவ்வளவு நிலம் பயிர் செய்யலாம் என்று ஏற்கெனவே உத்தரவு இருக்கிறது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு புதிதாக எதையும் அனுமதிக்கவில்லை. பழைய அரசு இருந்த பொழுது இரண்டு பேர்களுக்கு அனுமதி கொடுத்திருந்தார்கள். அவர்கள் அதிகமாக உழுது கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றிக் கூட அரசு இப்பொழுது ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பப்ளிக் டிரஸ்டுகளின் கீழ் 20 ஸ்டான்டர்டு ஏக்கருக்கு மேல் இருந்தாலும் அதை ஆதரைஸ்டு ஆபிசர்ஸ் எடுத்துக் கொடுப்பதற்குச் சட்டத்தின் மூலமாக வழி இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீபாதம் பற்றிச் சொன்னார்கள். அதிலே சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறேன். அது புறம்போக்கு நிலமில்லை. ஸ்ரீபாதம் நிலம் யாருக்கு இருக்கிறதோ அவர்களுக்கே அடமானம் செய்து கொடுக்கிறோம். அடுத்த நாளே நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும். அதனால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். புறம்போக்கு நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதைப் பொறுத்த வரையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே எந்த விதத் தகராறும் இல்லாமல் பிரித்துக் கொடுத்திருக்கிறோம். எங்காவது தகராறு இருந்தால் அதைப்பற்றித் தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அதிக நேரம் பதில் சொல்ல விரும்பவில்லை. எல்லா உறுப்பினர்களும் பாராட்டியிருக்கிறார்கள். எனவே வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன்; நன்றி!

(தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1—4—1973-ல் வருவாய்த் துறை பற்றிய விவாதத்திற்கு அளித்த பதிலுரையிலிருந்து.)

# தமிழகத் தொழில் வளம்

தமிழகத்திலே என்ன என்ன முறையிலே தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் மாண்பு மிகு அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற முறையிலே இந்த ஆண்டு ஏராளமான விவரங்களை, ஒவ்வொரு துறையும் எப்படி எப்படிச் செயல்படுகின்றது என்ற விவரங்களையெல்லாம் கொடுத்திருக்கின்றோம்.

இந்தத் தொழில் துறை, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்காகவும் தொடர்ந்து நம்முடைய கொள்கையைச் சரிவர நிறைவேற்றுகின்ற முயற்சிகளிலே ஈடுபட்டு இருக்கின்ற முயற்சிகளுக்காகவும் இந்தத் தொழில் துறையைச் சேர்ந்த அரசு அலுவலாளர்களுக்கெல்லாம் நம்முடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் வளர்ச்சியைக் காட்டுகின்ற சில புள்ளி விவரங்கள், தமிழகம் கொஞ்சம் கூடப் பின் தங்கவில்லையென்பதைக் காட்டுகிறது. திரு பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல மின்சாரம் எந்த அளவுக்குத் தொழில் வளர்ச்சிக்கு அதிகமாகப் பயன்படுகிறது என்று நமக்குத் தெரியும். 1966—67-லே, 1,273 மில்லியன் யூனிட் மின்சாரம் தொழில்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. 1971—72-லே, 2,852 மில்லியன் யூனிட் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போல், இன்டஸ்டிரியல் புரடக்சன் இன்டெக்ஸ் என்ற முறையிலே கணக்கெடுத்துப் பார்த்தாலும் 1967—67-ல் 148·1 ; 1972-ல் 192·5 ; அதேபோல் மொத்தம் தொழில் வளர்ச்சிக்குத் தமிழ் நாட்டிலே, தொழில் துறைக்குக் கொடுத்திருக்கக் கூடிய பங்கு 1966—67-லே 275.18 ; 1971—72-லே 379.15.

அதேபோல் நம்பர் ஆப் யூனிட்ஸ், 1971-ல் 19 ஆக இருந்தது 1972-ல் 50 ஆக ஆகியிருக்கிறது. அதேபோல் லெட்டர் ஆப் இன்டண்ட் 67-ல் 15 என்று தொடங்கி, சென்ற ஆண்டில் 71 என்ற அளவுக்கு வந்திருக்கிறது. அதைப்போலவே வங்கிகளிலே 277·97 இலட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டிருந்தன. 71-லே 467.5 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பெருகி இருக்கிறது.

ஐ. டி. பி. ஐ. அது பைனான்சியல் கார்ப்பரேஷன்—அவர்களுடைய உதவியும் இந்திய நாட்டிலேயே இரண்டாவதாக நம்முடைய மாநிலம் இருக்கக் கூடிய முறையிலே 3,042 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பெறப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேசன் மூலமாக ஏராளமான கடன் உதவிகளைச் செய்கிறோம். கூட்டுறவுத்துறையின் மூலமாக, கோவாப்ரேடிவ் இன்டஸ்ட்ரியல் பேங்க்ஸ் மூலமாக 67-லே 17 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. சென்ற ஆண்டு 41 இலட்சமாக ஆகி இருந்தது. இந்த ஆண்டு 39 இலட்சமாக ஆகியிருக்கிறது. இவை எல்லாவற்றையும்விட நாம் கூட்டுறவுத் துறையிலே 133.59 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்கிறோம். இன்னும் 201.91 கோடி ரூபாய்க்கான திட்டங்களை நாம் மத்திய அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறோம் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே நாம் தொழில் வளர்ச்சியிலே பின்தங்கி விட்டோம் என்பது சரியான ஒரு வாதம் இல்லை. சிறிய சிறிய தொழில்களைப் பொறுத்தவரையிலே 66-லே 10,431 ஆக இருந்தது. 72-லே 28,990 என்ற அளவிற்கு இரண்டு மடங்குக்கு மேலாக வளர்ந்திருக்கிறது. தொழில் வளர்ச்சி என்பதையும் மறுக்க முடியாது என்று கருதுகிறேன்.

கைத்தறிக்கு இயற்கையாகப் பல சங்கடங்கள் இருந்தாலும், மின் வெட்டின் காரணமாக அதிகமான தொல்லைகள் சேர்ந்திருக்கின்றன. நூல் பிரச்சினையைப் பற்றி இங்கே எல்லாரும் கவலை தெரிவித்தார்கள். இந்த அரசாங்கத்தின் சார்பிலே எல்லாரும் சேர்ந்து ஒரு தீர்மானம் போட்டு அனுப்பினோம். அதன் அடிப்படையிலே ஸ்டேச்சுட்டரி கன்ட்ரோல் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்தது. அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த முறையை உடனடியாக நிறைவேற்றக் கூடிய முறையில் வேகம் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மத்திய அமைச்சரிடத்திலே நேரடியாகச் சந்திக்கும்பொழுது சொன்னேன். டெல்லிக்குத் தொலைபேசி மூலம் பேசும் பொழுதும் குறிப்பிட்டேன். அதைப்பற்றி உடனடியாக முடிவு செய்ய வேண்டும். என்ன கொள்கையின் அடிப்படையில் முடிவு எடுக்க வேண்டுமென்பதுதான் முக்கியம்.

மத்திய அரசு கொடுத்தது, மாநில அரசு எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதைத்தான் நாங்கள் தெளிவாகச் சொன்னோம். மத்திய அரசாங்கத்திற்கும் அந்த அதிகாரம் கிடையாது ; டெக்ஸ்டைல் கமிஷனருக்கும் அந்த அதிகாரம் கிடையாது. இரண்டுமே தவறு.

அவர்கள் வாலண்டரியாகக் கொடுக்கிறார்கள். அது நம்முடைய தேவையில் பத்தில் ஒரு பங்குக்குக் கூடப் போதாது. நம்முடைய மாநில அரசு, கொள்கையிலே எவ்வளவு தெளிவாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஹாங்க் யார்ன் 20,000 பேல்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. இதுதான் நாங்கள் மத்திய அரசிலே கொடுத்திருப்பது. அகில இந்திய அளவிலே எவ்வளவு குறைவு என்று எடுத்துக் கொண்டாலும் அந்த அளவிற்கு மாநில அரசும் ஏற்றுக் கொள்ளத் தயராக இருக்கிறது. மொத்தப் பற்றாக் குறையை நீக்கிவிட்டு எங்கள் தேவைக்கு ஏற்ப, புரப்போர்ஷனேட் ஆகக் கொடுத்து விடுங்கள் என்றுதான் சொல்கிறோம். வாலண்டரி ஸ்கீமாக வைத்தால் டெக்ஸ்டைல் கமிஷனர் ஏதாவது சொல்வார், கொடுத்தாலும் கொடுக்கலாம், கொடுக்காமலும் இருக்கலாம். அதை மாற்றியமைத்து மாநில அரசின் இடத்திலேயே பொறுப்பைக் கொடுங்கள், இங்கே நாமே நம்முடைய அலுவலர்களைப் போட்டுக் கணக்கு எடுக்கிறோம். உங்கள் மாநிலத்திற்கு எவ்வளவு தேவை என்பதைக் கண்டறிந்து எவ்வளவு புரப்போர்ஷனேட்டாக வருகிறதோ அதைக் கொடுங்கள் என்று கேட்கிறோம். அதை நாங்கள் வாங்கி, தாலுகா வாரியாக, ஒவ்வொரு முக்கியமான கைத்தறி சென்டரிலும் கொடுக்கிறோம் என்று சொன்னோம்.

தொழிற்சாலைகள் பெருக வேண்டுமென்ற கருத்தை எல்லாரும் ஆதரிக்கிறோம். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அருமையான கருத்தைச் சொன்னார்கள். கடந்த சில, ஆண்டுகளாக மத்திய சர்க்கார் ஒரு புதுத் தொழிலைக் கூட, மத்திய சர்க்கார்த் துறையிலே தமிழ்நாட்டிற்குத் தரவில்லை என்பது வருந்துவதற்குரிய செய்தியாகும். அதை நாம் எல்லாரும் மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டும். எப்படியாவது இந்த நான்கைந்து ஆண்டுக் காலத்திலே செய்ய முடியாத திட்டங்களையெல்லாம் இனிமேலாவது, வருகின்ற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது பல தொழிற்சாலைகள் தமிழகத்திற்கு வர வேண்டும். இதிலே கட்சி வேறுபாடு இருக்க முடியாது. தமிழகத்திற்கு வந்தால் பலன் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி நடத்தும் மத்திய சர்க்காரினுடைய தொழிற்சாலைகளிலே அந்தந்த மாநிலத்திலே உள்ளவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டுமென்ற கருத்தை, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் வலியுறுத்தினார்கள். அது மிகவும் வரவேற்கத் தக்கது. இதற்காக, மற்ற மாநிலத்திற்குக் கொடுக்கவே கூடாது என்று சொல்லவில்லை. தமிழகத்திலுள்ளவர்கள் மற்ற மாநிலங்களுக்குச் செல்லக்கூடாதுஎன்பதும் கருத்து அல்ல. அவர்களும் அப்படிக் கருதியிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், எந்த மாநிலத்திலே மத்திய சர்க்காரின் தொழிற்சாலைகள் நடக்கின்றதோ அவைகளில்அந்த மாநிலத்திலுள்ளவர்களுக்கு அதிக வாய்ப்பைத் தர வேண்டுமென்பது நியாயம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைச் செய்ய வேண்டுமென்றால் அதற்கு ஒரேயொரு பரிகாரம்தான் இருக்கிறது. அவர்கள் சில புள்ளி விவரங்களைக் கொடுத்தார்கள். நான் அந்தப் புள்ளி விவரங்களுக்குள் போக ஆசைப்படவில்லை. முற்றிலும் அவர்கள் சொன்னது உண்மை. இருந்தாலும் இதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்றால், ஒவ்வொரு மாநிலத்திலேயும் உள்ள மத்திய சர்க்காரின் தொழிற்சாலைகளில் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்—அரசைச் சேர்ந்தவர்கள் அல்ல—மாநிலத்தைச் சேர்ந்தவர்களை மத்திய சர்க்காரின் அலுவலர்களாகத், தலைமைப் பொறுப்பிலே போட்டால்தான் இதற்கு விடிவு ஏற்படும். பரிகாரம் ஏற்படும். இல்லாவிட்டால் இதுவரையிலும் இருக்கும் சிக்கல்கள் தொடர்ந்திருந்து கொண்டேதான் இருக்கும் என்று கருதுகிறேன். இதை மத்திய சர்க்கார் கருத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.




முந்திரித் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். சிக்கலானதுதான். முந்திரித் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் முந்திரிக் கொட்டையை வெளி மாநிலத்திலிருந்து, வெளிநாட்டிலிருந்து பெற்றுத் தர வேண்டும். நாம் நமது கொள்கையைத் தெளிவாக்கியிருக்கிறோம். ஒன்று மத்திய சர்க்காரின் தொழில் துறையிலே கொடுத்து இதைக் கொடுத்து விடுங்கள் என்று சொல்வது, அல்லது மாநிலத்திலும் மத்திய அரசின் அலுவலகத்தை அமைத்து அதன் மூலம் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் மாநிலத்தின் குறை மத்திய அரசுக்குத் தெரிய வாய்ப்பு இருக்கும். மூலப் பொருள்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதைத் தொடர்ந்து வலியுறுத்த விரும்புகிறேன். இப்பொழுது சொன்னதைப் போல, முந்திரித் தேவை 1,23,750 டன். சுமார் 120 தொழிற்சாலைகள் குமரி மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்திலும் இருக்கின்றன. ஆனால், 29,000 டன்கள் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இது எந்த அளவிற்கு உற்பத்தியைப் பாதிக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு. என்ன வளர்ச்சி வேண்டுமென்றாலும் மூலப் பொருள்கள் கிடைக்காவிட்டால் அந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சி வளராது என்பதற்காக இந்த ஒரு உதாரணத்தைச் சொன்னேன்.

இன்னொரு உதாரணம் சொல்கிறேன். நம்முடைய தமிழகத்தில் 'அயர்ன் அண்ட் ஸ்டீல்' அடிப்படையில் ஏராளமான தொழிற்சாலைகள் வளர்ந்திருக்கின்றன. இன்சினியரிங் இன்டஸ்ட்ரீஸ், ஆட்டோமொபைல் இன்டஸ்ட்ரீஸ்-ல் இந்தியாவிலேயே நாம் முதலிடம் வகிக்கிறோம். நமக்குத் தேவையான அயர்ன் அண்ட் ஸ்டீல் 1971–72-க்கு 1,49,984 டன். ஆனால், கொடுத்தது

39,433 டன். 1972—73-க்கு 1,58,285 டன் தேவை. ஆனால் கொடுத்தது 32,459 டன். அடுத்து, 'மட்டன் டேலோ'. 1972-ஆம் ஆண்டுக்கு நமக்குத் தேவை 6,000 டன். ஆனால் கிடைத்தது 1,284 டன். அடுத்த படியாக, 'பாரபின் வேக்ஸ்' 1972-ஆம் ஆண்டுக்குத் தேவை 8,000 டன். ஆனால் கொடுத்தது 3,500 டன். 'காஸ்டிக் சோடா' 1972-ஆம் வருடத் தேவை 12,000 டன். ஆனால் கொடுத்தது 389 டன் ஆகவே, மூலப்பொருள் கொடுப்பதிலே மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது என்று கூடச் சொல்ல மாட்டேன். கொள்கையை எடுத்து, ஒவ்வொரு மாநிலத்திலும் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களைக் கொடுப்பதற்கு முன்வந்தாலொழிய தொழில் வளர்ச்சி குன்றும் நிலை தொடர்ந்து நீடிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழில் வளர்ச்சிக்குத் தீவிரமான முயற்சிகளை எடுத்திருக்கிறோம். பின் தங்கிய மாவட்டங்களாகப் பல மாவட்டங்களை அறிவித்திருக்கிறோம். இவைகளில் சில பகுதிகளை எடுத்து, தனிச் சலுகை 10 சதவிகிதம் இனமாக, 'கிராண்ட்'. டாகத் தொழில் துவங்குவதற்குத் கொடுத்து முயற்சியெடுக்கிறோம். ஆகவே தொழில் வளர்ச்சியிலே மாநில அரசைப் பொறுத்தவரையில் சுற்றுச் சூழ்நிலை, 'இன்ப்ரா-ஸ்ட்ரக்சர் பெசிலிடீஸ்' இவைகளைத் தான் உருவாக்க வேண்டும். உருவாக்குகிறோம்.

எந்தெந்தத் துறையிலே தொழில் வளரவேண்டும். இது வாதப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை. நான் தனியார் துறை வேண்டுமென்றும் சொல்ல விரும்பவில்லை, எல்லாம் பொதுத்துறையிலேயே இருக்க வேண்டுமென்றும் சொல்லவில்லை என்னைப் பொறுத்தவரையில். நமது அரசைப் பொறுத்தவரையில், எப்படியாவது தொழில் வரவேண்டும் இந்தத் தமிழ்நாட்டிற்கு. எங்களுடைய 'ப்ரேக்மாடிக் பாலிசி'யைக் சிலரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை; முதலாளிகளின் கையாட்கள், முதலாளிகள் கொழுப்பதற்குப் பயன்படுகிறது என்று சொல்கிறார்கள். ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்பதைப் போல் பேசுவது சுலபம். ஆனால் உண்மையில் அகில இந்திய அளவிலே

## அணுயுகம் எப்போதிலிருந்து . . .

இந்தக் காலத்தை அணுயுகம், அணுயுகம் என்கிறார்கள். அணுசக்தியைப் பற்றித் திட்டவட்டமான முடிவு-அதாவது அணுசக்தியைக் கட்டுக்குள் அடக்கி முறையாக வெளிப்படுத்த முடியும் என்பது 1942-ஆம் ஆண்டு டிசம்பர் 2-ஆம் நாள் தான் உறுதியாயிற்று. இந்த நாளிலிருந்து தான் அணுயுகம் தொடங்கியது.

எந்தத் தொழில்கள் எந்தெந்தத் துறையிலே வளர வேண்டுமென்று திட்டமிட்டு முடிவெடுத்தாலொழிய இதற்குப் பரிகாரம் இல்லை. என்னுடைய கவலையைப் பகிரங்கமாக அங்கத்தினர்களுக்குச் சொல்வதைப் பற்றிக் கவலையில்லை. இந்திய அரசாங்கத்தின் சார்பில், எந்தத் துறையானாலும் பொதுத்துறை தான் என்று தெரிவித்தால் மறுநாளே தமிழகத்தில் நடத்தப்பட்டு வரும் தொழிற்சாலைகள் பல நிறுத்தப்படும். நாம் கேட்பதெல்லாம், அகில இந்திய அளவிலே தொழிற் கொள்கையைத் தெளிவாகச் சொன்னாலொழிய நாம் மட்டும் முட்டிக் கொள்வதால் தொழில் வளர்ச்சி குன்றும்.

உ.பி.யைப் பற்றிச் சொன்னார்கள். அதைத் கூடத்தெரிந்து கொண்டு பேசலாம். அல்லது கேள்வியாகக் கேட்கலாம். உடனே இந்த அமைச்சருக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிடுகிறார்கள். உ.பி.யில் அனுமதி கொடுத்திருப்பது எல்லாம் சில மில்களை, சரியாக இயக்கமுடியாமல் மோசமான நிலையில் இருக்கும் சர்க்கரை ஆலைகளை எடுப்பதற்கு அனுமதி கொடுத்தார்கள். அனுமதி கொடுக்கவேண்டுமென்பதுகூட அல்ல. அதை ஒரு கொள்கையாக, இனிமேல் தனியார் துறையில் சர்க்கரை ஆலைகள் இல்லை யென்று தெரிவித்தால் நாம் அதை ஏற்றுக் கொள்ள முடியும். இதிலே நாம் மட்டும் முடிவு செய்துவிட்டால் பிறகு சர்க்கரை ஆலைகள் பிற மாநிலங்களுக்குக் போகக் கூடிய சூழ்நிலைதான் ஏற்பட்டு விடும்.

மால்கோ தொழிற்சாலையைப் பொறுத்தவரை திரு சுரேந்திரன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தத் தொழிற்சாலையை ஏன் எடுக்க வேண்டும். மூல காரணங்கள் என்ன, பின்னணி என்ன, இந்த அரசைப் பொறுத்தவரை தமிழகத்து மக்களைப் பொறுத்தவரை அது எவ்வளவு தேவையானது என்கிற புள்ளி விவரங்கள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் அவர்கள் சொல்லமாட்டேன் என்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை அலுமினியத் தொழிற்சாலை அத்தியாவசியமான தொழிற்சாலை, பல தொழிற் சாலைகளுக்கு மூலப் பொருள்களைத் தரும் தொழிற்சாலை தமிழ்நாட்டில் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கு நாம் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட தொழிற்சாலை மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்றால் அது பொதுத் துறையில்தான் இருக்க வேண்டுமென்று நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது. இதை மாண்புமிகு அங்கத்தினர்கள் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

பின்தங்கிய பகுதியில் தொழில் வளர வேண்டுமென்ற முறையிலே முதன் முதலிலே மத்திய அரசாங்கம், ஒரு மாவட்டத்தை மட்டும் எடுத்து 10 பர்சன்ட் சப்சிடி கொடுக்க முன்வந்தது. நாம் கேட்டுக் கொண்டதன் மூலம் இரண்டு மாவட்டங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு மூன்று மாவட்டங்களைச் சேர்த்து இணைத்திருக்கிறது. அவர்கள் இரண்டு மாவட்டங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இரண்டு மாவட்டங்களையும் நான்கு மாவட்டங்களுக்கு இணைத்து ஒரு தொடராக எங்கெங்குப் பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன என்று அனுப்பியிருக்கிறோம். அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் விரைவாகத் தொழில் வளர வாய்ப்பு இருக்கிறது.

தொழிலுக்கு அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படக் கூடாது. ஹண்டே அவர்கள் ரீஜினல் ஆபீஸ் வேண்டுமென்று கேட்டார்கள். நானும் வரவேற்கிறேன். ஆனால், அதனால் பயன் கிடைக்குமென்று நம்பத் தயாராக இல்லை. மனுக்களை டெல்லிக்கு அனுப்புவதற்குப் பதிலாக இங்கேயே கொடுத்து விடலாம். ஆனால், இதிலே முடிவு எடுப்பதிலே ஏற்படும் காலதாமதம் தான்பயங்கர மானது.

டயர் பாக்டரி வேண்டுமென்று ஓராண்டுக்கு முன்னுல் அனுமதி கேட்கப்பட்டது. நேற்றுத்தான் அமெரிக்காவில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு அனுமதி கிடைத்துவிட்டாலும் உற்பத்தி செய்வதற்கான வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவு ஆகியவை கிடைக்க முடிவு எடுப்பதில் கால தாமதமாகிறது. ஓராண்டுக்கு முன்னுல் முயற்சித்து நேற்றுத்தான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறுர்கள். 'எந்தெந்தத் துறையில் தொழில்களைத் தொடங்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லிவிடுங்கள். ஒரு பக்கம் மொனுபலி கூடாது என்று சொல்லுகின்றீர்கள். அதே சமயத்தில் தொழிற்சாலைக்கு அனுமதி கொடுப்பதில் தெளிவான கொள்கை இல்லாமல் இருக்கிறீர்கள். மொனுபலி ஹவுஸஸ் முழுவதும் அவர்களிடம் இருப்பதன் காரணமாக, அந்த ஆற்றல் காரணமாகத் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு இருப்பதன் காரணமாக அவர்களுக்குத் தடைபோட வேண்டுமென்ற கொள்கையை எடுத்தால், அவற்றை நாமே நடத்தினுல் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புக் கிடைக்கும்' என்ற கருத்தைச் சொன்னுர்கள்.

அடுத்து, வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவு பெறுவதில், காலத்தை விரயமாக்காமல் இந்திய நாடு முழுவதற்கும் எந்தத் தொழில் நுட்ப அறிவு டெக்னிகல் நோஹௌ எந்தத் தொழிலுக்குத் தேவைப்பட்டாலும் அதை மத்திய அரசாங்கமே முடிவு செய்து, ஜப்பானைப் போல் உலகத்தில் எந்த நாட்டிலே—முன்னேற்றம் அடைந்த நாடுகளிலே தொழில் நுட்ப அறிவு இருக்கிறதோ அதை இந்திய அரசே பெற்றுத் தருவதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டும்' என்று முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறுர்கள். அதைப் பற்றியும் மத்திய அரசு திட்டவட்டமாக முடிவு எடுக்கவில்லை என்றுல், தொழில் நுட்ப அறிவில் நாம் பின்தங்கித்தான் இருப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் இந்தத் தொழில்களைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமென்ற முறையில் பல்வேறு நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னெரு நிறுவனத்தை நம்முடைய அரசின் சார்பில் ஏற்படுத்தவும் திட்டம் இருக்கிறது. மத்திய அரசின் நேஷனல் இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் போல் தொழில் தொடங்குபவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காகத் தனி நிறுவனம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அது வருமானுல் இன்னும் அதிக அளவில் பயன்படும்.

தொழில் வளர்ச்சியோடு வேலையில்லாத்திண்டாட்டம் பற்றியும், எந்த அளவுக்குச் சேர்த்துப் பரிசிலிக்க வேண்டுமென்பதை நான் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. தமிழக அரசின் சார்பில் 1971—72-ல் 48 இலட்சம் ரூபாய்க்குச் சிறு தொழில்களைத் தொடங்கி வேலை இல்லாதவர்களுக்குப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றினும். 1972—73-ல் 70 இலட்சம் ரூபாய் அளவுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவருகிறேம். புதிதாக வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தடுப்பதற்காக, புதிதாக வேலை கொடுக்க 14 கோடி ரூபாய்க்குத் திட்டங்களை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறேம். அதெல்லாம் வருமானுல் பெரும்பாலும் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்று நம்புகிறேன்.

தருமபுரி மாவட்டத்திலே சில்க் உற்பத்திக்காக 25,000 ஏக்கரில் மல்பரி உற்பத்தி செய்ய ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 387 இலட்சம் ரூபாய் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்காகத் திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறேம். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகப் போடப்பட்டுள்ள ஆயிரம் கோடி ரூபாய்த் திட்டத்திலே இதையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேம்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆங்காங்குக் கிராமங்களில் தொழில் தொடங்க வருகின்றவர்களுக்கு — வியாபாரத்திற்குக்கூடப் புதிய திட்டத்தை உருவாக்கித் தருமபுரி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம், வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் அரசாங்கக் காரண்டியுடன் ஸ்டேட் பாங்கியில் 5,000 ரூபாய் கடன் பெற்றுச் சிறிய தொழில்கள் செய்ய முன்வருகின்றவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் முறையில் புதிய முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை தொழில்களுக்கு அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுத்துவதைத் தவிர்க்கப் புதிய முயற்சி ஒன்றை எடுத்துக் கொண்டிருக்கிறேம். ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரியைப் போட்டு எல்லா இலாகாவிலிருந்தும் அனுமதி பெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அவரே மேற்கொண்டு அந்த அனுமதியைப் பெற்றுத் தரும் வண்ணம், ஹெல்த் டிப்பார்ட்மெண்ட்டானுலும், டவுன் பிளானிங் இலாகாவானுலும் எல்லாவற்றையும் அவரே அணுகி அனுமதியை விரைவில் பெற்றுத் தரும் முயற்சிக்காகப் புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறேம். அதிலே வெற்றி அடைய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கைத்தறித் துறைக்கு எதுவுமே செய்யவில்லை என்ற வாதம் ஓரளவு தொனித்தது. நான் ஒரு புள்ளி விவரத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசு இந்தத் துறைக்காக 1967—68-ல் கொடுத்தது 118 இலட்சம் ரூபாய். 1973—74-ல் 249·82 இலட்சம் ரூபாய் இதற்காக நாம் செலவழிக்க முன் வந்திருக்கிறேம். என்ரோல்மென்ட் ஆப் அடிஷனல் லூம்ஸ் 1967—68-ல் 3,522 ; 1973—74-ல் 5,000 ; பங்குத் தொகை உதவி 1967—68-ல் 2·16 இலட்சம் ரூபாய். 1973—74-ல் 6 இலட்சம்

**வாழ்க்கையில் வெற்றி**

தனக்குள்ள திறமையை மனிதன் பயன்படுத்தாவிட்டால் வாழ்க்கையில் தோல்வி அடைகிறுன். தன் திறமையில் பாதியை மட்டும் அவன் பயன்படுத்தினுல் வாழ்க்கையில் ஓரளவு தோல்வி அடைகிறுன். தன் திறமையை முழுதும் அவன் பயன்படுத்தினுல் வாழ்க்கையில் பெரும் வெற்றி அடைகிறுன். பலருக்கும் கிடைக்காத திருப்தியும், வெற்றிப் பெருமிதமும் சிலருக்குக் கிடைப்பதன் இரகசியம் இதுதான்.

—தாமஸ் உல்ஃப்

ரூபாய்; கூட்டுறவுத் துறை மூலம் கைத்தறித் துறைக்குக் கொடுக்கப்பட்ட உதவி வங்கிகளின் கடன் (பாங்க் க்ரெடிட்) 1967—68ல் ஸ்டேட் சொசைடிகளுக்கு மட்டும் 100 இலட்சம் ரூபாய்; 1973—74-ல் 375 இலட்சம் ரூபாய்; பிரைமரி சொசைடிகளுக்கு 1967—68-ல் கொடுக்கப்பட்டது 286 இலட்சம் ரூபாய்; 1973—74-ல் 525 இலட்சம் ரூபாய். கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு சப்சிடி இன்டிரஸ்ட் 1967—68-ல் 10 இலட்சம் ரூபாய்; 1973—74-ல் 13 இலட்சம் ரூபாய். ரிபேட் உதவித்தொகை 1967—68ல் 84 இலட்சம் ரூபாய். 1973-74-ல் 150 இலட்சம் ரூபாய். எப்படிக் குறைவு என்று தெரியவில்லை. இரண்டு மடங்குகளுக்கு மேலாக உதவி செய்கின்ற வாய்ப்பு உருவாக்கி இருக்கிறோம்.

இவற்றையெல்லாம் செய்ததோடு தொழில் வளர்ச்சி பெற வேண்டுமென்றமுறையில்சென்ட்ரல் ப்ராஜக்ட்ஸ் ஏராளமாக வரவேண்டும். பினான்சியல் இன்ஸ்டிடியூசன்கள், நிதி உதவி செய்யக்கூடிய நிறுவனங்கள் தென்பகுதியை நோக்கி வந்தால்தான் ஏராளமான தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். தமிழகம் தென் மாநிலங்களுக்குத் தலைநகரமாக விளங்குகிறது என்று மத்திய அரசாங்கத்திடம் தொடர்ந்து எடுத்துக் கூறி வருகிறோம். ஐ.டி.பி.ஐ., ஐ.எப்.சி. ஐ.எஸ்.சி. போன்ற நிறுவனங்கள் தமிழகத்திற்கு வரவேண்டும்; சென்னையில் அமைக்கப்பட வேண்டும்; அப்போதுதான் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியும்.

ஒரு கோடி ரூபாய்க்குள் உள்ள தொழில்களை நாமே தொடங்கி விடலாம். மத்திய அரசாங்கத்தை என்ன கேட்பது என்று திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கேட்டார்கள். அவர்களை ஏன் கேட்கிறீர்கள், நீங்களே ஆரம்பித்து விட்டு, பிறகு ராடிபை செய்து கொள்ளட்டுமே என்று கூறி அந்த அளவுக்கு மாநில சுயாட்சிக் கருத்துக்கு ஆதரவு காட்டியதற்காக நன்றி. அனுமதி பெறுவது என்பது ஒரு கட்டந்தான். அதற்குப் பின்னால் வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டுச் தொழில் நுட்ப உதவி ஆகியவற்றைப் பெறுவதிலே தயக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் கொள்கை அளவில் இந்திய அரசு எந்தெந்தத் தொழில்கள் எந்தெந்த மாநிலங்களில், எந்தெந்தத் துறையில் ஆரம்பிக்க வேண்டும், என்று முடிவு செய்து அதற்கு வெளிநாட்டுச் செலாவணியை ஒதுக்கினால்தான் ஒவ்வொரு மாநிலத்திலும் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும்.

இந்த அரசாங்கம் தொழில் துறையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதையும், எந்த அளவிற்குப் பணத்தை ஒதுக்கியிருக்கிறோம் என்பதையும் தெளிவாக அறிவித்திருக்கிறேன். 1966—67-ல் இந்த அரசு தொழில் துறையில் போட்ட முதலீடு 126 இலட்சம் ரூபாய். சென்ற ஆண்டு 236 இலட்ச ரூபாய். இந்த ஆண்டு 203 இலட்சம் இதுபோன்று இரண்டு மடங்காக ஒதுக்கியிருக்கிறோம். இந்த அரசு பொதுத் துறையிலும் சரி, கூட்டுறவுத் துறையிலும் சரி நாம் வைத்திருக்கிற கொள்கை தனியாருக்கு இலாபம் செல்லாமல் பொதுமக்களுக்கு இலாபம் வரவேண்டும். இதுதான் கொள்கை.

> தன்னம்பிக்கைதான் வாழ்க்கையின் அடிப்படை; ஆனால் நடைப்பிணமாக வாழும் அவல நிலையும் கூடாது. தன்னைப் பற்றிப் பெரிதாக நினைத்துக் கொண்டு அளவற்ற தற்பெருமையோடும் வாழக் கூடாது. இரண்டுமே கெடுதல்.
>
> —ஜான்பிரெய்ன்

இதுவரையில் தனியாயாருக்கு இலாபம் சென்று கொண்டிருந்தது. அதைத் தடுக்க முதலில் நாம் கூட்டுறவுத் துறைக்கு வந்தோம். அதன் விளைவு பொதுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் சென்ற 1967 முதல் 72 வரை 1,639 இலட்ச ரூபாய் நாம் முதலீடு செய்திருக்கிறோம். ஆகவே, இந்த அளவுக்கு நம்முடைய முயற்சிகள் இந்த நாட்டு மக்களுக்கு இலாபம் தரக் கூடிய அளவிற்குச் செயல்படுகிறது. இதை யாரும் மறுக்க முடியாது. இதை எண்ணிப் பார்க்கவேண்டும். 67 வரை இதில் போட்ட முதலீடு 78 இலட்ச ரூபாய்தான். ஆகவே, இந்த அரசாங்கம் கொள்கை ரீதியாக எந்த அளவுக்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

அதுபோல, கூட்டுறவுத் துறை. இதில் ஈடுபட வேண்டாம் என்று பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். எங்களுக்கு இதில் ஈடுபட வேண்டுமென்று அக்கறையில்லை. ஆனால், இவ்வளவு முன்னேற்றம் கூட்டுறவுத் துறையில் வருவதற்குக் காரணம் நாம் எடுத்துக் கொண்ட கொள்கையாகும். இதை நாம் மட்டுமல்ல மத்திய அரசாங்கமும் இதைக் கொள்கை அளவிலே எடுத்துக் கொண்டு இந்தக் கூட்டுறவுத் துறையில் 26 சதவிகிதம் அரசுக்கும், 25 சதவிகிதம் தனியாருக்கும், அதற்கு மேலே உள்ளதெல்லாம் பொது மக்களுக்கும் அரசு நிறுவனங்களுக்கும்தான் கொடுக்க வேண்டுமே தவிர எந்தத் தனியாருக்கும் கொடுக்கக் கூடாது என்ற ஒரு கொள்கையை வைத்திருக்கிறார்கள். அதை தான் நாமும் செயல்படுத்திவருகிறோம். இதை நாம் ஊக்கிவிப்பதற்கு காரணம், நாம் நடத்துகின்ற பொதுத் துறையில் மற்றும் கூட்டுறவுத் துறையில் இலாபம் வருகிறது. இதுவரையில் நாம் தனியார்க்குக் கடன்களாகக் கொடுத்தோம். இன்றைக்கு அதற்குப் பதிலாக முதலீடு செய்து இலாபம் பெறுகிறோம். அதைவிட முக்கிமானது ஒன்று. நாம் இந்தத் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறோம். அதோடு அவைகளில் உற்பத்தி செய்கிற மூலப் பொருட்களைத் தமிழகத்தில் எல்லாருக்கும் சரியாக விநியோகிக்கப்படுகிறதா என்று பார்ப்பதற்கும் நமக்கு வசதி இருக்கிறது. மேலும், எப்படிக்கொடுப்பது என்பதற்கு ஒரு குழு போடவும் யார் தேர்ச்சிப் பெற்றவர்கள், ஆற்றல் பெற்றவர்கள் என்று பார்த்து வேலை வாய்ப்புக் கொடுக்கவும் இதனால் நமக்கு அதிகாரம் இருக்கிறது. இப்படிப்பட்ட வசதிகள் நமக்குக் கூட்டுறவுத் துறையில் இருக்கிறது. இவ்வளவும் செய்து அந்தக் கூட்டுறவுத் துறை தவறு செய்தால் சட்டப்படி அதை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே, இதில் எந்தத் தவறுமில்லை. ஆகவே, இந்தத் துறையில் தொழில் வளர்ச்சி பெருகி வருவதற்கு எல்லாரும் ஊக்கம் தருவதற்கு நன்றி கூறி இந்த மசோதாவை ஏகமனதாக ஆதரிக்க வேண்டுமென்றும், வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[தமிழகச் சட்டப் பேரவையில் 12—3—1973-ல், தொழில் துறை பற்றிய விவாதத்திற்கு அளித்த பதிலுரையிலிருந்து]

# அறியாமை அகன்றிட



# அரசின் அரும்பணிகள்

அறியாமைஇருளிலிருந்து மக்கள் விடுபடவும், அவர்கள் எழுத்தறிவு பெற்று ஏற்றம் பெற்றிடவும் தமிழக அரசு கல்வித் துறையில் அதிக அக்கறை காட்டி, ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகிய 1973–74-ஆம் ஆண்டில் கல்விக்காக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 99 கோடியாகும். வரவு-செலவுத் திட்டத்தில் மற்ற எல்லாத் துறைகளையும் விடக் கல்வித் துறைக்கே அதிகத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதை நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

கல்வித் துறையில் அரசு ஆற்றும் பணிகள் பலப்பல; அவற்றுள் ஒரு சிலவற்றைத் தெரிந்து கொள்வோம்.

இந்த நாட்டில், எழுத்தறிவை ஊட்டுவதிலும் கல்விக்காகச் செலவு செய்வதிலும் முன்னணியில் நிற்கும் மாநிலங்களுள் நமது தமிழகமும் ஒன்றாகும். 14 வயது வரை சிறுவர் அனைவருக்கும் தொடக்க நிலைக் கல்வியை இலவசமாக அளிக்க வேண்டுமென்ற அரசியல் சட்ட நெறிமுறைக் கோட்பாட்டினை நிறைவேற்றுவதில், தமிழகம் முன்னணியில் நின்று தலைசிறந்த பணியாற்றி வருகிறது. நாடு அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், தொடக்க நிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகிய பிரிவுகளில் கல்வித்துறை, அனைவரும் வியக்கத் தக்க அளவுக்குப் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

இம்மாநிலத்தில் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 1956–57-ஆம் ஆண்டில் 32·91 இலட்சமாக இருந்தது. 1972–73-ஆம் ஆண்டில் 74·36 இலட்சமாக உயர்ந்தது. அது போலவே, 1956–57-ஆம் ஆண்டில் 1·08 இலட்சமாக இருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1972–73-ஆம் ஆண்டில் 2·34 இலட்சமாக உயர்ந்தது. 1956–57-ஆம் ஆண்டில் 894 உயர்நிலைப் பள்ளிகளே இருந்தன. இந்த எண்ணிக்கை 1972–73-ஆம் ஆண்டில் 2,763 ஆக உயர்ந்துள்ளது.

• • •

கல்லூரிக் கல்வியில், மாணவர்களின் எண்ணிக்கையும் கல்லூரிகளின் எண்ணிக்கையும் வெகுவாக உயர்ந்துள்ளன. 1961–62-ஆம் ஆண்டில் கல்லூரிகளின் எண்ணிக்கை 59. அது 1972–73-ஆம் ஆண்டில் 176 ஆக உயர்ந்துள்ளது. அதே போல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் 1961–62-ஆம் ஆண்டில் சுமார் 45,000 ஆக இருந்தது. 1972–73-ஆம் ஆண்டில் சுமார் 2 இலட்சமாக உயர்ந்துள்ளது.

மொத்தத்தில் வரவு-செலவுத் திட்டத்தில் கல்விச் செலவு 1956–57-இல் ரூ. 15 கோடியாக இருந்தது. ஆண்டொன்றுக்கு 45 விழுக்காடு வீதத்தில் படிப்படியாகப் பெருகி 1973–74-ஆம் ஆண்டில் சுமார் ரூ. 100 கோடியாக உயர்ந்துள்ளது.

• • •

தமிழகத்தில் உள்ள தொடக்கப் பள்ளிகளிலும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களில், ஏழைக் குழந்தைகளான, சுமார் மூன்றில் ஒரு பங்கினருக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டம் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டப் பெரிதும் உதவியுள்ளது. அரிசன நலத் துறையினால் அரிசன நலப்பள்ளிகளில் நண்பகல் உணவு வழங்கப்படும் மாணவர்கள் நீங்கலாக, தற்பொழுது ஆண்டு தோறும் 17 இலட்சம் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. 1973–74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 218 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துடன், 'கேர்' நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 கோடி மதிப்புள்ள உணவுப் பொருள்களை இலவசமாக வழங்குகிறது.

தமிழகத்தில் மூன்று மாவட்டங்களில் மையச் சமையற் கூடத் திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், மையமானதோர் இடத்தில் உணவு சமைக்கப்பட்டுப் பள்ளிகளுக்குக் கொண்டு செல்லப் படுகின்றது. 44 மையச் சமையற் கூடங்கள் செயல்படுகின்றன. மேலும் 21 கூடங்கள் விரைவில்தொடங்கும்; 26 கட்டப்பட இருக்கின்றன.

முதல் மூன்று வகுப்புகளில் பயில்வோரும் நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும், எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் சுமார் 12 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர்; 1973–74-ஆம் ஆண்டிலும் இத் திட்டம் தொடரும்.

• • •

ஊராட்சி ஒன்றியங்களைச் சேராத பகுதிகளில் தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்டும் வகையில் நகராட்சிகளுக்கும், தனியார் பள்ளி நிறுவனங்களுக்கும் மானியம் வழங்குவதற்காக ரூ. 3·45 இலட்சமும், அரசினர் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டும் செலவுக்காகச் சுமார் ரூ. 8 இலட்சமும் 1973–74-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. 1973-74-ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காகச் சமுதாய வளர்ச்சிப் பணிகள் வரவு-செலவுத் திட்டத்தில், ரூ. 92·27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து ரூ. 50 இலட்சம் வழங்கப்படும்.

தமிழ் நாட்டில் மொத்தம் சுமார் 32,000 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இவற்றுள் சுமார் 22,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன.

இந்த மாநிலத்தில் உள்ள சுமார் 2,700 உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்கு 1973–74-ஆம் ஆண்டில் ஆகும் மொத்தச் செலவு ரூ. 29 கோடியாகும்.

1973–74-ல், 14–17 வயதுப் பிரிவைச் சேர்ந்த 40,000 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கவும், கூடுதலாக 375 ஆசிரியர்களை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

• • •

அறிவியல் சாதனங்களை வாங்குவதற்கும், ஆய்வுக் கூடங்கள் அமைப்பதற்காகவும் (கருவிகள் வாங்க ரூ. 15,000, ஆய்வுக்கூடக் கட்டடங்களுக்கு ரூ. 25,000) உயர்நிலைப் பள்ளிகளுக்கு உதவி மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயற்படுத்துகிறது. இந்தத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 800 உயர்நிலைப் பள்ளிகள் பயனடைந்துள்ளன. இத்திட்டம் 1973–74-லும் தொடரும். இதற்கு ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 40 உயர்நிலைப் பள்ளிகள் பயனடையும்.

தற்போது உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியற் கருவிகளும் கொண்டுள்ள இரு ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் இயங்குகின்றன. ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஒன்று என்னும் வீதத்தில் மேலும் 12 ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் வாங்கப்படும்.

• • •

1973–74-ல், 'அறிவியல் பொருட்காட்சி' என்ற புதியதொரு திட்டம் கொண்டுவரப்படும். இத்திட்டத்தின் கீழ் உயர்நிலைப் பள்ளிகள் சிறப்பான அறிவியற் கல்வியை விளக்கக் கூடிய அறிவியல் சங்கங்களையும், பொருட்காட்சிகளையும் அமைக்கும். இத்திட்டம் 1973–74-ல் இரண்டு மாவட்டங்களில் தொடங்கப்படும். பின்னர் அது ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும். இந்தப் பொருட்காட்சிகளில் கலந்துகொள்ளும் பள்ளிகள், அவற்றிற்காகும் செலவைப் பகிர்ந்து கொள்ளும். அரசு இணை மானியம் வழங்கும்.

• • •

எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் நல்ல நூலகங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் இதுவரையில் 1,388 பள்ளிகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1973–74-ல் மேலும் 200 உயர்நிலைப் பள்ளிகளில் நூலகங்கள் அமைக்க, பள்ளிக்கு ரூ. 500 வீதம் மானியம் வழங்கப்படும்.

• • •

கல்வி விளக்கப்படங்கள் (Audio-visual Education) மூலம் கல்வி கற்பிக்கப்படுவதற்காக 180 படச்சுருள்களும் 500 துண்டுப் படச்சுருள்களும் (Film Strips) வாங்கும் பொருட்டு 1973–74-ல் ரூ. 1 இலட்சம் செலவிடப்படும். இதனால் கல்வி விளக்கத் திரைப்படச் சுருள் தொகுப்பில் பழையனவற்றுக்குப் பதிலாகப் புதியவை இடம் பெறும்.

**கடைநிலை ஊழியர்க்கு வீட்டு வசதித் திட்டம்**

மாதம் ரூ. 200-க்குக் குறைவாக ஊதியம் பெறுகின்ற கடைநிலை ஊழியர்களுக்கு வாடகை முறையில் வீடளிக்கும் திட்டத்தை விரிவாக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அரசு ஊழியர் வீட்டு வசதித் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியில் 10 சதவீதம் கடைநிலை ஊழியர் வீட்டு வசதிக்கென ஒதுக்கப்படும்.

சென்னை மாநகரிலுள்ள தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள சுமார் 5,000 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்வதற்காக முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. மற்றும் வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் மருத்துவர்கள், இயல் ஊர்திகளில் சென்று, பள்ளி மாணவர்களின் உடல்நலனை ஆய்வு செய்கிறார்கள்.

• • •

குழந்தைகளுக்கான நூல்களைத் தமிழில் எழுதுவோருக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ், ஒவ்வோர் ஆண்டும், ரூ. 500-க்கு மேற்படாமல், பத்துப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசு ஆதரவளிக்கிறது. குழந்தைகளுக்கான சிறந்த நூல்களைத் தமிழில் படைப்போருக்கு 1,000 ரூபாய் மொத்தப் பரிசு வழங்கப்படுகிறது.

• • •

உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காகத் தற்போது இம்மாநிலத்தில் 28 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவர்களுக்காக 8 பள்ளிகளும், காது கேட்காத ஊமைச் சிறுவர்களுக்காக 10 பள்ளிகளும், கண், காது, வாய் ஊனமுள்ள சிறுவர்களுக்காக 2 பள்ளிகளும், உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காக 4 பள்ளிகளும், தொழுநோயால் வருந்தும் சிறுவர்களுக்காக 4 பள்ளிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் 2,700 மாணவர்கள் தற்போது பயின்று வருகின்றனர்.

• • • •

அனாதைச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யும் அனாதை இல்லங்களுக்கு, அரசு நிதி உதவி அளிக்கிறது. தற்பொழுது 380 அனாதை இல்லங்கள் அரசு நிதி உதவி பெறுகின்றன. அவற்றுள் 7 இல்லங்கள் 1972–73 முதல் நிதி உதவி பெறுகின்றன. இவற்றின் வாயிலாகக் கிட்டத்தட்ட 63,000 அனாதைச் சிறுவர்கள் பயன்பெறுகின்றனர்.

• • • • •

1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 31.4 சதவீதம் ஆகும். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இது 39.39 சதவீதமாக உயர்ந்தது. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஆண்களில் 51.68 சதவீதத்தினரும், பெண்களில் 26.83 சதவீதத்தினரும் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தனர். எழுத்தறிவின்மையைப் போக்குவதற்காக 22 முதியோர் கல்வி நிலையங்கள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

குடியானவர் கல்வி—தொழில் எழுத்தறிவுத் திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி ஆகிய இடங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சை வட்டத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும் நடத்தப்பட்டது. இத்திட்டம், 1972—73-ஆம் ஆண்டில், தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் கொண்டுவரப் பட்டது.

• • • •

நூலகச் சட்டம் இயற்றி, நூலக இயக்கத்திற்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் ஒரு சில மாநில அரசுகளுள் தமிழ்நாடு அரசும் ஒன்றாகும். தற்போது இம்மாநிலத்தில் மாவட்ட மத்திய நூலகங்கள் 13-ம், கிளை நூலகங்கள் 1,437-ம், புத்தகம் வழங்கும் நிலையங்கள் 1,882-ம் உள்ளன. இயங்கும் நூலகப் பணி, புத்தகங்களை இல்லங்களில் கொண்டு தரும் பணி, சிறுவர்கள், மகளிர் ஆகியோருக்கான நூலகப் பணி, சுற்றுலாப் பயணிகளுக்கான நூலகப்பணி, கைதிகளுக்கான நூலகப் பணி, காவல் துறைப் பணியாளர்களுக்கான நூலகப் பணி, மருத்துவ மனை நூலகப் பணி ஆகிய பணிகளை மாவட்ட நூலக மன்றங்கள் செய்து வருகின்றன.

• • • •

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், கல்லூரி மாணவர்களுக்காக இது வரையில் 457 புத்தகங்களை வெளியிட்டுள்ளது. தற்போது 50 நூல்கள் அச்சில் உள்ளன. நாடு முழுவதும் இந்தி உட்பட எல்லா வட்டார மொழிகளிலும் 1971 டிசம்பர் 31 முடிய வெளியிடப்பட்ட கல்லூரிப் பாட நூல்கள் 652 தான். இதனோடு ஒப்பிட்டால் தமிழ்நாட்டுச் சாதனை குறிப்பிடத் தக்கதாகும். மேலும் 546 புத்தகங்களை எழுத, பாடநூல் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. இந்நிறுவனம் இதுவரை வெளியிட்டுள்ள நூல்களுள் 328 மூல நூல்களாகும். 129 மொழி பெயர்ப்புக்களாகும்.

• • • •

சட்டக் கல்லூரி மாணவரின் எண்ணிக்கை 1966—67-ல் 1,045 ஆக இருந்தது. 1972—73-ல் சுமார் 2,500 ஆக உயர்ந்துள்ளது. சட்டப் படிப்பில் சேர்வதற்கான ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில் 1966—67-ல் மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டன. 1972—73-ல் மாலை நேர வகுப்பு மாணவரது எண்ணிக்கை 660 ஆகும். பட்ட (மேற்படிப்பு எம்.எல்) வகுப்புகள் 1969—70-ல் தொடங்கப்பட்டன. தற்போது இந்த வகுப்புகளில் சுமார் 40 மாணவர் உள்ளனர்.

• • • •

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 10 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (3,368 மாணவர்கள்) செயல்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை 30 ஆக (9,59 மாணவர்கள்) உயர்ந்தது. தற்போது 31 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (13,112 மாணவர்கள்) உள்ளனர்.

கல்வித் தர உயர்வு நடவடிக்கை மையமாகச் செயல்படவும் மாவட்டத் தலைமை இடத்துக்கு வரும் ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்கு என்று 1970—71-ல் வேலூரில் ஆசிரியர் இல்லம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர்கள் தாமாகவே திரட்டிய வசூலோடு மாநில அரசு ரூ. 50,000 மானியம் வழங்கியது. உதகமண்டலத்தில் ஆசிரியர் இல்லம் ஒன்று கட்டுவதற்கு ரூ. 1 இலட்சம் மானியம் தரப்பட்டுள்ளது. கோடைக்கானலிலும் ஆசிரியர் இல்லத்திற்கு மானியம் அளிப்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

---

# வளரும் சுற்றுலா!

1972–ஆம் ஆண்டின் இறுதி ஆறுமாத காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த பயணிகளின் எண்ணிக்கை 1971-ஆம் ஆண்டில் இதே காலத்தில் வந்த வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையை விட 25·5 சதவிகிதம் அதிகமாகும். 1971–ஆம் ஆண்டில் மொத்தம் 3 இலட்சத்து 42 ஆயிரத்து 950 வெளி நாட்டுப் பயணிகள் இந்தியாவுக்கு வந்தனர். இதற்கு முந்திய ஆண்டில் இந்தியாவுக்கு வந்த வெளி நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 3 இலட்சத்து 995.

ஒருங்கிணைந்த முறையில் சுற்றுலாவுக்கான இடங்களை வளரச் செய்வதற்கான திட்டம் தற்போது அமல் நடத்தப்பட்டு வருகின்றன. கோவளம் கடற்கரை, அனைத்துலகத் தரத்தின்படி ஓர் உல்லாசக் கடற்கரைப் பகுதியாக அமைக்கப்பட்டு வருகிறது.

ஐ. நா. வளர்ச்சித் திட்டத்தின் கடற்கரைப் பகுதி வளர்ச்சி ஆய்வுக் குழு, கோவளம், மாமல்லபுரம், கோவா ஆகிய இடங்களிலுள்ள கடற்கரைப் பகுதிகளை எவ்வாறு மேலும் வளரச் செய்வது என்பது பற்றி ஆராய்ந்து வருகிறது.

1972-ஆம் ஆண்டில் விமானப் போக்குவரத்தும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. பரிசீலனை ஆண்டில் இந்திய விமானங்கள் 31 இலட்சத்து 59 ஆயிரத்து 245 பயணிகளைப் பல்வேறு இடங்களுக்கு ஏற்றிச் சென்றுள்ளன. கடந்த ஆண்டைவிட இந்த எண்ணிக்கை 24 சத விகிதம் அதிகமாகும். இதே காலத்தில் பல்வேறு விமானங்கள் பறந்த மொத்தத் தூரம் கடந்த ஆண்டை விட 7·3 சதவிகிதம் அதிகமாகும்.

# 10,000 குடும்பங்கள் பயன்பெறும் பட்டுத் தொழில்

பட்டு என்றதும் நமக்குப் 'பட்'டென்று நினைவுக்கு வருவது பளபளக்கும் பாங்கான பட்டாடைகளே !

இந்த ஆடைகளை அணிவதற்கு அடிப்படையாக விளங்குவது பட்டுதொழில். இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் தமிழக அரசின் செயற் திட்டங்களைத் தெரிந்து கொள்வோம்.

பட்டுத் தொழில் ஒரு வேளாண்மைத் தொழிலாகும். தருமபுரி மாவட்டத்தில் ஓசூர், தேன்கனிக்கோட்டை வட்டங்கள், கோயம்புத்தூர் மாவட்டம், கோபி வட்டத்தில் தாளவாடி பிர்க்கா, சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்களின் சிறு பகுதிகள் ஆகிய இடங்களில் உழவர்கள் இத்தொழிலை ஒரு துணைத் தொழிலாகவே செய்து வருகின்றனர்.

பட்டுப் புழுக்களுக்குத் தேவையான முசுக்கொட்டை மரங்களைப் பயிரிடுதல், பட்டுப்புழு உற்பத்தி, பட்டுப்புழு வளர்ப்பு பட்டுப்புழுக் கூடு உற்பத்தி, முடிவாகப் பட்டுப்புழுக் கூட்டினின்று கச்சாப் பட்டுப் பிரித்தெடுத்தல் போன்றவை இத் தொழிலில் அடங்கும். தற்பொழுது 3,501·48 ஹெக்டேர் நிலத்தில் முசுக்கொட்டை மரங்கள் பயிராகின்றன, 10,000 குடும்பங்கள் இத் தொழிலைச் செய்து வருகின்றன.

கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பை அளிக்கும் இத் தொழிலை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், முசுக்கொட்டை மரம் நடுவதற்கான பதியன்களைப் பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்கு இலவசமாக வழங்குதல், பெயரளவு விலைகளில் சிறு புழுக்களை வழங்குதல், கிணறுகள், வெட்டுவதற்காகக் கடன் வழங்குதல், உதவித் தொகை வழங்குதல், பட்டுப் புழு வளர்ப்புக் கொட்டகைகள் கட்டுதல், ஈடுசெய் விலைகளில் பட்டுப் புழு வளர்ப்பதற்கான கருவிகளை வழங்குதல் போன்ற பல திட்டங்களைத் தொழில் — வணிக இயக்குநர் 'அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இத்துடன், பட்டுப் புழுக்களை வளர்த்தல் குறித்துப் புதிய தொழில் முனைவோர்களுக்கும், மக்களுக்கும் கற்றுக் கொடுப்பதற்காக இம்மாநிலத்தில் 10 செய்முறை விளக்கப் பண்ணைகள் உள்ளன. பட்டுப் புழு வளர்ப்போர் பெருமளவில் பயனடைவதற்காக அவர்களுக்குச் சிறு பட்டுப் புழுக்களை வழங்குவதற்காக 7 பட்டுப் புழுப் பண்ணைகள் உள்ளன. இவை தவிர இம்மாநிலத்தில் உள்ளூர் இனப் புழுக்கூடுகளை உற்பத்தி செய்வதற்காக அண்மையில் 4 ஆரம்ப விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் பட்டுப் புழு வளர்ப்போரின் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஓசூரில் ஒன்றும், தாளவாடியில் மற்றொன்றுமாக இரண்டு பட்டுப்புழுக் களஞ்சியங்கள் (முட்டை உற்பத்தி செய்யப்படும் நிலையங்கள்) உள்ளன. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப் புழுக் கூடுகளை வாங்குவதற்காக 5 பட்டுப்புழுச் சந்தைகள் உள்ளன. ஓசூரில் உள்ள அரசு பட்டு வளர்ப்புப் பிரிவிலும் தாளவாடியிலுள்ள கூட்டுறவுப் பட்டு வளர்ப்புச் சங்கத்திலும், இக்கூட்டுகளினின்று நூல் பிரித்தெடுக்கப்பட்டு பட்டாக மாற்றப்படுகிறது. முசுக்கொட்டை மரம் பயிரிடுவது ஆதாயமான தொழிலாக உள்ள வட ஆர்க்காடு, கடலூர், சேலம், தென் ஆர்க்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் அதிக உயரமில்லாத பகுதிகளில் வாழும் விவசாயிகள் அண்மையில் இத்தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

இத் தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்காகத் தருமபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசு தரிசு நிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான திட்டம் ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இது வரை குத்தகைக்கு வழங்குவதற்காக 6,000 ஏக்கர் நிலம் சமப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 1,000 ஏக்கர் நிலத்தில் முசுக் கொட்டை மரம் பயிரிடப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முடிவில் சுமார் 10,000 ஏக்கர் அளவுக்கு முசுக்கொட்டை மரங்களைப் பயிரிடுவது என்ற இலக்கை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

1971 மார்ச்சுத் திங்களில் குன்னூரில் ஆராய்ச்சி வளர்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்நிலையம் பட்டுப் புழு இனப் பெருக்கச் சோதனைகளை ஏற்கெனவே நடத்தத் தொடங்கிவிட்டது. சுமார் 8 சிறந்த சேர்க்கை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன ; அண்மையில் இவை, களச் சோதனைகளில் பயன்படுத்தப்பட்டன. இவை, அதிக அளவு பட்டுப் புழு உற்பத்தி செய்வதற்கும், தரமான பட்டுப்புழு வளர்ப்புக்கும் ஏற்றவையாகும் ; கோயம்புத்தூர் மாவட்டத்தின் அதிக உயரமல்லாத பகுதிகள், வெப்ப மண்டலங்கள் ஆகியவற்றுக்கு இவை ஏற்றதாகும்.

புதிய முசுக்கொட்டை மர வளர்ப்புப் பண்ணைகளைத் தொடங்குதல், தருமபுரி, சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் முன்னோடி வளர்ச்சி நிலையங்களை ஏற்படுத்துதல், ஓசூரில் உள்ள கலப்பினப் பட்டுப் புழுக்களஞ்சியத்தை விரிவுபடுத்துதல், பேரிகை, தளி, வாணியம்பாடி ஆகிய இடங்களில் புழுக் கூடு சந்தைகளைத் தொடங்குதல், ஓசூரில் பட்டுத் தொழில் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் தொடங்குதல், பத்ணுபுரத்தில் பட்டுப் புழு இன வளர்ச்சி இல்லம் ஒன்று ஏற்படுத்துதல், ஆசனூரில் உள்ள பட்டு வளர்ப்பு இல்லத்தை மேம்படுத்துதல் ஆகிய வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றை 1973–74-ஆம் ஆண்டில் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

வாழ்க்கை வாழ்வதற்காகவும் இருக்கலாம், பிறரை வாழ் விப்பதற்காகவும் இருக்கலாம் என்பதற்கு ராதை—நர்மதா இருவரின் வாழ்க்கையுமே சான்று.

ராதையின் தியாகம் நர்ம தாவின் மணவாழ்வுக்கு வழி செய்துள்ளது. நர்மதாவின் நன்றியுள்ள நெஞ்சம் ராதை யின் சட்டப் படிப்புக்கு வழி செய்துள்ளது. ஒருவருக்கொரு வர் செய்து கொண்டிருக்கும் உதவிக்கும் சேவைக்குமிடையே மணிவாசகன் சாட்சிப் பொரு ளாக மட்டுமே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறுன்; அவனைச் சம் பந்தப் படுத்தியோ அவன் சம்மதம் பெற்றே இரண்டு பெண்களும் செயல்படவில்லை.

இது, அவன் ஆற்றலுக்கும், அறிவுச் செருக்குக்கும் விழுந் திருக்கும் அடியல்லவா?

'செண்பகா மில்ஸ்' முதலாளி அவனுக்கு வேலை தரத் தயங்கு கிறுர்; அதே ஆலையில் நர்மதா —டாக்டர் நர்மதா, எம்.பி. பி.எஸ்., கம்பெனி டாக்டராக வேலை பார்க்கப் போகிறுள்; அவள் பெறும் மாதச் சம்பளத் தில் இவனுடைய மாமன் மகளைப் படிக்கவைக்கப் போகிறுளாம்!

எத்தனை பெரிய அவமானம் இது .. அவன் சம்பாத்திய சக்திக்கு விழுந்துவிட்ட சுருக்குக் கயிறு.

# உலகில் இரண்டு கிளிகள்



டி. என். ஜி. சுப்பிரமணியன்

## 11. குமாரி ராதா

'' ராதா! ''

—புலியின் உறுமல் வந்த திசை நோக்கித் திரும்பிப் பார்க்கிறுள் ராதை. பொங்கி வரும் ஆவேசம் அலைமோதும் அனல் விழிகளோடு நிற்பவன் மணிவாசகன்.

எந்தவிதப் பெரிய பிரச்சினை களுமே பிறந்துவிடவில்லை என் பதைப்போல் முகத்தை மலராக மாற்றிக் கொண்டு, புன்முறுவல் பூத்து வரவேற்க முனைகிறுள் ராதை.

ஒளி படைத்த கண்களும் உறுதிகொண்ட நெஞ்சமுமாக நிமிர்ந்து நிற்கிறுள் நர்மதா. மணிவாசகனின் குரலில் ஏற் பட்டிருக்கும் கோபத்தை அவள் பொருட்படுத்தவில்லை.

மீண்டும், '' ராதா !'' என்று அழைக்கிறுன் மணிவாசகன்.

'' என்னத்தான்?''

'' ஆலை முதலாளி முத்தையா, எனக்கு வேலை தர முடியாது என்பதை எப்போது சொன் ஞர்? ''

'' தரமுடியாது என்று சொல்ல வில்லை அத்தான். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தான் சொல்லியிருக்கிறுர் ''

'' அவர் அப்படித் தயங்கு வதற்கு என்ன அர்த்தம்? என்ன அவசியம் ஏற்பட்டது? ''

'' என்னைக் கேட்டால்? '' .

'' நானே சொல்கிறேன் ... பாண்டித்துரையின் மருமகன்— ராதையின் வருங்காலக் கணவன் என்ற முறையில் தான் அவர் எனக்கு வேலை தரும் எண்ணத் தோடு இருந்திருக்கிறுர் '' என்று மணிவாசகன் கூறியதும் ராதை கலகலவெனச் சிரிக்கிறுள்.

'' சிரிக்காதே! '' என்று சீறு கிறுன் மணிவாசகன்.

'' என்னுல் சிரிக்காமல் இருக்க முடியவில்லை அத்தான். ஒரு ஆலையின் சட்ட ஆலோச கனுக நியமிக்கப் படுவதற்கு ராதையின் கணவன் என்ற ஒரு தகுதி மட்டும் போதுமா? ஒரு பெண்ணின் தயவினுல் தான் உத்தியோகம் கிடைக்க முடியு மென்னும் தலையெழுத்து, என் அத்தானுக்கு என்றும் கிடை யாது. இது எனக்கு நன்ருகத் தெரியும்! நீங்கள் அனுவசிய மாகக் குழம்ப வேண்டாம்....'' முத்தையா மாமாவிடம் நான் பிறகு பேசிப் பார்க்கிறேன். முதலில் உங்கள் திருமணக் காரியங்களைக் கவனியுங்கள்'' என்று துரிதப்படுத்துகிறுள் ராதை.

'' ராதா இது என்னுடைய கௌரவப் பிரச்சினை.. ..! வேலையா? விவாகமா? இந்த முடிவு தெரியாமல் கல்யா ணத்தைப் பற்றிப் பேசுவதில் கூட எனக்கு விருப்பமில்லை '' என்கிறுன் மணிவாசகன்.

'' உங்கள் திருமணத்தைப் பற்றி, இன்னும் பேசித் தீர்த்துக் கொள்ள, என்னதான் பெரிய பெரிய பிரச்சினைகள் வந்து விடப் போகிறதோ! '' என்று அங்கலாய்க்கிறுள் ராதை.

அவளுக்கு மறுமொழி கூருமல் நர்மதாவையே ஆழ்ந்து நோக்கு கிறுன் மணிவாசகன். என்ன அலட்சியம் அவளுக்கு! - செண்

பகா மில்லில் மணிவாசகனுக்கு வேலை தரத் தயங்குகிறார்கள் என்பதைக் கேட்டதும், அதிர்ச்சியடையவில்லை, ஒரு கணம் கூட அவனுக்காக அனுதாபப்படவில்லை; கொஞ்சங்கூடத் தயங்காமல் '' அதே ஆலையில் 'கம்பெனி டாக்டராக' நான் பணி புரியப் போகிறேன் '' என்று கூறும் அளவுக்கு என்ன திமிர் இருக்க வேண்டும் இவளுக்கு.... தன் கணவனின் கஷ்ட நஷ்டங்களுக்காகக் கலங்காமல், அவனுக்கு வரவிருக்கும் இழப்புகளுக்காக வருந்தாமல், அவனுடைய இழப்புகளைத் தன் உயர்வுக்கான ஏணிப்படிகளாக்கிக்கொள்ள நினைக்கும் இதயம்—ஒரு பெண்ணுக்கு இருக்கலாமா? ராதைக்கு, இந்த நர்மதையைப் போல் சுயகாரியப்புலியாக இருக்கத் தெரியுமா? என்ற கோபம் மணிவாசகனின் இதயத்துள் குடிக்கொள்ளத் தொடங்குகிறது.

இந்த நிலைமையை நீடிக்க வைப்பது பெரிய ஆபத்தில் கொண்டு போய் விட்டுவிடும் என்று ராதையின் உள்ளம் உணர்த்துகிறது....மணிவாசகனை எப்படியேனும் அங்கிருந்து அமைதியாக அனுப்பி வைத்தால் போதும் என்று கவலைப்படுகிறாள். அவளுக்கு உதவி செய்வது போல் வாசலில் அழைப்பு மணி ஒலிக்கிறது.

'' அத்தான் யாரோ வந்திருக்கிறார்கள் போலிருக்கிறதே''

'' இதோ போகிறேன்.... '' என்று முணுமுணுத்த படியே வாசலுக்குப் போகிறான் மணிவாசகன்.

வாசலில் ஒருவன் நிற்கிறான். அவன் கையில் இரண்டு பெயர்ப் பலகைகள்!

'' ராதா! '' என்று வாசலிலிருந்தபடியே கூச்சல் போடுகிறான் மணிவாசகன்.

அலைகள் ஓய்வதில்லையோ!

''இப்போது என்ன புது ஆபத்து? '' என்று பயந்தபடியே வாசலுக்கு வருகிறாள் ராதை, அவளைத் தொடர்ந்து நர்மதாவும் வந்து சேருகிறாள்.

'' ராதா! உன் வேலைதானா இது?''

''எது'' என்று அப்பாவித்தனமாகக் கேட்கிறாள் ராதை. வாசலில் வந்து நிற்கும் பையனையும் அவன் கையிலிருக்கும் பெயர்ப் பலகைகள் இரண்டையும் பார்த்தவுடன் அவளுக்கு

---

**சேதங்கள் எத்தனை! எத்தனை!**

கடந்த ஆறு மாதக் காலத்தில் இரயில்வே சொத்துக்களுக்கு ஏராளமான சேதங்கள் ஏற்பட்டன. ரயில் பெட்டிகள்; ரூ. 42,18,144. மின்சாரச் சாதனங்கள்; ரூ. 85,945. சிக்னல், தகவல் தொடர்புக் கருவிகள்: ரூபாய் 13,99,949. ரயில் நிலையக் கட்டடங்கள், ரயில் பாதைச் சாதனங்கள்: ரூ. 8,51,142. ரயில் நிலைய மேசை, நாற்காலிகள், ரொக்கம், டிக்கெட்டுகள் மற்றும் பிற பொருள்கள்: ரூ. 5,81,500. சரக்குகள்: ரூ. 1,92,000.

---

ஒரு கணம் 'திக்'கென்றது. அவன் வந்த நேரம் புயல் வீசும் நேரம்.

மணிவாசகனின் அனுமதியில்லாமல் பெயர்ப் பலகை தயாரிக்க ' ஆர்டர் ' கொடுத்திருந்தாள் ராதை. கடைச் சிப்பந்தியோ நேராக மணிவாசகனிடமே கொண்டு வந்து பலகைகளை நீட்டுகிறான்!

' மணிவாசகன் எம். ஏ., பி.எல்.—வழக்குரைஞர் ' என்ற பலகை ஒன்றும்,

' டாக்டர் (மிஸஸ்) நர்மதா மணிவாசகன், எம்.பி.பி.எஸ். ' என்ற பலகை ஒன்றும் அவர்களைப் பார்த்துச் சிரிக்கின்றன.

'' உனக்கு இவ்வளவு அவசரம் கூடாது ராதா! '' என்று உரிமையுடன் கடிந்து கொள்கிறாள் நர்மதா—மிஸ் நர்மதா!

''இதிலே அவசரம் ஒன்றுமில்லை அக்கா. கல்யாணப் பரபரப்பில் உங்கள்தொழிற்பெயர்ப் பலகைகளைக் கவனிக்க மறந்துவிடுவேன்.... கல்யாண தினத்தன்று இந்தப் பலகைகளை மறவாமல் நம்வீட்டு வாசலில் மாட்டி வைக்க வேண்டும் என்றுதான் முன்னேற்பாடாக.... '' அவளால் சொல்லைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

''கல்யாணப் பரிசாகவா?'' என்று இடைமறிக்கிறான் மணிவாசகன்.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்!'' என்று கூறிவிட்டுப் பெயர்ப் பலகைகளை வெடுக்கென்று பறித்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடி மறைகிறாள் ராதை.

''இன்னொரு பெயர்ப் பலகைக்கும் ஆர்டர் கொடுக்கப் போகிறேன் ராதா!'' என்கிறாள் நர்மதா.

''யாருக்காக?'' எனக் கேட்கிறான் மணிவாசகன்.

''ராதாவுக்காக!''

''ஓ.... அவள் சட்டப் படிப்புத் தொடங்குவதற்கு முன்னால் பெயர்ப்பலகையைத் தயாரிக்கப் போகிறாயோ....! தாராளமாகச் செய்........'' என்று இடக்காகக் கூறிய மணிவாசகன், பெயர்ப் பலகைக் கடைச் சிப்பந்தியை நோக்கி, 'தம்பீ! குமாரி ராதா, பி.ஏ., பி.எல்.,! என்ற பலகை ஒன்றும் எழுதிக் கொண்டுவா !'' என்கிறான்.

''என்ன பெயரைச் சொன்னீர்கள்?'' என்று நர்மதா குறுக்கிட்டுக் கேட்கிறாள்.

''குமாரி ராதா, பி.ஏ.பி.எல்.''

''காலமெல்லாம் அவளைக் கன்னியாகவே விட்டு வைத்து விடத் தீர்மானித்து விட்டீர்களா?''

நர்மதாவின் குரலில் கொஞ்சங் கொஞ்சமாகச் சூடு பிறக்கிறது. முதலில் ராதையின் மேல் படிப்புப் பற்றித் தயக்கம்; இப்போது அவள் திருமணம் பற்றிய தர்க்கம்.... ஆண்டவனே.... புதுமணத் தம்பதிகளின் பூசலுக்கு ராதை ஒருத்தியே காரணப் பொருளாக இருந்துவிடுவாளோ....?

எதிரும் புதிருமாய் நின்றபடி ஒருவரை ஒருவர் அழுத்தமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கையில் பணத்துடன் வாசல் அறைக்குள் வந்த ராதை இருவரும் நிற்கும் நிலையைப் பார்த்ததும் தொண்டையை இலேசாகச் செருமிக் கொண்டு, ''என்னத்தான்.... வாய்ச் சொற்கள் என்ன பயனுமிலாமல்.. '' என்று குறும்பாகச் சிரித்தபடி அவர்களைக் கடந்து சென்று கடைச் சிப்பந்தியிடம் பணத்தைக் கொடுக்கிறாள்.

''ஆமாம்.... இனிமேல் வாய்ச் சொற்களுக்கு அவசியமில்லை.... காரியத்தில்தான் கண்ணும் கருத்துமாக இருக்கப் போகிறேன்.'' என்று அழுத்தமாகக் கூறுகிறான் மணிவாசகன்.

''ராதைக்குச் சட்டப் படிப்புக்கு என் பொறுப்பு'' என்கிறாள் நர்மதா.

''ராதைக்குத் திருமணம் செய்வது என் பொறுப்பு!'' என்று கூறியபடி வெளியேறுகிறான் மணிவாசகன். அவன் மனத்துள் ராதை மணமகள் ; மணமகன் யார்? மணமக்கள் கோலத்தில் ராதையும், ரோமியோவும் மகிழ்வுடன் காட்சி தருகிறார்கள்! மணிவாசகன் மனத்துள் இப்படி ஒரு இன்பக் காட்சி அலை மோதுகிறது!

## 12. மனச்சாட்சியின் மறுபிறவி

ஆலை முதலாளி முத்தையா, சென்னையிலுள்ள தமது பங்களாவில் வந்து தங்குவது வழக்கமான காரியம். அதிலும் தமது ஆருயிர் நண்பரின் மகள் திருமணம் நடக்குமென்று எதிர்பார்த்தார் ; நண்பரின் மருமகன் மணிவாசகன் திருமணம் நடக்க இருக்கிறது ! எனவே, திருமணம் முடியும் வரை சென்னையில் தங்கியிருந்தார்.

அவரது அறையின் சுவரில் ஏழ்மைக் கோலத்தில் என்றே தாமும் தம் நண்பருமாக எடுத்த போட்டோ அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

'' பாண்டித்துரை, நீ ஏமாந்துவிட்டாய் ! உன்னுடைய மகள் ஏமாந்துவிட்டாள் '' என்று சொல்லிக் கொண்டிருந்தபோது,

'' மாமா ''! என்ற குரல் கேட்டது.

கூப்பிடும் குரலில் பாசம் இல்லை ; ரோசம் இருந்தது.

வந்து நின்றவள் ராதை, ஏனோ பாண்டியன் சபைக்குள் கண்ணகி வந்து நிற்பதுபோல் உணர்ந்தார் முத்தையா....

'' ஏன் மாமா—ஆறு மாதங்களுக்கு முன் இறந்து போனது உங்கள் நண்பர் பாண்டித்துரையா ? அல்லது அவர் உங்கள் மேல் வைத்திருந்த நம்பிக்கையா ? ''

அவள் பேசியது சொல் அன்று ; கூரிய அம்பு !

ராதையின் கேள்வி அவரைச் சிந்திக்க வைக்கிறது. இத்தனை வேகத்துடன் ராதை தன் பங்களாவைத் தேடி வருவாள் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை. மணிவாசகனைத் தம்முடைய ஆலையின் சட்ட ஆலோசகனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் அவர் தயக்கம் காட்டியிருந்திருக்க வேண்டாம்.......இந்தப்பெண் ராதை இவ்வளவு பெரிய வார்த்தைகளால் தம்மைச் சாடும் நிலை—ஏன், சுட்டுப் பொசுக்கும் நிலை——வந்திருக்கவும் வேண்டாம்....

'' என்னை மன்னித்துவிடு ராதா......என் ஆலையின் சட்ட ஆலோசகன் பதவிக்கு மணிவாசகனையே நியமித்து கொள்கிறேன்.......... இது சத்தியம் ! '' என்கிறார் முத்தையா.



'' ஒரே காரியத்திற்கு எத்தனை முறை எத்தனை பேர்களிடம் உறுதிமொழி கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறீர்கள் மாமா ! '' என்கிறாள் ராதை. ஏளனம் அவள் குரலில் விம்மி வெடிக்கிறது.

'' ராதா...... என் நண்பன் பாண்டித்துரையிடம் நான் வாக்குக் கொடுத்தது உண்மை தான். மணிவாசகன் இந்த வேலைக்கு வருவானோ என்று நான் தயங்கியதும் உண்மை தான்.....ஆனால், இப்போது நானே கொஞ்சம் தயங்கிவிட்டேன் என்றால் அதற்கான காரணம் உனக்குப் புரிய வேண்டுந்தானே ! ''

'' நானே புரிந்துகொண்டு விட்டேன் மாமா. உங்கள் நண்பரின் மருமகன்—அதாவது உங்கள் நண்பர் மகளை மணந்தவன்—உங்கள் ஆலையின் நிருவாகத்துள் சட்ட ஆலோசகனை இடம் பெற வேண்டும். இதனை நீங்கள் விரும்பினீர்கள். ஒரு திறமைசாலி தேவை என்பதை நீங்கள் உணரவில்லை. அத்தான் மணிவாசகன் என்னை மணக்கவில்லை என்றதும், உங்கள் ஆலையின் உயர் பதவியை அவருக்குக் கொடுக்க உங்களுக்கு மனம் இல்லை. இது தானே உங்கள் அன்பின் எதிரொலி ''

'' உன் திருமணத்தை மையமாக வைத்துத்தான் வக்கீல் மணிவாசகனின் எதிர்காலம் மலரவேண்டும் என்று நாங்கள் முடிவுசெய்தது உண்மைதான் ராதா. ஆனால்.... ''

'' என்னை முன்னிட்டுத்தான் என் அத்தானின் எதிர்காலம் உயர்வாக அமைய வேண்டும் என்ற கட்டாயமில்லை மாமா.. என் அத்தானின் திறமையில் எனக்கிருப்பது அசைக்க முடியாத நம்பிக்கை. என் நம்பிக்கையின் உயரத்தைவிட அவரது சுய கௌரவம் இன்னும் சிகரம் போன்றது. உங்கள் உதவிகள், உத்தரவாதங்கள் அனைத்திற்கும் என் அத்தானின் சார்பில் நன்றி. வருகிறேன். வணக்கம்.... '' என்று முழங்கி விட்டுப் புயலைப் போல் அறையை விட்டுப் புறப்படுகிறாள் ராதை.

திரும்பினால் வாசல் நிலையில் தென்றல் நிற்கிறது.

அவளை இருகை நீட்டி எதிர் கொண்டழைக்கிறது, இத்தனையும் செண்பகத்தின் உருவத்தில் ! முத்தையாவின் மகள் செண்பகம்.

> காலம்
>
> காலத்திற்காகத்
> தான் கருத்துக்கள்;
> கருத்துக்களுக்
> காகக் காலமல்ல !
> காலத்திற்கேற்பக்
> கருத்துக்களை மாற்ற
> வேண்டும்; காலத்
> திற்கு ஒவ்வாத
> கருத்துக்களை ஒதுக்
> கித்தள்ளவேண்டும்.
>
> —பேரறிஞர் அண்ணா

'' ஹலோ ராதா......! எப்போது வந்தாய்........? வந்தவள் என்னைப் பார்க்காமல் நேராக அப்பாவிடம் சண்டை போடுவதற்குப் போய் விட்டாயே...... ''

'' ஆமாம்....எந்த விஷயத்தைப் பற்றி யாரிடம் சண்டை போட வேண்டுமோ அவர்களிடம் போட வேண்டும் ; உன் அப்பாவிடம்தான், உரிமையுடன் சண்டை போட முடியும்.... ''

'' சண்டையில் வென்றது யார் ? நீ தானே ? '' குறும்பாகக் குமிழ்விழும்படி சிரித்தாள் ஆலை முதலாளி மகள்.

'' நேர்மைக்கு இங்கு வெற்றியில்லை. நியாயத்துக்கு வெற்றி இங்கு இல்லை. சமயோசிதமும், சந்தர்ப்பவாதமும்தான் வெற்றி பெற்றுள்ளது. பணத்துக்குக் கிடைத்த வெற்றி, பாண்டித்துரையின் மகளுக்குக் கிடைக்கவா போகிறது ? '' என்று படபடவெனப் பொரிகிறாள் ராதை.

செண்பகத்துக்குத் திகைப்பு. இமைமூட மறந்தவள் போன்று திகைப்பு.

அவள் தன் தோழியிடம் எதிர்பார்க்கும் மறுமொழியே வேறு. ஆனால், ராதை பேசி விட்டுப் போகும் வேகமே வேறு மாதிரியாக இருக்கிறதே !

'' என்னவோ ராதா...... என் அப்பா மேல் கோபம் என்றாலும், என் கல்யாணத்திற்கு மட்டும் வராமல் இருந்து விடாதே ! '' என்று சிறு குழந்தையைப் போல் பரிதாபமாகக் கூறுகிறாள் செண்பகம்.

'' உன் கல்யாணமா ? '' என்று திகைக்கிறாள் ராதை திருமணச் சேதி கேட்டதும் அவள் கோபம் குறைந்தது. மிகவும் வாஞ்சையுடன் செண்பகத்தின் கரங்களைப் பற்றிய படி, '' என் வாழ்த்துகள் செண்பகம் '' யாரடி உன் ரோமியோ ? '' என்று கேட்கிறாள்.

'' மிஸ்டர் ரோமியோதான் என் ரோமியோ ! '' என்று நாணத்துடன் தலை குனிகிறாள் செண்பகம். பெண்மையின் அத்தனை நாணமும் அவள் முகத்தில் குடியாட்சி செய்து கொண்டிருந்தது.

'' கடல் ஆழத்தைக் காணலாம்; கன்னியரின் மன ஆழத்தைக் காண முடியாது என்பார்கள். கன்னியரின் மன ஆழத்தைக் காணலாம். அவர்கள் யாரைக் காதலிப்பார்கள் என்பதைத்தான் அறியமுடிவதில்லை இக்காலத்தில். உங்கள் திருமணம் எப்போது செண்பகம் ? ''

'' அப்பா உன்னிடம் சொல்லவில்லையா ? பின்னே இவ்வளவு நேரம் அப்பாவிடம் எதைப் பற்றிச் சண்டைபோட்டாய் ? ''

'' அது வேறு விஷயம் ''

'' உன்னிடம்கூடச் சொல்லாமல், என் திருமணத்தை முடிவு செய்து விட்டதற்காகத்தான் நீ சண்டை போட வந்திருக்கிறாய் என்றல்லவா நான் தப்பாக நினைத்து விட்டேன் ! '' என்கிறாள் செண்பகம்.

மீண்டும் தென்றலாகத் திரும்புகிறாள். கண்ணகியாகக் கண்ட உருவம் சகுந்தலை போலத் தெரிகிறது.

முத்தையாவை நோக்கித் திரும்புகிறாள் ராதை. தன் மகளும், தன் நண்பர் மகளும் மனம் விட்டுப் பேசுவதை அமைதியாக ரசித்துக்கொண்டிருந்த முத்தையா தன் மனமும் காற்றைப் போல இலேசாகி யிருப்பதாக உணர்கிறார். அவர் மனத்துள் பஞ்சுப்பொதிகளாக ஆனந்தக் குவியல்கள் மிதந்தன.

அமைதியின் உருவத்திற்கு உள்ளமாகி நின்றாள் ராதை.

'' மாமா....! உங்கள் ஆலையின் உயர்பதவி என் அத்தானுக்குத் தேவையில்லை என்று கோபமாகச் சொன்னேன். திட்டினேன். இதற்காக என்னை மன்னியுங்கள் ''

"மன்னிப்பதா ? நான் உன் கடுஞ்சொற்களை மறந்துவிட்டேன் ராதா.......... நீ என்னிடம் கோபம் கொண்டு புறப்பட்டுப் போனாலும் அந்த உயர்பதவியினை உன் அத்தான் ஒருவனுக்குத்தான் தருவது—இதுவே என் தீர்மானம்.

"என் தீர்மானத்தை நான் கூறுகிறேன் மாமா.... உங்கள் ஆலையின் உயர்பதவி என் அத்தானுக்குத் தேவையில்லை. இதை மிகவும் அமைதியாகவும், உறுதியாகவும் கூறுகிறேன். ஆத்திரத்தோடு பேசவில்லை. அன்புடன் வேண்டுதல் செய்கிறேன்."

"ராதா ?" எனத் திடுக்கிடுகிறார்.

"ஆம். மாமா.... நீங்கள் முடிவு செய்தபடி உங்கள் சொந்த மருமகன் ரோமியோவுக்கே அந்தப் பதவியைக் கொடுங்கள். உங்கள் திட்டம்—தீர்மானம் பற்றி எதுவுமே தெரிந்துகொள்ளாமல் பெரியவரும் நல்லவருமான உங்களை என் சுயநலத்துச் சொல்லால் சுட்டுவிட்டேன்"

"சங்கு சுட்டாலும் வெண்மை தரும்"

"உங்களிடம் மன்னிப்புத்தான் கேட்கிறேன்". ராதை அழுது அவர் பார்த்ததில்லை. முத்தையா அதிர்ந்து போய் உட்கார்ந்து விட்டார். தன் ஆலையின் உயர் பதவியும் அதிகார பலமும் தன் மருமகனுக்குக் கிடைக்க வேண்டுமென்று அவர் உள் மனம் கொண்டிருந்த ஆசையை—நியாயமான உணர்வுகளை இந்தப் பெண் இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு துல்லியமாகப் புரிந்து கொண்டிருக்கிறாளே ! பணம் பணத்தோடு சேரும் ; இனம் இனத்தோடுதான் சேரும் என்பதை உணர்ந்திருப்பாளோ !"

"ஆலையின் உரிமை உங்கள் மகளுக்கும், சட்டத்தின் அதிகார பலம் உங்கள் மருமகனுக்கும் கிடைக்கவேண்டும். இது நியாயமான முடிவு. நான் மனப்பூர்வமாக இவற்றை ஏற்றுக் கொள்ளுகிறேன், மாமா..... உங்கள் நண்பர் பாண்டித்துரை உயிரோடு இருந்தாலும் உங்களுடைய முடிவைக் கட்டாயமாக வரவேற்பார். வாழ்த்தியிருப்பார். நான் அவர் மகள் ! உங்கள் முடிவை எதிர்க்கவில்லை. ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் போய் வருகிறேன்......"

ஆலையின் சட்ட ஆலோசகர் பதவியைச் சண்டையிட்டு வாங்க வந்த அவள் சரணடைந்து திரும்புகிறாள்.

"நில் ராதா !"

"ஓ, நீங்கள் ! மிஸ்டர் ரோமியோ ! இந்த வீட்டின் மாப்பிள்ளை. செண்பகா மில்லின் வருங்காலச் சட்ட ஆலோசகர். இரண்டுக்கும் என் வாழ்த்துகள். செண்பகம் மலர் போன்றவள் ; அந்த மலருக்குத் தேன் மலராக இருங்கள்.... !"

"உன் வாழ்த்தும் தேவை ; உன் சான்றிதழும் தேவை. ஆனால், நீ சற்றுமுன் சரண் அடைந்து நின்ற காட்சி என் மனத்தைத் தீய்த்தது"

"நான் குமாரி ராதா.... என்று அனுதாபப்படுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை"

பங்களாவின் நடைபாதையைக் கடந்து பதுமைபோல் போய்க் கொண்டிருந்தாள். மனச்சாட்சியாக வந்தாள் ; அதன் மறுபிறவிபோலத் திரும்புகிறாள்.

ரோமியோ அவளது தோல்வியைக் கண்டு சிரித்தபடியே நின்றான்.

செண்பகம் நமது திருமணம் நடக்க வேண்டுமானால், ஒரு நிபந்தனை விதிக்கிறேன்."

செண்பகம் 'என்ன ?' என்று கேட்டாள்.

"ஒருவருக்கு அதிர்ஷ்டமாக இருக்கும் தாய் ; மற்றவருக்கு அதே அதிர்ஷ்டம் மாற்றான் தாயாக இருக்கும் !"

செண்பகத்திற்கு இதனைப் புரியும் திறமை இல்லை.

"எப்போதும் நன்மையே செய், சில சந்தர்ப்பங்களில் அதைச் செய்யாமல் இரு என்பதனை ராதை கற்றுக்கொண்டிருக்கிறாள் !"

ரோமியோவின் சொற்கள் புதிராக இருந்தன. மில் முதலாளி, "செண்பகம், என் மகளே ! ரோமியோவின் சொற்களை நான் விளக்குகிறேன். அவர் உன் செல்வங்கள் அத்தனையும் விரும்புகிறார் ; உன் அப்பாவுக்குச் சொந்தமான மில்லின் சட்ட ஆலோசகனாக இருக்கவும் ஆசைப்படுகிறார். இதுதானே உண்மை !"

இதைக் கேட்டு ரோமியோ சிரித்தான்.

(வளரும்)


தமிழரசு

சந்தா விளம்பரம்

ஓராண்டு ரூ. 10-00

அரையாண்டு ரூ. 5-00

தனி இதழ் 40 காசு

# கன்று வளர்த்திட...



டாக்டர் பா. சின்னதுரை

இன்றையக்கன்று நாளையப் பசுவாகும், அல்லது காளையாகும். கன்று வளர்ப்பானது ஒரு சினை மாட்டைப் பராமரிப்பதிலிருந்து தொடங்குகிறது என்று கூறலாம். அதாவது நல்ல திடமான கன்றைப் பெற அதன் தாய்ப்பசு கருவான காலத்திலிருந்தே நன்கு கவனிக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி ஆரம்ப காலத்தில் கவனிப்பின்றி, பின்னர் கன்று, பசுப் பருவத்தை அடைந்தபின் எவ்வளவு தான் செலவு செய்து ஊட்டச் சத்து வழங்கினாலும் அது முழுப்பயனைத் தர முடியாது. ஆகவே ஒரு கன்றின் தோற்றத்திலிருந்து அது பருவமடைந்து கன்று ஈனும் வரை கவனிக்க வேண்டிய வழி முறைகளைக் கவனிப்போம்.

**சினைப்பசுவின் பராமரிப்பு**

சினைப்பசுவானது கன்று ஈனுவதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பே நன்கு பராமரிக்கப்பட வேண்டும். ஏனென்றால் பசுவின் கருப் பையிலிருந்து கன்று கருவுற்ற காலத்தில் கடைசி 2 மாதத்திலிருந்து வேகமாக வளர்கிறது. ஆகவே பிறக்கும் கன்று திடமாக இருக்கவும், பின்னால் கன்றுக்கு வேண்டிய பால் சுரப்பதற்கும் போதிய அளவு சத்தான தீனி கொடுக்கப்பட வேண்டும். இந்தத் தீனியில் (போதுமான அளவு) தாது உப்புக்களும், உயிர்ச் சத்துக்களும் போதிய அளவில் இருக்க வேண்டும். போதுமான அளவு பசும்புல் கொடுக்க வேண்டும். பசும்புல் மலச்சிக்கலைத் தவிர்ப்பதோடு கருவிலிருக்கும் கன்றுக்குப் போதிய அளவு உயிர்ச்சத்து 'ஏ' யும் தாது உப்புக்களும் பெற வழி செய்கிறது.

இப்பருவத்தில் தனது உடம்பைப் பேணவும், கருவிலிருக்கும் கன்று வளரவும் கூடுதல் அளவு கலப்பு உணவைச் சினைப் பசுக்களுக்குக் கொடுக்க வேண்டும். தினசரி 15 முதல் 20 கிலோ பச்சைத் தீவனம் போதுமானது. நார்ப் பொருள் அதிகமான வைக்கோல், கம்பந் தட்டை முதலியவற்றின் அளவைக் கணிசமாகக் குறைத்து விடலாம். சினைப் பசுவிற்குக் கீழ்க்கண்ட கலப்பு உணவில் தினசரி 3 கிலோ வரை கொடுக்கலாம். இந்தத் தீனியைக் காலையில் பாதியும், மாலையில் பாதியுமாகக் கொடுக்கலாம்.

1. கடலைப் பிண்ணாக்கு—35 பாகம்.
2. பருத்திக் கொட்டை—33 பாகம்.
3. கோதுமைத் தவிடு—30 பாகம்.
4. உப்புக் கலவை—1 பாகம்.
5. சாதாரண உப்பு—1 பாகம்.

மொத்தம்—100 பாகம்.

நிறை சினைப்பசுக்களை மற்ற மாடுகளுடன் மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. வேகமாகவோ, அதிகத் தொலைவாகவோ, நடத்துதல் கூடாது. அடிக்கவோ, துன்புறுத்தவோ கூடாது. அன்பாக நடத்த வேண்டும்.

ஈனுவதற்குப் பத்து நாட்களுக்கு முன்னதாகவே சினைப் பசுவைத் தனியான இடத்தில் ( Calving Pen ) கட்ட வேண்டும். தனியாக இடம் இல்லாவிடில் தொழுவத்தில் ஓரமாகத் தனியாகக் கட்டலாம். தொழுவம் சுத்தமாகவும் காற்றோட்டமுள்ளதாகவும் இருக்க வேண்டும். தரை சிமெண்டினால் பூசப்பட்டுச் சொரசொரப்பாக இருத்தல் அவசியம். இதனால் வழுக்கு நிலை ஏற்படாது. தரையில் வைக்கோலைப் பரப்பிச் சினைப் பசு நன்கு படுப்பதற்கு வசதி செய்து தர வேண்டும். இது குளிர் காலத்தில் பசுவிற்கு மிகவும் இதமாயிருக்கும். கிடேரிகள் முதல் தடவையாகக் கன்று ஈனுவதால் அவற்றைச் சில வழிகளில் பழக்க வேண்டும். அவற்றின் மடியைக் கன்று ஈனுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே தடவிக் கொடுக்கவேண்டும். இதனால் பால் மடியில் இரத்த ஓட்டம் அதிகரித்து மடி நன்கு வளர்ச்சியுறும். கிடேரிக்கும் கூச்சம் நீங்கிப் பின்பு பால் கறப்பதற்கு வசதி ஏற்படும். கன்று போடும் நாள் நெருங்க நாம் பசுவை மிகவும் கவனமுடன் கவனிக்க 280 நாட்களாகும். பசுவைக் காளைக்குச் சேர்த்த தேதியை நாம் குறித்து வைத்திருந்தால் கன்று போடும் நாளை உத்தேசமாகத் தெரிந்து அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்வதற்கு வசதியாக இருக்கும். எருமையின் கருக் காலம் சராசரி 305 நாட்கள். கன்று ஈனும் நாளைக் கீழ்க்கண்ட அறிகுறிகளால் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

1. பசியின்மை.
2. பெண் உறுப்பு வீங்குதல்—பெண்ணுறுப்பிலிருந்து மஞ்சள் நிறமான, பிசு பிசுப்பான திரவம் வடிதல்.
3. அடிக்கடி சிறு அளவில் சிறுநீர் கழித்தல்.
4. மடியும் மடிக் காம்புகளும் பெரிதாகுதல்.
5. பிட்டியில் பள்ளம் விழுதல்.
6. மாடு தனிமையை விரும்புதல்.
7. அமைதியின்மை — வாலை அடிக்கடி ஆட்டுதல்.
8. அடிக்கடி படுத்து எழுந்திருத்தல்.

குறிப்பு : கன்று ஈனும் தருவாயில் நாம் குறுக்கிடுதல் கூடாது. தேவை ஏற்படின் கால்நடை மருத்துவரின் உதவியை உடன் நாட வேண்டும்.

### கன்று பிறந்தவுடன்......

ஈரம் போக்கி, நாசி சுத்தம் செய்தல்.

கன்று பிறந்ததும் அதன் மேல் ஒட்டியிருக்கும் பிசு பிசுப்பான திரவத்தையும், நாசித் துவாரங்களை அடைத்துக் கொண்டிருக்கும் பொருள்களையும் தூய்மையான துணியால் துடைக்க வேண்டும்.

தொப்புள் கொடியைச் சுமார் மூன்று சென்டி மீட்டர் விட்டு முடிச்சுப் போட்டு முடிச்சிற்குக் கீழே சுத்தமான கத்தரிக் கோலினால் கத்தரித்து விடவும். உடனே, டிஞ்சர் அயோடினால் தொப்புள் கொடியில் நன்றாகத் தடவ வேண்டும். டிஞ்சர் அயோடின் இரண்டு மூன்று நாட்கள் தடவ வேண்டும். இதனால் தொப்புள் வீக்கமும், தொப்புள் கட்டியும் ஏனைய வியாதிகளும் ஏற்படாமல் தடுக்கலாம்.

கன்று பிறந்தவுடன் மூச்சு விடத் திணறினால் விலாப் புறத்தை அழுத்தி விடவும். அல்லது குளிர்ந்த தண்ணீரைக் கன்றின் மேல் ஊற்றலாம். பின்பு நாசித் துவாரங்களின் வழியாக நமது வாயினால் காற்றை ஊதலாம். இவ்விதம் செய்யக் கன்று நன்றாக மூச்சு விடும்.

பிறந்தவுடன் கன்றைத் தாய் பசுவைக் கொண்டு நக்க விட வேண்டும். தாய்ப்பசுவிற்குக் கன்றை நக்கும் உணர்ச்சி இல்லாவிடில், சிறிதளவு உப்புத் தண்ணீரைக் கொண்டு கன்றின் மேல் தெளிக்கவும், பின்பு தாய்ப் பசுவை நக்க விடலாம்.

நல்ல திடமுள்ள கன்று பிறந்த அரைமணியளவில் எழுந்து நிற்கும். எழுந்து நிற்கக் கஷ்டப்பட்டால் குளம்பின் நுனியில் உள்ள சவ்வுப் பாகத்தை அகற்றி விட்டால் கன்று சிரமமில்லாமல் நிற்கும்.

கன்று பிறந்த பின் பசுவின் பால் மடி, தொடை, வால் புட்டம், பெண்ணுறுப்பு முதலிய பாகங்களைக் கிருமி நாசினி கலந்த தண்ணீரால் கழுவ வேண்டும்.

### நஞ்சுக் கொடி (PLACENTA)

பசுவின் கருப்பையில் இருக்கும்போது கன்று நஞ்சுக் கொடி என்ற பையில் வளர்கிறது. இக் கொடியின் வெளிப்புறத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பித்தான் போன்ற கோளங்கள்(Cotyledons) உள்ளன. இவை போன்ற கோளங்கள் கருப்பையிலும் உள்ளன. நஞ்சுக் கொடியில் உள்ள கோளங்களும், கருப்பையில் உள்ள கோளங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து உள்ளன. இக்கொடியின் மூலம் தான், தாயிடமிருந்து வளரும் கருவிற்கு உணவுச் சத்துகள் அனுப்பப் படுகின்றன.

பொதுவாக, நல்ல உடல் நிலை உள்ள பசுவுக்கு, கன்று ஈன்ற 3 முதல் 8 மணி நேரத்திற்குள் இக்கொடி வெளியே விழுந்து விடும். அப்படி விழாவிட்டால் பின் வேறு ஏதாவது ஒரு கோளாறுக்கு வழி காட்டியாக அமைய வாய்ப்பு உள்ளது.

**வங்கி தரும் கடனுதவி**

பிற்பட்ட வகுப்பினர், சிறு தொழில்கள் தொடங்குவதற்கு, ஸ்டேட் பாங்க் மூலம் ஐயாயிரம் ரூபாய் வரை கடனுதவி பெறுவதற்குத் தமிழ்நாடு அரசு வழிவகை செய்துள்ளது.

நஞ்சுக் கொடி தானாக விழாமல் இருப்பதற்கு உண்டான காரணங்கள் :

1. கருப்பையின் கோளாறுகள்.
2. முதுமை.
3. கருவுற்றிருக்கும் போது ஊட்டக் குறைவு.

மறுபடியும் பசு தாய்மை அடையும் போது நஞ்சுக்கொடி தங்கிவிடுவதால் மிகவும் பாதிக்கப்படலாம். நஞ்சுக்கொடி தங்கி விடுவதால், கருப்பை அழற்சி, மலட்டுத் தன்மை முதலிய நோய்கள் உண்டாகின்றன. ஆகையால், நஞ்சுக் கொடி தங்கிவிட்டால் அருகாமையில் இருக்கும் கால் நாடை மருத்துவரின் உதவியை உடனே நாடுதல் மிகவும் அவசியம். மருத்துவரின் உதவியோடு வெளியேற்றப்பட்ட கொடியை ஆழமான பள்ளத்தில் இட்டுப் புதைக்க வேண்டும்.

பின்னர் கன்று ஈன்ற இடத்தைக் கிருமி நாசினி கலந்த தண்ணீரால் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். பசுவின் பிறப்பு உறுப்பு, தொடை போன்ற பகுதிகளையும் கிருமி நாசினி கலந்த தண்ணீரால் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும்.

பிறந்த கன்றுகளைக் கீழ்க் கண்ட முறைகளில் வளர்க்கலாம் :

1. பிறந்தவுடன் கன்றுகளைத் தாய்ப் பசுக்களிடமிருந்து பிரித்துப் புட்டிகளின் மூலம் ஊட்டி வளர்ப்பது.
2. தாய்ப் பசுவோடு கன்றை விட்டு வளர்ப்பது. இம்முறையில் கன்றுகள் தன்னிஷ்டப்படி பாலைக் குடித்து வளரும்.
3. கன்றுகளை முதலில் தாய்ப் பசுவிடம் பாலைக் குடிக்க விட்டுப் பாலைக் கறந்து வளர்ப்பது.

இம்முறைகளில் கன்று பிறந்தவுடன் பசுவிடமிருந்து பிரித்து வளர்ப்பதுதான் சாலச் சிறந்ததாகும். இம் முறையினால் ஏற்படும் நன்மைகள் :—

1. பசுவின் பால் உற்பத்தியைக் கணக்கிட முடியும்.
2. பிறந்தவுடன் கன்று இறந்து விட்டால் பசுவின் பால் உற்பத்தித்திறன் குறையாது.
3. சுத்தமான பாலைப் பெறலாம்.
4. துரிதமாகப் பாலைக் கறக்கலாம்.
5. கன்றுகளுக்குத் தேவையான அளவு பால் கிடைக்கும்.

குறைபாடுகள் :

1. கன்றுகளுக்குத் தனியாக பால் ஊட்ட வேண்டியதிருக்கும்.
2. அதிக நேரமாகும்.
3. கன்றுகளுக்குப் பால் ஊட்டத் தனியாக வேலையாள் நியமிக்க வேண்டும்; இதனால் செலவு அதிகம்.
4. பால் புட்டிகள், இதர பால் பாத்திரங்களின் மூலம் கன்றுகளுக்கு நோய் பரவலாம்.

மற்ற இருமுறைகளில் பசுவின் பால் உற்பத்தித் திறன் அளவிடல் சிரமம். பால் சுத்தமாயிராது. சில கன்றுகள் பாலை அதிகமாகக் குடித்துவிடலாம். வயிற்றுக் கோளாறுகள் ஏற்படும். கன்றுகள் இறந்துவிடின் பசுவின் பால் சுரப்பு பாதிக்கப்படும். தாய்ப்பசு இறந்தவுடன் கன்றை வளர்ப்பது சிரமம்.

பிறந்த கன்றுக்கு முதல் ஆகாரம் சீம்பாலே. கன்றைத் தாய்ப் பசுவிடமிருந்து பிரித்து வளர்த்தாலும் முதல் ஆகாரம் சீம்பால்தான் கொடுக்க வேண்டும். சீம்பாலில் கன்று வளர்ச்சிக்கு வேண்டிய புரதச் சத்தும்—உயிர்ச் சத்து—'ஏ'யும் (வைட்டமின்—'ஏ') நோயை எதிர்க்கும் சக்தி அணுக்களும் இருக்கின்றன. சீம்பாலைக் குடிப்பதனால் கன்றுகளுக்கு நோய்களை எதிர்க்கும் சக்தி ஏற்படுகிறது. சீம்பால் ஒரு மல மிளக்கியாவதால் பிறந்த கன்றின் குடலிலுள்ள ஒருவித நச்சுப் பொருள் வெளியே வந்து விடுகிறது.

பிறந்த கன்றைத் தாயிடமிருந்து பிரித்து வளர்க்க—கன்று பிறந்தவுடன் பிரித்து விடவும். அடுத்த ஈற்றுகளிலும் இம்முறையைப் பின்பற்ற வேண்டும். உடனே சீம்பால் கொடுக்க வேண்டும். குறிப்பாக இந்திய நாட்டுப் பசுக்களுக்குத் தாய்மை உணர்ச்சி அதிகம். உடனே கன்றைப் பிரிக்காவிடில் பின்பு கன்றுகளைப் பிரித்து வளர்ப்பது சிரமம். பசுவின் பால் சுரப்பும் குறையும்.

அடுத்தபடியாகக் கன்று எந்த முறையில் வளர்க்கப்பட்டாலும் பாலைத் தேவையான அளவில் குறிப்பிட்ட நேரங்களில் கொடுப்பது உசிதம். ஏனெனில் ஆவினங்களின் வயிற்றில் நான்கு அறைகள் உண்டு. பிறந்த கன்றுக்கும், பெரிய மாட்டிற்கும் வயிற்றைப் பொறுத்த மட்டில் வித்தியாசம் உண்டு. பிறந்த கன்றின் அபமேசம் என்று சொல்லப்படும் பாகம் 70 சதவீதம் ; ரூமன் என்று சொல்லப்படும் பாகம் மிகவும் சிறிதே. இதனால் பிறந்த கன்றுகள் தங்கள் வயிற்றில் உணவுப் பொருள்களை நிரப்பிக்கொள்ள முடியாது. இதனால் பிறந்த கன்றுகள் பாலைக் குடிக்கும் பொழுது பாலானது நேராக அபமேசம் என்ற அறைக்குச் செல்கிறது. கன்றுகள் அதிகமாகப் பாலை குடிக்கும் போது பால் ரூமன் என்ற வயிற்றுக்குச் செல்கிறது. இதனால் பால் திரிந்து விடுகிறது. இந்த வயிற்று அறையானது இளங் கன்றுகளில் முழு வளர்ச்சி அடைந்திராது. இதனால் இது நன்கு செயல்பட முடியாது. ஆகவே, இவ்வறைக்குச் சென்ற பாலானது அங்கே தங்கித் திரிந்து, புளித்து, வயிற்றுக் கோளாறுகளை உண்டாக்கும். இதனால் இளங் கன்றுகளுக்குக் குறைந்த அளவில் குறிப்பிட்ட நேரங்களில் பாலைக் கொடுப்பது நல்லது.

### பால் குடிக்கப் பழக்குதல்

கன்றுகளைத் தனியாகப் பிரித்து வளர்க்கும் பொழுது அவைகளை அதற்கென உண்டான பாத்திரத்திலிருந்து குடிக்கப் பழக்க வேண்டும். முதலில் நமது கைகளின் விரலைப் பாலில் நனைத்துக் கொள்ள வேண்டும். இக்கைகளை முதலில் கன்றை நக்குவதற்குப் பழக்க வேண்டும். பின்பு பாத்திரத்தில் பாலை ஊற்றிக் கையின் விரலைப் பாலில் அமிழ்த்திக் கன்றை, பாலை கையின் விரல்களின் வழியாக உறிஞ்சப் பழக்க வேண்டும். ஒருவர் இரு கைகளையும் உபயோகித்து ஒரே சமயத்தில் இரு கன்றுகளுக்குப் பால் ஊட்டலாம். நன்கு பழக்கப்பட்ட கன்றுகள் சில நிமிடங்களில் பாலை உறிஞ்சிக் குடித்து விடும். இம் முறையில் பாலின் உஷ்ண நிலை 40 டிகிரி சி.-க்கு இருக்க வேண்டும். குளிர்ந்த பால் கழிச்சலை ஏற்படுத்தும்.

### கோடைக்கானலில் சுற்றுலாக் குடில்கள்

கோடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளுக்காகப் பத்துக் குடில்கள் கட்டப்பட்டுள்ளன. இது போன்ற குடில்களைக் கன்னியாகுமரி மற்றும் குற்றாலத்தில் கட்டவும் அரசு தீர்மானித்துள்ளது. மதுரைக்கருகே பர்மா அகதிகளுக்காக ரூ. 16 இலட்சத்து இருபத்து மூவாயிரம் செலவில் வீடுகள் கட்டித் தரவும் திட்டமிட்டுள்ளது.

### பாலின் அளவு

ஒரு கன்றின் எடையில் 10 சதவிகிதம் பால் கொடுக்க வேண்டும். வயிற்றுக் கோளாறு, கழிச்சலோ ஏற்பட்டால் பாலின் அளவைக் கணிசமாகக் குறைக்கவும். ஆரோபாக் அல்லது டெராமைசின் போன்ற மருந்துகளைப் பாலுடன் கொடுத்தால் கழிச்சல் போன்ற வியாதிகள் ஏற்படாது.

கன்றுகளை மற்ற முறைகளில் அதாவது பசுவுடன் விட்டு வளர்க்கும் பொழுது கன்றுகளுக்கு விடப்படும் பாலின் அளவை எப்படி நிர்ணயப்படுத்துவது? வாரத்தில் ஒரு நாள் கன்றுகளுக்குப் பாலை ஊட்ட விடாமல் பாலை முழுவதும் கறந்து விட வேண்டும். இதனால் பசுவின் பால் உற்பத்தியின் அளவு தெரியும். இந்த அளவிலிருந்து இதற்கு முதல் நாள் கறந்த பாலின் அளவைக் கழிக்கக் கன்று குடித்த பாலின் அளவு தெரிய வரும். இதைக் கண்டு பிடித்த பின் கன்றுக்கு வேண்டிய அளவு பால் கிடைக்கிறதா —இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டு பால் கறப்பவர்களுக்கு வேண்டிய அறிவுரைகள் வழங்கலாம்.

கன்று பால் குடித்தவுடன் அதன் நாக்கில் சிறிதளவு உப்பைத் தடவவேண்டும். இளங் கன்றுகளுக்கு வாய்ப்பூட்டுப் போடுவது நல்லது. இதனால் கன்றுகள் ஒன்றையொன்று நக்கும் பழக்கம் நின்றுவிடும். கன்றுகள் ஒன்றையொன்று நக்குவதால் உரோமம் வயிற்றுக்குள் சென்று உருண்டைகளாகத் திரண்டு குடலில் ஆகாரம் செல்வது தடுக்கப்படலாம். இதனால் கன்றுகள் இறக்க நேரிடும். கன்றுகள் வளர வளர பாலின் அளவைக் குறைக்க வேண்டும். கலப்பு உணவு கொடுக்க வேண்டும். ஆறு மாத வயதானவுடன் பால் ஊட்டுவதை அறவே நிறுத்தி விடலாம்.

### கன்றுகளுக்குக் கலப்பு உணவு (*Calf starter*)

கன்றுகளுக்கு வேண்டிய கலப்பு உணவில் கன்றுகளுக்கு வேண்டிய புரதம், மாவுப் பொருள், தாதுஉப்புக்கள், உயிர்ச் சத்துக்கள் அடங்கியுள்ளன. கன்றுகளின் கலப்பு உணவைக் கீழ்க்கண்ட உணவுப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கலாம்.

| | |
|---|---|
| 1. கடலைப் பிண்ணாக்கு | 38 பாகம் |
| 2. கேழ்வரகு மாவு | 30 ,, |
| 3. கோதுமைத் தவிடு | 20 ,, |
| 4. ஆளி விதை | 10 ,, |
| 5. தாது உப்பு | 1 ,, |
| 6. உப்பு .. | 1 ,, |
| மொத்தம் | 100 ,, |

கன்று பிறந்த 15 நாட்களிலிருந்து சிறிது பசும் புல்லைக் கொடுக்கலாம். அருகம்புல் சிறந்தது. வயது செல்லச் செல்ல பசும்புற்களின் அளவை அதிகரிக்கலாம். 2-வது மாதத்திலிருந்து வைக்கோல் கொடுக்கலாம்.

[தஞ்சாவூர் மாவட்டம் வடசேரி கால்நடை வளர்ச்சி முகாம் சிறப்பு மலரில் வெளியாகிய கட்டுரை]



# கேளுங்கள் ??? கொடுக்கப்படும்

கரிகாலன் என்ற நெல் ரகத்திற்கு எவ்வளவு உரமிட வேண்டும் ? அடியுரம் எவ்வளவு இட வேண்டும் ? மேல் உரம் எந்தெந்த நேரத்தில் எவ்வளவு இடவேண்டும் ? என்ன மகசூல் காணும் ?

—எ. எம். அகமது மொஹிதீன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக்குழு,
ஆழ்வார் திருநகரி,
திருச்செந்தூர் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

'கரிகாலன்' (வளர்ப்பு எண். 5652) என்ற நெல் ரகத்திற்கு ஏக்கருக்கு 55கிலோ தழைச்சத்து 25கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவை இடவேண்டும். இதில் 33 கிலோ தழைச்சத்தையும், 25 கிலோ மணிச்சத்தையும், 25 கிலோ சாம்பல் சத்தையும் அடியுரமாகக் கடைசி உழவில் இடவேண்டும். நடவு செய்த




25 முதல் 30 நாட்களுக்குள் மீதமுள்ள 22 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும்.

மேற்கூறிய அளவில் அடியுரமிட 165 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 73 கிலோ யூரியா, 157 கிலோ சூப்பர் பாஸ்பேட், 42 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளைக் கடைசி உழவில் இடலாம். அல்லது 147 கிலோ 17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரத்தையும் 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 18கிலோ யூரியாவையும் அடியுரமாக இடலாம்.

மேலுரமிட 110 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 49 கிலோ யூரியாவைப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு கரிகாலன் நெல் ரகத்திற்கு உரமிட்டால் ஒரு ஏக்கரிலிருந்து 2,500 கிலோவுக்குக் குறையாமல் மகசூல் பெற முடியும்.

'கரிகாலன்' நெல் ரகம் ஜூலை மாத விதைப்பில் பெரும் மகசூல் கொடுத்துள்ளதால், நீங்களும் ஜூலை மாதத்தில் நாற்றுவிட்டு, நடவு செய்து பெரும் மகசூல் எடுக்கலாம்.

கடந்த 4-3-1973 தேதி தினமணி ஞாயிறு சுடரில் கண்ணகி நெல் பற்றி சுமாரான விவரங்கள் வெளியாகியுள்ளது. கண்ணகி எப்பட்டத்திற்கு ஏற்றது? என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் 17:17:17 கூட்டு உரம் ஏக்கருக்கு எத்தனை கிலோ? நாற்றைச் சேர்த்து எத்தனை நாட்களில் அறுவடையாகிறது? இக் கேள்விகளுக்கு விடையளிக்குமாறும், இன்னும் சில விவரங்களையும் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

—மு. சுப்பரமணியன்,
ப.யூ.உ.ஆ. பள்ளி,
மெய்யூர் (அஞ்சல்),
திருவண்ணாமலை வட்டம்,
வடஆர்க்காடு மாவட்டம்.

கற்புக்கரசி கண்ணகியின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள 'கண்ணகி' நெல் ரகம் தமிழ் நாடெங்கும் குறுவைப் பட்டத்திலும், நவரைப் பட்டத்திலும் பயிரிடுவதற்கு ஏற்றது. இந்த ரகம் சன்ன ரக அரிசி கொடுக்க வல்லது. பூசா 2-21 (ஐ.இ.டி. 1983) என்ற நெல் ரகத்திற்கே 'கண்ணகி' என்று




பெயரிடப்பட்டுள்ளது. அதிக மகசூல் அளிக்கும் 'ஐ.ஆர். 8' நெல் ரகத்தையும், சன்ன அரிசி அளிக்கும் 'டி.கே.எம். 6' என்னும் 'ஒட்டுக் கிச்சிலி' ரகத்தையும் கரு இணைப்பு செய்த வகையில் 'கண்ணகி' நெல் ரகம் உருவாகியதால், 'கண்ணகி' நெல் ரகம் அதிக மகசூலையும், சன்ன அரிசியையும் அளிக்கும் ஆற்றல் கொண்டதாக உள்ளது.

கண்ணகி நெல் பயிரிட அடியுரமாக ஏக்கருக்கு 33 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவை இடவேண்டும். இந்த அளவில் அடியுரமிட 17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 147 கிலோவையும், 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 18 கிலோ யூரியாவையும் கடைசி உழவில் இடவேண்டும். நாற்றையும் சேர்த்து இந்த ரகத்தின் வயது 110 நாட்களாகும். நாற்றுவிட்ட 25 நாளில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 25 நாளில் ஏக்கருக்கு 49 கிலோ யூரியா அல்லது 110 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவேண்டும். 'கண்ணகி' ரகம் ஏக்கருக்கு 2 முதல் 2½ டன் மகசூல் அளிக்கவல்லது.

கடந்த 22-2-1973 அன்று இரவு திருச்சி வானொலியில் ஒலிபரப்பான விவசாய நிகழ்ச்சியில் பண்ணைச் செய்தி என்ற தலைப்பில் பானி என்ற புதிய உயர் விளைச்சல் ரகம் பற்றிச் சொன்னார்கள். அந்த விதை எங்குக் கிடைக்கும்? அதற்கான சாகுபடி குறிப்புகளையும், அதனுடைய உச்ச மகசூல் எவ்வளவு கிடைக்கும் என்பதனையும், தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்றதா என்பதையும் தயவு கூர்ந்து தெரிவிக்கவும்.

—எஸ். வெங்கடேசன்,
மெயின்ரோடு,
எ. கிளியனூர் அஞ்சல்,
தஞ்சாவூர் மாவட்டம்.

'பவானி' என்ற நெல் ரகத்தை, அண்மையில்




தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது. இதன் சாகுபடி குறிப்புகளையும், மகசூல் அளிக்கும் திறனையும் பற்றிய கட்டுரை 16-4-73

தேதி 'தமிழரசு' இதழில் பக்கம் 54, 55-ல் வெளியிடப்பட்டுள்ளது. அதை மீண்டும் வெளியிட இயலாததலின் அதைப் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

'பவானி' நெல் பற்றிய சோதனைகள் பல்வேறு நிலையில் இருப்பதால், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை, இந்த விதையை இன்னும் பெருமளவில் வழங்கவில்லை. பரிசோதனைகள் முடிந்த பிறகு, பயனுடையதாக இருக்குமானல், 'பவானி' நெல் விதைகளை உழவர்களுக்கு வழங்கத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை ஆவன செய்யும். தற்பொழுது 'பவானி' நெல் விதை வேண்டுமெனில், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தகவல் தொடர்பு நிலையத்தைச் சார்ந்த விதை விற்பனை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

'பவானி' நெல் தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்றதாக இருக்குமா என்பதை, இன்றைய நிலையில் கூறமுடியாத நிலையில் இருக்கின்றோம். ஏனெனில், 1970, 71-ஆம் ஆண்டுகளின் தாளடிப் பட்டங்களில் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து ஐ.ஆர் 20, பொன்னி ஆகிய இரண்டு ரகங்களும் பவானியைவிடச் சிறந்தவை என்பது தெளிவாகின்றன. ஆனல், பேராவூரணியைச் சார்ந்த உவர்நிலப் பகுதியில் நடைபெற்ற பரிசோதனைகளில் இருந்து, 'பவானி' நெல் ரகம் உவர் நிலங்களில் மற்ற ரகங்களை விட அதிக மகசூல் கொடுக்க வல்லது என்று தெரிய வருகிறது.

கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் த்திங்களில் பெய்த பெருமழையில், மற்றெல்லா ரகங்களும் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தும், 'பவானி' நெல் ரகம் மட்டும் தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்படவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

எனவே, 'பவானி', நெல் ரகம் தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்றதா என்பது இந்த ஆண்டின் சோதனைகளுக்குப் பிறகே நன்கு தெளிவாகத் தெரிய வரும். எனினும், நீங்களும் பரிசோதனையாக 'பவானி' நெல் ரகத்தைச் சிறு அளவில் பயிரிட்டுப் பார்க்கலாம்! உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையும் இது பற்றிக் கலந்தாலோசிப்பது நல்லது.

நெல்லை மாவட்டத்தில் உள்ள என் நிலத்தில் கோடைப் பயிராக அவுரிப் பயிர் செய்ய விரும்புகின்றேன். இதன் பொறுக்கு விதைகள் எங்குக் கிடைக்கும்? அவுரி எத்தனை மாதப்பயிர்? இதன் இலை அல்லது காய் எது சாயத்திற்குப் பயன்படுகிறது? இது இலாபகரமான பயிரா? அவுரி பற்றித் தயவுசெய்து பதில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

—பி. ஜமீல் அகமது,
கைலாசபுரம்,
திருநெல்வேலி.

டிசம்பர்—சனவரி முதல் சூன்-சூலை வரை அவுரியைப் பயிரிடலாம். அவுரி விதை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்கக் கூடும். அங்குக் கிடைக்காவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றியத்துணைவேளாண்மைஅலுவலர் (வளர்ச்சி) அவர்களைச் சந்தித்து, அவுரி விதை வரவழைத்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். அவுரியின் வயது 150 முதல் 200 நாட்களாகும். அவுரியின் தழையில் இருந்து முன்பெல்லாம் சாயம் எடுக்கப்பட்டது. தற்பொழுது அவுரியிலிருந்து சாயம் எடுக்கும் தொழில் மறைந்துவிட்டது. அவுரி களிமண் நிலங்களில் நன்கு வளரும். நல்ல மழைக்குப் பிறகு ஏக்கருக்கு 7 முதல் 8 கிலோ விதையை விதைக்க வேண்டும். வேறு பயிர் இட முடியாத நிலத்தில் தழைஉரப் பயிராக அவுரியை விதைக்கலாம். அவுரி சிறந்த தழை உரமாகப் பயன்படும். ஒரு ஏக்கரில் இருந்து 5,000 கிலோ தழை கிடைக்கும். ஒன்று அல்லது இரண்டு முறை பாசனம் அளித்தால், ஓ ஏக்கரிலிருந்து 7,500 கிலோ தழை பெற முடியும். நிலம் பயிரிடப்படாமல் வெறுமனே கிடக்கும் காலத்தில் அவுரியைப் பயிரிடுவதால், தழை உரம் பெற முடிவதுடன், நிலவளத்தை மேம்படுத்த இயலும்!

தற்பொழுது நான் ஐ.ஆர். 20 நெல் பயிரிட்டுள்ளேன். அறுவடைக்குப் பின் மே மாதத்தில் அந்நிலத்தில் கோ. 7 கேழ்வரகை இறவைப் பயிராகப் பயிரிடலாமா? உர அளவையும் பயிரிடும் முறையையும் அறிவிக்கவும். நிலம் களிமண் தன்மையுடையது. கேழ்வரகு நன்கு வளருமா?

—இர. நடராசன்,
76, சி. எஸ். செட்டித்தெரு,
காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

தங்களுடைய ஐ.ஆர் 20 நெல் அறுவடைக்குப் பிறகு தங்கள் நிலத்தில் மே, சூன் மாதங்களில் கோ. 7 கேழ்வரகு பயிரிடலாம். வேறு எப்பயிருக்கும் ஏற்றதாக இல்லாத நிலங்களிலும் கேழ்வரகு பயிரிடலாம். தங்கள் நிலம் களிமண் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அந்நிலத்தில் கேழ்வரகு நன்கு மகசூல் தரும். கோ. 7 கேழ்வரகு ரகத்தை இறைவையாகச் சாகுபடி செய்யப் பின்கண்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

கோ. 7. கேழ்வரகின் வயது 100 முதல் 102 நாட்களாகும். ஒரு ஏக்கர் கேழ்வரகு பயிரிட $1\frac{1}{2}$ கிலோ கோ. 7 கேழ்வரகு விதைகளை 3 சென்ட் நிலத்தில் நாற்றுவிட வேண்டும். நாற்றுவிட்ட 21-ஆம் நாள் நடவு செய்ய வேண்டும்.




கேழ்வரகு நடும் வயலுக்கு ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு இட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 18 கிலோ மணிச் சத்து, 18 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். இந்த அளவு உரமிட 125 கிலோ 14:14:14 அல்லது 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரம் அல்லது 105 கிலோ 17:17:17 காம்ப்ளெக்ஸ் உரமிடவேண்டும்.

நடவு வயலில் 6× 6 அங்குலம் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 4-வது நாள் உயிர்த்தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். பிறகு வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினல் போதுமானது. நடவு செய்த 3 வாரம் கழித்துக் களை எடுக்க வேண்டும்.

நடவு செய்த 30-ஆம் நாள் ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்தை (40 கிலோ யூரியா அல்லது 90 கிலோ அமோனியம் சல்பேட்) மேலுரமாக இடவேண்டும்.

பூச்சி, நோய்கள் தாக்கினல் உங்கள் ஊராட்சிஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களைக் கலந்து கொண்டு, அவர் கூறும் முறையில் மருந்து தெளிக்கவேண்டும்.

மேற்கூறிய முறைகளில் கோ. 7 கேழ்வரகு பயிரிட்டால் ஏக்கருக்கு 2,000 முதல் 2,500 கிலோ வரை மகசூல் பெறலாம்.

**வினா:** 'ஒயிட் லெக்கார்ன்' கோழிக்குஞ்சுகள் 50 வேண்டும். சிறு கோழிப்பண்ணை அமைக்கத் தென்னார்க்காடு, சென்னை ஆகிய மாவட்டங்களில் எங்கு 'ஒயிட் லெக்கார்ன்' கோழிக் குஞ்சுகள் கிடைக்கும்? முகவரி தெரிவிக்கவும்.

—ப. ஜெயராஜ்,
ரயிலடி,
சீர்காழி (அஞ்சல்),
தஞ்சாவூர் மாவட்டம்.

'ஒயிட் லெக்கார்ன்' கோழிக் குஞ்சுகள் பெற உங்கள் ஊராட்சி ஒன்றியக் கால்நடை விரிவாக்க அலுவலர் (Extension Officer for Animal Husbandry) அவர்களின் உதவியை நாடினால், அவர் உங்கள் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு கோழிப் பண்ணையில் இருந்து, கோழிக் குஞ்சுகளை வரவழைத்துக் கொடுக்கக்கூடும். அல்லது உங்கள் ஊருக்கு மிக அருகாமையில் உள்ள கோழிப்பண்ணைகளிலிருந்தும் கோழிக்குஞ்சுகளை வரவழைத்துக் கொடுக்கக் கூடும். எனவே, தாங்கள் அந்த அலுவலரை நாடுவதே சிறந்தது. இருப்பினும் தங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, பின்கண்ட முகவரிகளைத் தெரிவித்துள்ளோம்.

1. சிக்ஸ் இந்தியா கோழிப் பண்ணை அலுவலகம்,
10, பீச் ரோடு,
கடலூர்-1.

2. கண்காணிப்பாளர்,
அரசினர் கோழிப்பண்ணை,
காட்டுப்பாக்கம் (அஞ்சல்),
செங்கற்பட்டு மாவட்டம்.

3. செட்டி கோழிப்பண்ணை,
16, சாட்டையப்பர் தெற்குத் தெரு,
நாகப்பட்டினம்.

4. ஹை-சிக்ஸ் கோழிப்பண்ணை,
42, பாஷயம் ரெட்டியார் தெரு,
கடலூர்-2.

5. அக்ரோ சப்ளிமெண்டல் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் லேபரட்டரீஸ்,
13, ஹண்டர்ஸ் ரோடு,
வேப்பேரி,
சென்னை-7.

என்னுடைய தந்தை 'பொரி வறுக்கும்' தொழிலில் சுமார் 20 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். தினமும் கூலிவேலை தான் செய்கிறார். அவர் சொந்தமாக அந்தத்தொழிலைச் செய்ய விரும்புகிறார். ஆனால் அதற்குப் பொருளாதார வசதி இல்லை. சுமார் ரூபாய் 1,000 தேவைப்படுகிறது. அதற்கு அரசு நடத்திவரும் சிறு தொழில் நிறுவனம் கடன் கொடுக்குமா? அப்படிக் கொடுப்பதாய் இருந்தால் எப்படிக் கடன் பெற வேண்டும் என்பதைத் தெரிவிக்க வேண்டுகின்றேன். அல்லது பேங்க் கடன் கொடுக்குமா? என்பதையும் தெரிவிக்கவும். அதனால் தினந்தோறும் சுமார் 10 பேர் பயன் பெறுவார்கள். தயவுசெய்து விளக்கமான பதில் தருமாறு வேண்டுகின்றேன்.

—அ. குமார், பி.எஸ்சி.,
இளைஞர் அணி,
மெதூர் அஞ்சல்,
பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

தங்கள் தந்தையார் சொந்தமாகப் 'பொரி வறுக்கும்' தொழிற்கூடம் துவங்கத் தமிழ்நாடு தொழில் வணிகத் துறை அல்லது தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தில் ('சிட்கோ') கடன் உதவி பெறலாம். 'ஸ்டேட் பேங் ஆப் இந்தியா' அல்லது 'பேங் ஆப் பரோடா', 'இந்தியன் ஓவர்சீஸ் பேங்', 'இண்டியன் பேங்' போன்ற நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகளில் ஏதேனும் ஒன்றில் மூலமும் சிறு தொழில் தொடங்கக் கடன்பெற முடியும்!

தமிழ்நாடு தொழில் வணிகத் துறை மூலம் அல்லது தமிழ்நாடு சிறு தொழில் (சிட்கோ) வளர்ச்சிக் கழகம் மூலம் கடன் பெறுவதற்குரிய விவரங்களைத் தங்கள் ஊராட்சி ஒன்றியத் தொழில் விரிவாக்க அலுவலர் (Extension Officer for Industries) அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம். பொன்னேரியில் உள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கியிலும் இது பற்றி நேரில் விசாரித்து விவரம் தெரிந்து கொள்ளலாம். தங்கள் ஊராட்சி ஒன்றியத் தொழில் விரிவாக்க அலுவலரிடமிருந்தும் இது பற்றி ஆலோசனையைப் பெறலாம்.




எங்கள் நிறுவனத்தில் ஏராளமான மண்ணெண்ணெய் விளக்கு (லைட்) பல ரகம் தயாரிக்கின்றோம். எனக்கு இப்பொழுது கண்ணாடிக் குடுவை கிடைக்கவில்லை. அதன் கம்பெனி முகவரி (கண்ணாடிக் குடுவை விற்பனையாளர் முகவரி) தெரியவில்லை. எங்கள் கம்பெனியை நல்ல முறையில் நடத்திவருவதற்கு ஆலோசனை வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

—சாலி லாம் இண்டஸ்டிரீஸ்
22, பள்ளி வாசல் மூப்பன் தெரு
திருநெல்வேலி-5.

தங்களுக்கு ஒரு தனிப் பட்ட கம்பெனியின் முகவரியைத் தெரிவிப்பது தவறாகும். எனவே, தமிழ்நாடு அரசின் தொழில் வணிகத் துறையைச் சார்ந்த நிறுவனத்தின் முகவரியை மட்டுமே 'தமிழரசு' இதழ் மூலம் தெரிவிக்க முடியும். மதுரையில் உள்ள அரசினர் கண்ணாடிச் சாமான்கள் தயாரிப்புப்பயிற்சி நிலையத்தில் ஓரளவிற்குச் சிமினி விளக்குக் கண்ணாடிகள் தயாரிக்கப்படுகின்றன. அங்கிருந்து தாங்கள் கண்ணாடிக் குடுவைகளைப் பெற்றுக் கொள்ளலாம். இதுபற்றித் தாங்கள் திருநெல்வேலியில் உள்ள ''உதவி இயக்குநர், தொழில் வணிகத் துறை'' அவர்களிடம் ஆலோசனை பெறுவதே நல்லது!




சிறுதொழில் செய்ய நிலம், வீடு இல்லாத ஏழைகளுக்கு அரசாங்கம் கடன் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். இக்கடன் ஜாமீன் பேரில் தருகிறார்களா? அல்லது எந்த முறையில் கொடுக்கிறார்கள்? என்னென்ன தொழிலுக்கு எவ்வளவு கடன்? எத்தனை ஆண்டு தவணை? இது சம்பந்தமாக நான் யாருக்கு மனுக் கொடுப்பது?

—பொன்முடி,
தலைவி,
உழவர் விவாதக்குழு,
சின்ன மாம்பட்டு,
கள்ளக்குறிச்சி வட்டம்,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

வீடற்றோர்க்கு வீட்டு மனையும், நிலமற்றோர்க்கு நிலமும் கொடுத்து வரும் தமிழ் நாடு அரசு, சிறுவியாபாரம்




செய்துவரும் அரிசன மக்களை ஊக்குவிக்க வட்டியில்லாக் கடன் கொடுத்து உதவுகிறது. இக்கடன் நபர் ஜாமீனிலும், சொந்தப் பொறுப்பிலும் கொடுக்கப்படுகிறது. வெற்றிலை பாக்குக் கடை அமைத்தல், வாடகை சைக்கிள் கடை வைத்தல், உணவு விடுதி நடத்தல், தையல் கடை வைத்தல், தோல் பதனிடுதல், தச்சுவேலை முதலிய 21 வகைத் தொழில்களுக்கு, தொழிலுக்கு ஏற்றவாறு ரூபாய் 250 முதல் ரூபாய் 10,000 வரை வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இக்கடனைக் கடன்பெற்ற ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு ஆரம்பித்து 100 சமமான, சுலபமான தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடன் பெற உங்கள் மாவட்ட நல அலுவலர் அவர்களுக்கு மனு அனுப்ப வேண்டும்.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண முயலும் தமிழ் நாடு அரசு, வீடும் நிலமும் இல்லாமல் உள்ள எல்லா இனத்தைச் சார்ந்த ஏழைகளுக்கும் கடன் கொடுத்து உதவும் காலம் விரைவில்வரும் என்று நம்பலாம்.

நான் 1968—69-ல் எஸ்.எஸ்.எல்.சி பாஸ் செய்தேன். அதன்பின் 1970-ல் நடந்த லாரி விபத்தில் எனது வலது காலை எடுக்க வேண்டியதாகிவிட்டது. என் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. நான் என் பெற்றோருக்கு ஒரே மகன். என் தந்தை வயோதிகர். என் குடும்பத்தைக் காக்கும் பொறுப்பு என்னைச் சார்ந்த போது, எனக்கு இந்த நிலை ஏற்பட்டு விட்டது. நானும் பலதுறைகளுக்கு வேலைக்காக மனுச் செய்தேன். இதுவரை எனக்கு எந்த வித வேலையும் கிடைக்கவில்லை. வாழ்விழந்த நான் மறுவாழ்வு பெற வேலை கிடைக்க வேண்டும். ஆகையால் நான் எவ்வாறு வேலையில் அமர்வது எனவும், என் போன்ற ஊனமுற்றோர்க்குத் தமிழ் நாடு அரசு அளிக்கும் சலுகைகளையும் உதவிகளையும் தெரிவிக்கவும். நான் மறுவாழ்வு பெற வழி வகைகளையும் தெரிவிக்கும்படி சிரம் தாழ்த்தி வேண்டுகின்றேன்.

மா. சுப்பிரமணியன்,
சாந்தநுபுரம் 4-ஆம் வீதி,
புதுக்கோட்டை அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

தங்கள் கடிதம் கண்டு மிகவும் வருத்தப்படுகிறோம். முயற்சி செய்தால் தங்களுக்கு வேலையும் கிடைக்கும்; மறுவாழ்வும் கிடைக்கும். கீழ்க் கண்ட வகையில் முயற்சி செய்யுங்கள். உடல் ஊனமுற்றோர்களுக்குத் தொழிற் பயிற்சி அளித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்பதற்காக, தமிழ் நாடு அரசின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் திட்டப்படி கிண்டியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் 22,800 ரூபாய் செலவில் புத்தகம் 'பைண்ட்' செய்யும் நிலையம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு துவங்கியுள்ளது. அந்நிலையத்தில் முதற் கட்டமாக 16 பேர்களுக்குப் (உடல் ஊன முற்றவர்கள்) புத்தகங்களைப் 'பைண்ட்' செய்வது பற்றிய பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சிக் காலம் 6 மாதமாகும். பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் மாதம்தோறும் ரூபாய் 25 உதவித்தொகை வழங்கப்படும். 6 மாதப் பயிற்சிக்குப் பிறகு தேர்வு நடத்தப்படும். தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசினர் அச்சுக் கூடத்தில் வேலை அளிக்கப்படும்.

## விண்வெளியில் வலம் வரும் ஒரு வீடு

விண்வெளியில் பறக்கும் ஆய்வுக்கூடமான அமெரிக்காவின் விண்வெளி மேடை 'ஸ்கைலாப்' மே திங்கள் பதினைன்காம் நாள் முதல், 1974 சனவரித் திங்கள் நான்காம் நாள்வரை ஏறத்தாழ எட்டு மாதங்கள் விண்வெளியில் வலம் வரும்.

ஒன்பது விண்வெளி வீரர்கள் மூவர் மூவராக மூன்று முறை சென்று இந்த ஆய்வு நடத்துவார்கள். அதன் உட்புற வசதி 322 கன மீட்டர் ஆகும். 'ஸ்கைலாப்' கலத்தில் 58 ஆராய்ச்சிக் கருவிகள் உள்ளன. இவற்றைக் கொண்டு விண்வெளி வீரர்கள் 270 தனி ஆய்வுகள் நடத்துவர்.




தாங்கள் இப்பயிற்சி பெற்றுத் தேர்வில் வெற்றி பெற்றுவிட்டால், புதுக்கோட்டையில் உள்ள அரசினர் அச்சுக் கூடத்திலேயே தங்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது! இதனால் தங்களுக்கு மறுவாழ்வும் கிடைக்கும்; தங்கள் பெற்றோர்களையும் காப்பாற்ற முடியும்!

எனவே, உடனடியாகத் தாங்கள் ஊனமுற்றுள்ளதைக் குறிப்பிட்டுப் புத்தகம் 'பைண்ட்' செய்யும் பயிற்சிக்குத் தங்களையும் தேர்ந்தெடுக்கும்படி வேண்டுகோள் மனு ஒன்றை எழுதிப் பின்கண்ட முகவரிக்கு அனுப்ப முயலுங்கள்.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும்
பயிற்சித்துறை,
சேப்பாக்கம்,
சென்னை-5.

இது தொடர்பாகப் புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் உதவியையும் நாடலாம். தாங்கள் சிரமம் பாராமல் நேரில் சென்றால், வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடும். யாரும் மனமிரங்கித் தங்களுக்கு உதவ முன் வருவார்கள்.

—ஆர். எம்.

# வாடிப்பட்டி வழி காட்டுகிறது



மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டத்தில் கிராம மின்வசதித் திட்டத்திற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. 1973 இறுதிக்குள்ளாகத் தமிழகத்தில் மின்வசதி பெறாத கிராமமோ, சிற்றூரோ இருக்காது என்ற நிலையினை உருவாக்கத் தமிழ்நாடு மின் வாரியம் முழு மூச்சுடன் பாடுபட்டு வருகிறது. அந்த இலட்சியப் பணியில் மேலும் ஒரு படி மேலே போய் தெரு விளக்குகள் மூலமாக மின்வசதி அளிப்பது என்பது மட்டுமல்லாமல்—மேலும் பல வகைகளிலும் மின்வசதியை நீட்டிப்பது என்ற நிலையினை உருவாக்குவது நிலக்கோட்டை மின்வசதிச் சிறப்புத் திட்டம்.

மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டத்தில் வாடிப்பட்டி,அலங்காநல்லூர் வட்டாரங்களில்—இந்த வட்டாரத்தில் உள்ள நான்கு பேரூராட்சிகள் தவிர—மற்ற 52 மக்கள் கணக்கெடுப்புக்குட்பட்ட எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதியை மேலும் பல்வேறு வகையிலும் நீட்டிப்பதே இந்தச் சிறப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் இவ்விரு வட்டாரங்களில் உள்ள 52 மக்கள் கணக்கெடுப்புக்குட்பட்ட கிராமங்களில் மேலும் பல்வேறு துறைகளிலும் மின் இணைப்பு அளிக்கப்படும்.

இந்த இரு வட்டாரங்களில் உள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குட்பட்ட எல்லாக் கிராமங்களும் இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

மதுரை மாவட்டத்திலுள்ள நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள், அரிசனக் குடியிருப்புகள் அனைத்துக்கும் மின்வசதியளிக்கும் பணி முழுமை பெற்றுவிட்டது.

> பலர் புகழ வாழ்வது, நம் மீது பிறர் பொறாமைப்பட இடம் தராத தூய நெறி. பிறருடைய தீய குணங்களை மனத்தில் கொள்ளாமல் அவர்களிடமும் அன்பு கொள்வது, அன்பில்லாதவரையும் அரவணைப்பது—இந்த உன்னதப் பண்புகளைப் பணத்தால் வாங்க முடியாது. இந்தப் பண்புகள் இல்லாமல் பணத்தால் மட்டும் எந்த இன்பத்தையும் பெற முடியாது.
>
> —ராபர்ட் லூயிஸ்ஸ்டீவன்சன்.

மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டத்தில் (1) வாடிப்பட்டி (2) அலங்காநல்லூர் (3)வத்தலகுண்டு (4) நிலக்கோட்டை ஆகிய நான்கு வட்டாரங்கள் உள்ளன.

இந்தச் சிறப்புத் திட்டத்தின் கீழ் வாடிப்பட்டி, அலங்காநல்லூர் ஆகிய இரு வட்டாரங்களில் மேலும் பல்வேறு வகைகளில் மின் இணைப்பு நீட்டிக்கப்படும். இந்த வட்டாரத்தில் 52 மக்கள்தொகை கணக்கெடுப்புக்குட்பட்ட கிராமங்களில் உள்ளன.

இந்த இரு வட்டாரங்களில் இப்பொழுது 1,059 வேளாண்மை விசையேற்றங்கள், 3,975வீடுகள் 644 வணிகக் காரியங்கள், 110 தொழில் குறைவழுத்த சர்வீசுகள், 2,031 தெருவிளக்குகள் ஆகியவற்றிற்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டு உள்ளது.

வாடிப்பட்டி, அலங்காநல்லூர் ஆகிய இரு வட்டாரங்களில்,இச்சிறப்புத் திட்டத்தின்கீழ், இப்பொழுதுள்ளதற்கு மேல் மேலும் 360 வேளாண்மை விசையேற்றங்கள், 150 குறைவழுத்த மின் சக்தி பயன்படுத்தும் தொழில்கள் 2,470 வீடுகள், 290 வணிகக் காரியங்கள், 1,130 தெருவிளக்குகள், ஆகியவற்றிற்கு ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக மின்வசதி நீட்டிக்கப்படும்.

இந்த இரு வட்டாரங்களில் 460 கிணறுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படக்கூடிய வகையில் போதிய நிலநீர் இருப்பதாக நிலநீர் ஆய்வு இயக்குநர் சான்றளித்துள்ளார். ஆகவே, திட்டமிடப்பட்டுள்ள 360 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிப்பது, இந்த எண்ணிக்கை அளவுக்குள்ளாகவே உள்ளது.

இந்தத் திட்டத்திற்காகும் செலவு மதிப்பீடு ரூ. 37.735 இலட்சமாகும். இந்த 37.735 இலட்சம் ரூபாயினைப் புது டில்லியில் உள்ள கிராம மின் வசதி இணையம் கடனுகை வழங்க அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழகத்தின் கிராமங்கள்—சிற்றூர்கள் அனைத்திலும், தெரு விளக்குகள் மூலமாக மின்வசதி அளித்தல் என்பது மட்டுமல்லாமல், மேலும் பல்வேறு வகைகளிலும் மின்வசதி நீட்டிக்கப்பட வேண்டும் என்ற புனிதமான பணியில் இந்த வாடிப்பட்டி—அலங்காநல்லூர் சிறப்புத் திட்டம், அந்தப் பகுதி வாழ் மக்களின் முன்னேற்றத்திற்கு அடிகோலும் ஒரு சீரிய அங்கமாகும்.



# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## • சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்



சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரு. 5 | ரு. 355 |
| | ரு. 10 | ரு. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரு. 5 | ரு. 337.50 |
| | ரு. 10 | ரு. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

# மாவட்டங்களிலிருந்து...

## சேலம் பவானிசாகரில் இளைஞர் அணி

எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்தறிவைப் புகட்டுவதும், நல்வாழ்வியலைக் கிராம மக்களிடையே பரப்புவதும், சமூகத் தீமைகளை நீக்கிட உதவுவதும் இளைஞர் அணித் திட்டத்தின் நோக்கம் என்பதை நாமறிவோம். குறிப்பாகப் படித்த இளைஞர்களின் மனத்தில் தொண்டு செய்யும் எண்ணத்தை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கம் எனலாம்.

கோவை மாவட்டத்திலுள்ள பவானி சாகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களுக்கு இளைஞர் அணியில் இரண்டு திங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் போது அனுபவம் மிக்க ஆசிரியப் பெருமக்களால் இந்தியச் சமுதாய நிலை, முதியோர் கல்வி, நல்வாழ்வியல், வேளாண்மை, சமுதாய இயலாமைகளைக் களைதல், கிராம மக்களை அணுகும் முறைகள், குடும்ப நலத்திட்டம், விளையாட்டுகள் முதலியன பற்றிப் போதிக்கப்படுகின்றன. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோழிப்பண்ணை, மீன்துறை ஆகியவற்றை நேரில் கண்டு நிலையறியும் வாய்ப்புகள் அளிக்கப்படுவதுடன், பத்து நாட்கள் கிராம நிலைப்பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

சேலம் மாவட்டத்திலுள்ள பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் பதினெட்டு இளைஞர் அணியினர் பணியாற்றி வருகிறார்கள். பள்ளிப்பாளையம் ஊராட்சி மன்றப் பகுதியில் உள்ள வெடியரசம்பாளையம் என்னும் கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மூவர் பணியாற்றி வருகின்றனர்.

வெடியரசன் பாளையம் ஒரு சிறிய கிராமம். இக்கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி ஒன்றும், தானியங்கித் தண்ணீர்ப் பொறிகள் இரண்டும், வானொலிப் பெட்டி ஒன்றும் உள்ளன. இடையறாது இயங்கிக்கொண்டிருக்கும் விசைத்தறிகளும் பல உண்டு. இவ் விசைத்தறிகள் பலருக்கு வாழ்வளித்து வருகின்றன.

முதியோர்களுக்கு எண்ணையும் எழுத்தையும் கற்றுக் கொடுப்பதோடல்லாமல், அவ்வப்போது சுற்றுப்புறச் சுகாதாரத்தையும் நல்வாழ்வையும் பற்றி எடுத்துக் கூறப்படுகிறது. அன்றாட நிகழ்ச்சிகளைச் செய்தித்தாள்கள் மூலம் படித்து அறிவிக்கப்படுகிறது. அவர்களுக்கு வரும் கடிதங்களைப் படித்துக் காட்டியும், அவர்கள் கூறுகிற செய்திகளை எழுதிக்கொடுத்தும் உதவி புரிகின்றனர், இளைஞர் அணியினர். முதியோர் கல்வி தவிர, மாலை நேரங்களில் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்குக் கல்வியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

பொதுச் சுகாதாரம் பேண வேண்டிய அவசியத்தையும், பேணுவதால் ஏற்படும் நன்மைகளையும், கழிவுப்பொருள்களை அப்புறப்படுத்தும் முறைகளையும் வீட்டுத் தோட்டம் போடுவதால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கமாக எடுத்துக் கூறப்படுகின்றன. சிறுசேமிப்புத் திட்ட இயக்கம், குழந்தைகள் காப்பகம் வைத்து நடத்துதல் போன்றவற்றில் ஒன்றிய ஊழியருக்கு ஒத்துழைப்பும் தருகிறது, இளைஞர் அணி.

## மதுரை மாவட்டத்தில் மகளிர் நலம்

குடும்பநலனைப் பேணவும், மகளிர்க்குப் பல வகையிலும் கல்வி புகட்டவும், சமுதாய நலனில் முன்னேற்றம் காண அவர்கள் சமுதாயத்தில் பங்கேற்றுப் பணியாற்றவும், வருங்காலச் செல்வங்களான குழந்தைகளை நன்முறையில் வளர்க்கவும், மதுரை மாவட்டத்தில் மகளிர் மன்றங்களும், குழந்தைகள் காப்பகங்களும் சிறப்பாக இயங்கி வருகின்றன.

இம்மாவட்டத்தில் 34 வட்டாரங்களில் ஒவ்வொன்றிலும் 30 மகளிர் மன்றங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மன்றமும் அவ்வூரிலேயே சமூக நலனில் ஈடுபாடுடைய பெண்மணியால் சிறப்பாக நடத்தப்படுகின்றது. இந்த மகளிர் மன்றங்களில் குழந்தை வளர்ப்பு, சுகாதாரம், சமூக நலம், முதியோர் கல்வி ஆகியவை பற்றிய விளக்கக் கூட்டங்களை நடத்தவும், சத்துணவு பற்றிப் பேசவும், செயல்படவும், நலிவு, எருக்குழி, வீட்டுத் தோட்டம் போடுதல் முதலியவற்றைச் செய்முறையில் காட்டவும், குடும்பநலக் கொள்கை விளக்கம் செய்யவும் அதனைச் செயலாற்றவும் வழி காண்கின்றனர்.

இவை மட்டுமா? சிறுசேமிப்பிலும் தீவிர அக்கறை காட்டுகின்றனர். தையல், கூடை பின்னுதல், கோழி வளர்த்தல், ஆடுமாடு வளர்த்தல் முதலியன பற்றி அறிதலும், செயலாற்றுதலும் வருவாயைப் பெருக்க வழியேற்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொன்றாக மொத்தம் 34 வானொலி மன்றங்கள் மகளிருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கோடைக்கானல் வட்டாரத்தில் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 10 சிறுவர் பள்ளிகளிலும் வானொலிப் பெட்டிகள் உள்ளன. கோவில்பட்டி மகளிர் மன்ற அங்கத்தினர் 5 பேருக்கும், குழந்தைகள் காப்பகக் குழந்தைகளுக்கும் பாலளிக்க 5 பால் மாடுகள் வாங்கியளிக்கப்பட்டுள்ளன. 10 வானொலிப் பெட்டிகள் 10 மகளிர் மன்றங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்ட வட்டாரங்களில் மொத்தம் 127 குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திற்கும் பயிற்சி பெற்ற பால சேவிகா நியமிக்கப் பட்டுள்ளார். 2 முதல் 5 வயதுவரையுள்ள 40 குழந்தைகள்வரை ஒரு காப்பகத்தில் உள்ளனர்.

குழந்தைகள் அறிவு வளர்ச்சி உடல் வளர்ச்சி பெறவும், வாய்மொழிக் கல்வி, பெரியோர்களிடம் பணிவு, ஒற்றுமை, அன்போடு இணைந்து பழகிப் பகிர்ந்துண்ணல், நற்பழக்கம் பெறுதல் ஆகியவற்றைக் கற்றுத்தரவும், கதைகள், பாடல்கள், பேச்சுப் போட்டிகள், உடற்பயிற்சி, பார்த்தறிதல், செய்து காட்டல் முதலானவைகளில் பயிற்சி அளித்தல் பால சேவிகாவின் பணியாகும்.


செய்தியே
ரூ.1 கோடி
கைத்தறி நெசவாளர்
துயர் தவிர்த்திட
ஒரு கோடி ரூபாய் கடனுதவி
தமிழக அரசு வழங்கும்.
தமிழ்நாட்டில் 1973-
74-ஆம் ஆண்டில்
சூரியகாந்தி 2.5 லட்சம்
ஏக்கரில் பயிரிடப்படும்.
தமிழ்நாடு அரசு
போக்குவரத்துக் கழகங்களில்
பணியாற்றும் தொழிலாளர்களுக்கு
முதலீட்டில் பங்கும்
நிருவாகத்தில் பொறுப்பும்
அளிப்பதை மத்திய அமைச்சர்
டி.ஏ.பாய் 'சோசலிசத்தை
நோக்கி எடுக்கப்பட்டுள்ள
மிகவும் துணிச்சலான திட்டம்'
என்று பாராட்டியுள்ளார்.
சித்திரமே!



தமிழ்நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் மேலும் 375 பி.டி. பட்டதாரி ஆசிரியர்களையும், 1100 செகண்டரி கிரேட் ஆசிரியர்களையும் நியமித்திட தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.
கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் விதை நுட்பத் துறை ஆராய்ச்சிக் கூடம் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது.
விதை நுட்பத் துறை
ஆராய்ச்சிக் கூடம்
எட்டயாபுரத்தில் பாரதியார் பிறந்த வீட்டை வாங்கித் தமிழக அரசு தொல்பொருள் துறை நினைவுச் சின்னமாக்கியுள்ளது.
தமிழக அரசு தொல்பொருள் துறை
எட்டயாபுரம்
சாமி..

# தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சி இந்த ஆண்டுத் திட்டங்கள்

"பழைய முறை மாற்றிப் பயிர் செய்தால்
நிறையப் பலன் கிடைக்க வழியுண்டு;
உழக்குத்தான் மிச்சமென்னும் இருட்டு நிலை
கிழக்கு வெளுத்தது போல் மறைந்துவிடும்!''

என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதற்கிணங்க, பழைய சாகுபடி முறைகளைக் கைவிட்டு, புத்தம் புதிய உயர் விளைச்சல் தரும் ரகங்களையும், சாகுபடி முறைகளையும், நவீனக் கருவிகளையும் பயன்படுத்தி—இயற்கை அடுத்தடுத்துப்பல இன்னல்களை ஏற்படுத்திய போதிலும், மனந்தளராமல்—காலமெல்லாம் கடுமையாகப் பாடுபட்டுப் தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தியை விரைந்து பெருக்கி வரும் தமிழக உழவர் பெருமக்களே!

புத்தம் புது ரகங்களையும், சாகுப்டி முறைகளையும், நவீன உழவுக் கருவிகளையும் கண்டுபிடித்துக் கொடுக்கும் வேளாண்மை விஞ்ஞானிகளே!

உழவுத் தொழிலை உழவர்கள் விழுமிய முறையில் செய்ய உதவும் வேளாண்மை, கூட்டுறவு, பொதுப்பணி, வருவாய், மின்சாரம், ஊரக வளர்ச்சி, அனைத்து இந்திய வானொலி ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்களே! ஊழியர்களே!

தமிழ்நாட்டின் வேளாண்மை வளர்ச்சிக்கு உதவும் தனியார் துறையினரே!

உழவர் சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்களே! தம்பிகளே! தங்கைகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து சென்ற ஆண்டில் அதாவது 1972—73-ஆம் ஆண்டில் வறட்சி வாட்டிய போதிலும், வெள்ளமும் புயலும் வெகுவாகச் சேதப்படுத்திய போதிலும், ஏறத்தாழ 72.02 இலட்சம் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்துகொடுத்துத் தமிழ்நாடு அரசின் இலட்சியம் நிறைவேற ஒத்துழைப்புக் கொடுத்தமைக்காக உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எந்த ஒரு நாட்டில் உணவுப் பிரச்சினை இல்லையோ, அந்த நாட்டில்தான் அந்த நாட்டு மக்களிடத்தில்தான் அறிவு வளர்கிறது; அன்பு தழைக்கிறது; வீரம் செறிந்து காணப்படுகிறது; கலை மிளிர்கிறது; மொழி வளர்கிறது; எல்லாவற்றிற்கும் மேலாக அமைதியும், சமத்துவமும் நிலவுகிறது என்பது வரலாறு காட்டும் சான்றுகளாக உள்ளன.

பாரதப்போர் நடந்த காலத்தில் பாண்டவர்களின் படைகளுக்குத் தமிழகந்தான் உண்டி கொடுத்து உதவியதென்று பழந்தமிழ் இலக்கியங்கள் பகர்கின்றன!

காவிரிப் பூம்பட்டினத்துக் கடற்கரையிலே, பிற நாடுகளுக்கு மரக்கலங்களின் மூலம் அனுப்புவதற்காகச் செந்நெல் மணிகள் குன்றுகளெனக் குவியல் குவியல்களாக குவித்து வைக்கப்பட்டிருந்ததாக ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான 'சிலப்பதிகாரம்' செப்புகிறது.

கரிகாற் சோழன் காலத்திலே ஒரு வேலி நிலத்தில், 1,000 கலம் நெல் விளைந்தது எனப் 'பொருநர் ஆற்றுப்படை' என்ற பழந்தமிழ் நூல் பறைசாற்றுகின்றது.

இவ்வாறு பழங்காலத்தில், தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி பெருகியிருந்த காரணங்களால் தான், அன்று தமிழரின் அறிவும் ஆற்றலும், அன்பும், வீரமும், கலையும், நாகரிகமும் வளர்ந்து பிற நாட்டினரும் புகழும் வண்ணம் தனித்துவம் பெற்று விளங்கியுள்ளன. அத்துடன் தமிழ் வளர்ந்தது! தமிழர் வாணிபம் சிறந்திருந்தது! தமிழ்நாட்டின் புகழ் தரணி எங்கும் பரவியிருந்தது! இவைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, 'டாலமி', 'யுவான் சுவாங்' போன்ற பிறநாட்டு வரலாற்று அறிஞர்களும் பாராட்டியுள்ளனர்.

எனவே, வேளாண்மையே ஒரு நாட்டின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும், முக்கியமானது என்பது தெளிவாகிறது. வேளாண்மையின் முக்கியத்துவத்தை விளக்க,

''சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை!''

என்ற குறள் ஒன்றே போதும்! உலகுக்கெல்லாம், உழவுத் தொழிலின் இன்றியமையாமையை இத் திருக்குறள் எடுத்தியம்பி வருகிறது! இத்தகைய சிறப்பினைப் பெற்றுள்ள உழவுத் தொழிலே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் மூலாதாரமானது என்றால் மிகையல்ல!

### வேளாண்மையின் மேன்மை

தமிழ்நாட்டின் மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 41 சத அளவைக் கொடுத்து வருவதுடன், தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 60 சத அளவினருக்கு வேலைவாய்ப்பை அளித்து வருவது வேளாண்மையும், அதன் அடிப்படையான தொழில்களுமே என்பதை நன்கு உணர்ந்துள்ளதாலேயே இன்றையத் தமிழ்நாடு அரசு வேளாண்மை வளர்ச்சிக்கு—பசுமைப் புரட்சிக்கு—முதலிடம் கொடுத்து வருகிறது.

### பசுமைப் புரட்சி!

காலமெல்லாம் உழைத்து ஓடாகி, கூனிக் குறுகிப்போன ஏழை உழவர்கள் நிமிர்ந்து நடக்க வேண்டும்! குழிவிழுந்து ஒளியிழந்துபோன ஏழை உழவர்களின் கண்களிலே ஒளி பிறக்க வேண்டும்! வயிற்றுக்கும், வாய்க்

கும் பற்றாத நிலையிலே வாழ்ந்து வரும் எண்ணற்ற புன்செய் நில உழவர்களின் வாழ்விலே வளம் சேர்க்க வேண்டும்! என்ற இலட்சியங்களை மனத்திற்கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்துப் பசுமைப் புரட்சியைத் தோற்றுவித்தார்! பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, அவர் வழியில் ஏழை உழவர்களின் வாழ்வை வளமாக்க முயன்றுவரும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு முதலிடம் அளித்து, அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்ட பசுமைப் புரட்சியைப் பரவச் செய்து, 'ஆல்போல் தழைத்து அருகுபோல் வேர் விட்டு' நீண்ட காலத்திற்கு நிறைவான பயன்தர, ஆவன செய்து வருகின்றார்!

இதன் பயனைத் தமிழ்நாட்டின் வேளாண்மை, பிற மாநிலத்தவரும், பிற நாட்டினரும் பார்த்துப் பாராட்டும் அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது! 1967–68-ஆம் ஆண்டு வரை உணவுப் பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழ்நாடு, இன்று உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளதோடு பிற மாநிலங்களின் பசிப்பிணி தீர்க்கும் மாநிலமாகவும் வளர்ந்துள்ளது!

### வறட்சியும் வெள்ளமும்

சென்ற ஆண்டில், மே மாதம் முடிவதற்குள் தென்மேற்குப் பருவ மழை பொழிய ஆரம்பித்தது! ஆனால், தென்மேற்குப் பருவ மழை போதிய அளவுக்குப் பெய்யாததாலும், பெய்த மழையும் பரவலாகப் பெய்யாததாலும் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் பல பகுதிகளில் வறட்சி நிலை நிலவியது. இதனால் சென்ற ஆண்டின் குறுவைப்பட்ட காலத்தில் உணவு தானிய விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக உணவு தானிய உற்பத்தியில் 1 இலட்சம் டன் அரிசி, 0.86 இலட்சம் டன் சோளம், 0.58 இலட்சம் டன் கம்பு, 0.10 இலட்சம் டன் பருப்பு வகைகள் ஆக மொத்தம் 2.54 இலட்சம் டன் அளவுக்கு உணவு தானியங்களில் உற்பத்திக் குறைவு ஏற்பட்டது.

சென்றஆண்டில் அக்டோபர்த் திங்களில் துவங்கிய வடகிழக்குப் பருவ மழையும், அக்டோபர் இடைப்பகுதி வரை தீவிரமாகப் பெய்யவில்லை; பிறகு நல்ல மழையைக் கொடுத்தது. நவம்பர் முடிவதற்குள்ளாகவே, வடகிழக்குப் பருவ மழையால் பயன்பெறும் நீர்த்தேக்கங்களெல்லாம் நிரம்பி வழிந்தன! அதைப்பயன்படுத்தி, நவரைப் பருவத்தில் உற்பத்தியைப் பெருக்கிடலாம்; அதன்மூலம் தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட உற்பத்திக் குறைவை ஈடுகட்டிடலாம் என்ற எண்ணத்துடன் உழவர் பெருமக்கள் ஆற்றுப்பாசனங்களின் கீழும், ஏரிப் பாசனங்களின்கீழும் சாகுபடிவேலைகளைத் தீவிரப்படுத்தினர்! ஆனால் டிசம்பர்த் திங்களில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தத்தால் தமிழகமெங்கும் கனத்த அடைமழை பெய்தது; புயல் தோன்றியது! டிசம்பர் முற்பாதியில் தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, வடஆர்க்காடு சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் புயற்காற்றின் கொடுமைகளுக்கும் வெள்ளத்தின் தாக்குதலுக்கும் உள்ளாயின.

வெள்ளத்தினால் தமிழ்நாட்டில் 2.20 இலட்சம் ஏக்கர் நெற்பயிரும், 50,000 ஏக்கர் பருத்திப் பயிரும், 12,000 ஏக்கர் கரும்பும், 22,000 ஏக்கர் இதர பயிர்களும் பாதிக்கப்பட்டன. வெள்ளத்தின் காரணமாக 13,500 ஏக்கர் விளைநிலங்கள் மணலால் மூடப்பெற்று, மணலை அகற்றினாலன்றிச் சாகுபடி செய்ய முடியாது என்ற நிலையை அடைந்தன. எனவே, வெள்ளத்தினாலும் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது.



மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தருமலிங்கம்

வேளாண்மை உற்பத்தியைச் சீர்குலைக்கும் இரட்டைப் பிறவிகள் என்று சொல்லப்படும் வறட்சியும், வெள்ளமும் சென்ற ஆண்டில்அடுத்தடுத்து தோன்றித் தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தியை வெகுவாகச் சீர்குலைத்துவிட்ட போதிலும், தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாகச் சென்ற ஆண்டில் தமிழ்நாட்டில் 55.00 இலட்சம் டன் அரிசியும், 15.10 இலட்சம் டன் சிறு தானியங்களும், 1.92 இலட்சம் டன் பருப்பு வகைகளும் ஆக மொத்தம் 72.02 இலட்சம் டன்கள் உணவு தானியங்கள் உற்பத்தியாகி உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ள மகிழ்ச்சியான நிலை மலர்ந்துள்ளது.

### ஆறாண்டுச் சாதனை

தமிழ்நாட்டில், 1965-66-ஆம் ஆண்டில் 35.24 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி, 1972-73-ஆம் ஆண்டில் 55 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.!

தமிழ்நாட்டில், 1966-67-ஆம் ஆண்டில் 54.58 இலட்சம் டன்களாக இருந்த தானிய உற்பத்தி 1972-73-ஆம் ஆண்டில் 72.02 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது!

எனவே, கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி விரைந்து பெருகி வருகிறது என்பதும், இதற்குக் காரணம் இன்றைய அரசு மேற்கொண்டுவரும் திட்டங்களே என்பதும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாத உண்மைகளாகும்! 1966-67-ஆம் ஆண்டில் 5.27 இலட்சம் ஏக்கரில் மட்டுமே உயர் விளைச்சல் ரகங்கள் சாகுபடி செய்யப் பட்டிருந்தன. ஆனால், தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தீர முயற்சிகளின் காரணமாகவும், உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடமுன்வரும் உழவர் பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசு கொடுத்துவரும் ஊக்கத்தின் காரணமாகவும், உயர் விளைச்சல் ரகங்களின் சாகுபடிபரப்பு, ஆண்டிற்காண்டு பன்மடங்காகப் பெருகி, 1971—72-ஆம் ஆண்டில் 64.14 இலட்சம் ஏக்கர் என்ற நிலையை அடைந்தது. 1972-73-ஆம் ஆண்டில், 55 இலட்சம் ஏக்கரில் உயர் விளைச்சல்

தரும் நெல் வகைகளும், 4.15 இலட்சம் ஏக்கரில் ஒட்டு வீரிய சிறுதானிய வகைகளும், 11 இலட்சம் ஏக்கரில் எச்.பி. 3 கம்பும் பயிரிடத்திட்டமிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில், இலக்கினை மிஞ்சும் அளவுக்கு உயர்விளைச்சல் ரகங்கள் பயிரிடப் பெற்றுள்ளன.

### முனைப்பான முயற்சிகள்!

சென்ற ஆண்டில் வறட்சியினுலும், வெள்ளத்தினுலும் ஏற்பட்ட உற்பத்திக் குறைவை ஈடு செய்யத் தமிழ்நாடு அரசு அவசரக்காலப் பின் பருவத் திட்டத்தைத் (Emergency Rabi Programme) தீட்டிச்செயல்படுத்தியது இத்திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு நவரைப் பருவத்தில் தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு ஆகிய 3 மாவட்டங்களிலும் 4.82 இலட்சம் ஏக்கரில் ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போன்ற உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் பயிரிடத் திட்டமிட்டு, திட்டமிட்டபடி பயிரிடப்பட்டுள்ளது. அது போலவே கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் 4.13 இலட்சம் ஏக்கரில் சிறு தானிய வகைகளை இறைவையாகப் பயிரிடவும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 5.5 இலட்சம் ஏக்கரிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்டத்தில் 60,000 ஏக்கரிலும் பருப்புவகைப் பயிர்களைப் பயிரிடவும் முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றன.

அவசரக் காலப் பின்பருவத் திட்டத்தின்கீழ் நெல், சிறுதானியங்கள், பருப்பு ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளப் பெற்ற முயற்சிகள் பெரும் வெற்றியடைந்துள்ளன. இத் திட்டத்தின் கீழ் பயிரிடப் பெற்ற பயிர்கள் தற்பொழுது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு இடைவிடா முயற்சியுடன் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயன்று வந்துள்ள தமிழ்நாடு அரசு இந்த ஆண்டில் அதாவது 1973—74-ஆம் ஆண்டில் பல முனைப்பானத் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

### தேவைக்கு ஏற்ற உற்பத்தி!

விரைந்து பெருகிவரும் தமிழ் நாட்டு மக்களின் தேவைக்கேற்ப உணவு, உடை முதலிய இன்றியமையாப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதும், வேளாண்மையே தங்களின் பிழைப்புக்கு வழியாகக் கொண்டுள்ள உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத்துவதும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கி அவர்களின் அன்றாட வருவாய்க்கு உறுதி ஏற்படுத்துவதும் தன் கடமையே எனக் கருதி, அந்நிலையை உருவாக்கத் தமிழ்நாடு அரசு முழு மூச்சுடன் உழைத்து வருகிறது.

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், ஆக்கப் பணிகளுக்கும் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்ட ஓரளவுக்கேனும் தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண்மைப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டியுள்ளது.

தமிழ் நாட்டில் ஏதேனும் ஒரு ஆண்டில் பருவ நிலை பாதித்து விடுமானுல், அந்த ஆண்டில் ஏறத்தாழ 10 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தி குறைந்துவிடும் என்பது காலம் நமக்குக் கற்றுத் தந்த பாடமாகும்! எனவே, தமிழ்நாட்டில் எப்பொழுதும், 10 இலட்சம் டன் உணவு தானியங்களை இருப்பு வைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்.

இக்காரணங்களின் அடிப்படையிலேயே, வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 18 அவுன்சு உணவு தானியம் வழங்குவதற்காக 64·50 இலட்சம் டன்கள், ஏற்றுமதி செய்வதற்காக 3 இலட்சம் டன்கள், இருப்பு வைப்பதற்காக 10 இலட்சம் டன்கள், விதைக்காக 1.50 இலட்சம் டன்கள், ஆக மொத்தம் 79 இலட்சம் டன்கள் உணவு தானியங்களைத் தமிழ் நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலட்சியத்திற் கேற்ப, இந்த ஆண்டில் 79 இலட்சம் டன்கள் உணவு தானியங்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல; சத்துணவு ஆராய்ச்சியின்படி தமிழ்நாட்டிலுள்ள வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 10 அவுன்சு காய்கறிகளும், 3 அவுன்சுப் பழங்களும், 3 அவுன்சு பருப்பு வகைகளும் கிடைத்திடச் செய்வதற்காகவும் தமிழ் நாடு அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.



### மிகுபயன்தரும் தானிய வகைத் திட்டம்!

ஒரு மணி தானியம் விளைந்த இடத்தில் இரு மணி தானியமும், ஒரு கதிர் விளைந்த இடத்தில் இரு கதிர்களும், ஒரு போகம் விளைந்த நிலத்தில் இரு போகமும் இரு போகம் விளைந்த நிலத்தில் முப்போகமும், முப்போகம் விளைந்த நிலத்தில் நான்கு போகமும் விளைவிப்பதையே இலட்சியமாகக் கொண்டு இயங்கிவரும் இன்றையத் தமிழ்நாடு அரசு, உயர் விளைச்சல் தரும் தானிய வகைத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 55 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் நெல்வகைகளையும்

4·15 இலட்சம் ஏக்கரில் ஒட்டு வீரிய சிறு தானியங்களையும், 11 இலட்சம் ஏக்கரில் எச். பி. 3. கம்பு ரகத்தையும் பயிரிடத் தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

மேலும், சென்ற ஆண்டில் ஏற்பட்ட உணவு உற்பத்திக் குறைவை இந்த ஆண்டின் துவக்கத்திலேயே ஈடு செய்யத் தற்பொழுது நீர் நிலைகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தி அவசரக்காலக் கோடைப் பருவப் திட்டத்தைச் (Emergency Summer Programme) செயல் படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் ஐ. ஆர். 8. மற்றும் இதர உயர் விளைச்சல் தரும் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு ரகங்களை 2.75 இலட்சம் ஏக்கரில் பயிரிட முனைப்பான முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.



### பருப்பு உற்பத்தி

வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்குக் குறைந்தது 56 கிராம் பருப்பு வகைத் தேவைப்படுகிறது! ஆனால், நமக்குத் தற்பொழுது நாளொன்றுக்கு 8 கிராம் பருப்பு வகைகளே சராசரியாகக் கிடைக்கிறது. எனவே, பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பருப்பு வகை விரைவுத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் தனிப் பயிராகவும், ஊடு பயிராகவும் மொத்தம் 23.5 இலட்சம் ஏக்கரில் பருப்பு வகைப்பயிர்களைப் பயிரிடத் திட்டமிட்டுள்ளோம்!

### எண்ணெய்ப் பற்றுக்குறை நீங்கிவிடும்!

நம் ஒவ்வொருவருக்கும் உணவுக்காக நாளொன்றுக்கு 57 கிராம் எண்ணெய் தேவைப்படுகிறது! இந்த அளவு எண்ணெய் கிடைக்கத் தமிழ் நாட்டில் 31 இலட்சம் டன் எண்ணெய் வித்துகள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். ஆனால், தற்பொழுது தமிழ்நாட்டில் 11 இலட்சம் டன் எண்ணெய் வித்துகள்மட்டுமே உற்பத்தியாகி வருகிறது. எனவே, உணவுக்காகத் தேவைப்படும் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த ஆண்டில் 3.75 இலட்சம் ஏக்கரில் சூரியகாந்தியைப் பயிரிடவும், 500 சூரியகாந்திச் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. மேலும், இந்த ஆண்டில் எண்ணெய் வித்துகள்மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் 13 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்வதற்காக, நிலக்கடலை முனைப்புத் திட்டத்தின் கீழ் 3·65 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடவும், 240 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும், நிலக்கடலை ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 8.58 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடவும், 1,540 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும், ஆமணக்கு செய்முறை விளக்கத் திட்டத்தின் கீழ் 200 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இந்த ஆண்டின் முடிவில் எண்ணெய் உற்பத்தி பெருகி, எண்ணெய்ப் பற்றுக்குறை நீங்குவதுடன், எண்ணெய் விலையும் கணிசமாகக் குறைந்துவிடும் என நம்பலாம்.

பல பயிர் முன்னோடித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் முசிறி வேளாண்மைக் கோட்டத்தில் 14,375 ஏக்கரிலும், கடலூர் வேளாண்மைக் கோட்டத்தில் 13,160 ஏக்கரிலும் பட்டுக்கோட்டை வேளாண்மைக் கோட்டத்தில் 12,675 ஏக்கரிலும் கூடுதலாகப் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### உலகம் வியக்கும் அமைதிப் புரட்சி!

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சை மாவட்டத்தில் 1966—67-ஆம் ஆண்டில் 8.77 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி, 1971—72-ஆம் ஆண்டில் 13·59 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. இதற்கு மூலகாரணம் இன்றையத் தமிழ்நாடு அரசு கொண்டு வந்த இருபோகச் சாகுபடித் திட்டமே! பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டு வந்த தஞ்சை மாவட்டத்தில், இரு போகச் சாகுபடி முறையைக் கொண்டு வந்து உலகம் வியக்கும் அமைதிப் புரட்சியை (Silent Revolution) ஏற்படுத்தியவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களுமே என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். Intensive Agricultural District Programme எனப்படும் தீவிர வேளாண்மை மாவட்டத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வரும் தஞ்சை மாவட்டத்தின் உணவு உற்பத்தியை, இந்த ஆண்டில் மேலும் கணிசமான அளவிற்கு உயர்த்திட எல்லா வகையான முயற்சிகளையும், தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

"Intensive Agricultural Area Programme" எனப்படும் மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுவரும் செங்கற்பட்டு திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களிலும் இந்த ஆண்டில் 1,405 ஒருங்கிணைந்த செய்முறை விளக்கப் பாத்திகளும், தண்ணீரை விவேகமுடன் பயன்படுத்திச் குறைந்த அளவு நீரைக்கொண்டு நிறைந்த பயனைப் பெறுவது பற்றி 76 செய்முறை விளக்கப் பாத்திகளும் அமைக்கப்படவிருக்கின்றன.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப்பகுதியில் நடப்பாண்டில் 103 பயிர்முறை விளக்கப் பண்ணைகள் அமைக்க ரூபாய் 49,500 ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தாறு—



பட்டணங்கால் திட்டப் பகுதியில் 46 பயிர் முறை விளக்கப் பண்ணைகள் அமைக்க ரூபாய் 8,500 ஒதுக்கப்பட்டுள்ளது.

### நீலமலை மேம்பாடு

நீலகிரி மாவட்டத்தினை வளப்படுத்தும் நோக்குடன் துவக்கப்பட்ட, இந்திய—ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தை இந்த ஆண்டில் மேலும் தீவிரமாகச் செயல்படுத்திட ஆவன செய்து வருகிறோம். உருளைக் கிழங்கு உற்பத்தியைக்குறைக்கும் பொன்னிற நூற்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு '' தாசனிட் '' என்ற மருந்து இறக்குமதி செய்யப்பட்டு, குறைந்த விலையில் உருளைக் கிழங்குச் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இம் மருந்தை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்படும் சுங்கவரிக்கு விலக்கு அளிக்குமாறு இந்திய அரசைத் தொடர்ந்து கேட்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்,

### பழத்தோட்டம் அமைப்போம்

தமிழ் நாட்டின் பழ உற்பத்தியைப் பெருக்குவதற்காக, புதிதாகப் பழத் தோட்டம் அமைக்க முன்வரும் ஒவ்வொருவருக்கும் திராட்சை பயிரிடுவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 1,500 வீதமும், உயர்ந்த அளவாகத் தனிப்பட்ட ஒருவருக்கு ரூ. 6,000 வீதமும், மா, கொய்யா போன்ற இதர பழத் தோட்டம்அமைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 300 வீதமும், உயர்ந்த அளவாகத் தனிப்பட்ட ஒருவருக்கு ரூபாய் 2,000 வீதமும் இன்றைய அரசு நீண்ட காலக் கடன் வழங்கி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில்1,800ஏக்கரில் புதிதாகப் பழத்தோட்டம் அமைக்க நீண்ட காலக் கடன் வழங்கப்படும்.

வாழை பயிரிடுவது குறித்த முனைப்புத் திட்டத்தின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 1,000 முதல் 1,500 வரை கூட்டுறவு, வணிக வங்கி ஆகியவைகளின் மூலம் குறுகிய காலக் கடன் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 25,000 ஏக்கரில் வாழை பயிரிடப்படும். காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஏற்றுமதி செய்யத்தக்க வாழை வகைகளை உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 7,500 ஏக்கர் பரப்பில் வாழை பயிரிடப்படும்.

கோடைக்கானல், கல்ராயன், ஜவ்வாது, கொல்லிமலை, பச்சைமலை ஆகிய 5 மலைப் பகுதிகளில் இந்த ஆண்டில் 1,160 ஏக்கரில் தோட்டப் பயிர்கள், காய்கறிகள் முதலியன பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தென்னை வளர்ப்போம் !

புதிதாகத் தென்னந்தோப்பு ஏற்படுத்த முன்வரும் உழவர்களுக்கு ஏக்கருக்கு ரூபாய் 300 வீதமும், தனிப்பட்ட ஒருவருக்கு உயர்ந்த அளவாக ரூபாய் 3,000 வீதமும், நீண்ட காலக் கடன் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 2,000 ஏக்கர் பரப்பில் தென்னை பயிரிடப்படும். நிலமற்ற ஏழைக் குடும்பங்களையும், இலங்கை அகதிகளையும் குடியமர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் கிழக்கு இராமநாதபுரம் தென்னை வளர்ப்புத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் தென்னை, முந்திரி வளர்க்கும் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 750 ஏக்கரில் தென்னை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் தென்னை நாற்றுப் பண்ணைகளிலிருந்து 8. 10 இலட்சம் தரமான தென்னங் கன்றுகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து உயரமான, குட்டையான கலப்பினத் தென்னங்கன்றுகள் 5,000 வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

### 'டாலர்' தரும் முந்திரி!

தமிழ் நாட்டிற்கு 'டாலர்' சம்பாதித்துக் கொடுப்பதில் முக்கியமானது முந்திரி ! புதிதாக முந்திரி பயிரிட ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 150 வீதமும், தனிப்பட்ட ஒருவருக்கு உயர்ந்த அளவாக ரூபாய் 3,000 வீதமும் நீண்ட காலக் கடன் கொடுக்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் புதிதாக 5,000 ஏக்கரில் முந்திரிப் சாகுபடி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது. முந்திரிப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 7,900 ஏக்கர் முந்திரிக்கு மருந்து தெளிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் முந்திரி உற்பத்தி 20 சத அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பருத்தி உற்பத்தியைப் பெருக்குவோம் !

தமிழ் நாட்டின் வாணிகப் பயிர்களில் முக்கியமானது பருத்தி. தமிழ் நாட்டிலுள்ள ஆலைகளுக்கு 7 இலட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் உற்பத்தியாவதோ 4 இலட்சம் பேல். இதனால் தமிழ்நாட்டில் பஞ்சு பற்றாக் குறை உள்ளது ! எனவே பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பருத்தி பயிரிடும் முழுப் பரப்பையும்,

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டிப் பகுதியைச் சார்ந்த மானாவாரி பருத்திப் பரப்பு முழுவதையும் மும்முரப்படுத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து பஞ்சு உற்பத்தியை 8 இலட்சம் பேல்களாக உயர்த்த இன்றைய அரசு பெரு முயற்சி செய்து வருகிறது. பருத்தி கட்டுப்கோப்புச் சாகுபடித் திட்டப் பகுதிகளில் 2·05 இலட்சம் ஏக்கரில் பல்வேறு அறிவியல் நுட்பங்களை மேற்கொண்டு பருத்திச் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் 5·35 இலட்சம் பேல் பஞ்சு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

புகையிலைக் கட்டுக்கோப்புச் சாகுபடித் திட்டத்தின்கீழ் 8,090 ஏக்கரிலும், எல்லா வளர்ச்சியும், அடங்கிய புகையிலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 12,000 ஏக்கரிலும் புகையிலை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது

**கரும்பு உறபத்தியை உயர்த்துவோம்!**

நடப்பாண்டில் தமிழ் நாட்டில் 3·20 இலட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிட்டுப் பல்வேறு திருந்திய முறைகளையும் மேற்கொண்டு கரும்பு உற்பத்தியை 112 இலட்சம் டன்களாகவும், வெல்ல உற்பத்தியை 11 இலட்சம் டன்களாகவும்உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

தமிழ் நாடெங்கும் 3,200 ஏக்கரில் காய்கறி பயிரிட, ஏக்கருக்கு ரூபாய் 120 வீதம் கடன் கொடுக்கவும், தருமபுரி மாவட்டம் ஒசூர் பகுதியிலும் கோடைக்கானலிலும் 5,200 ஏக்கரில் உருளைக் கிழங்கு பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தரமான விதை வழங்கிடுவோம்

உயர்ந்த மகசூலுக்கு விதைகளே மூலாதாரமாக உள்ளதால், சான்றளிக்கப்பட்ட தரமான விதைகளை உழவர் பெருமக்களுக்கு வழங்குவதை முக்கியக் கடமையாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை, இந்த ஆண்டில் 2,780 டன் முதல் நிலை நெல் விதைகளையும், 41,700 டன் இரண்டாம் நிலை நெல் விதைகளையும், 60 டன் முதல் நிலை சிறுதானிய விதைகளையும், 1,528 டன் இரண்டாம் நிலை சிறுதானிய விதைகளையும் வழங்கிடவிருக்கிறது.

### இரசாயன உரங்கள்

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குதவற்கு விதைகளுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்றது இரசாயன உரங்கள்! தேவையான உரங்களைத் தேவையான அளவில், தேவையான காலத்தில் வழங்கிடுவதற்குத் தமிழ்நாடு அரசு மிகுந்த முயற்சி எடுத்துவருகிறது! இந்த ஆண்டின் முன்பருவ காலத்திற்கு மட்டும் 1·20 இலட்சம் டன் தழைச்சத்துத் தேவைப்படும் என்று முன் கூட்டியே மதிப்பிட்டு, அந்த அளவு உரங்களை வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளது.

### பயிர்ப் பாதுகாப்பு

உழுது பரம்படித்து, உரமிட்டு விதைத்துவிட்டால் மட்டும் விளைந்துவிடுமா? விளையாது! பயிர்ப்பாதுகாப்புச் செய்தால்தான் எதிர்பார்க்கும் மகசூல் கிடைக்கும்! எனவேதான், திருவள்ளுவர்.

''ஏரினும் நன்றாம்
எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு!''



என்று குறிப்பிட்டுள்ளார். பயிர்ப் பாதுகாப்பின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தே, இன்றையத் தமிழ்நாடு அரசு இந்த ஆண்டில் ரூபாய் 570 இலட்சம் மதிப்புள்ள பூச்சி–பூஞ்சாள மருந்துகளை வழங்கத் திட்டமிட்டுள்ளது. கைகளால் இயக்கப்படும் தெளிப்பான்களையும், தூவான்களையும் உழவர் பெருமக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கவும், தேவையான விசைத் தெளிப்பான்களை வாங்கி உழவர்களுக்கு வேளாண்மைத் துறையில் வைத்திருந்து, வாடகைக்குக் கொடுத்து உதவவும் திட்டமிடப்பட்டுள்ளது. பூச்சி-பூஞ்சாள மருந்துகளை ஆய்வு செய்து தரமான மருந்துகளை வழங்கவும் பழுதடைந்த தெளிப்பான்களையும், தூவான்களையும் உடனுக்குடன் பழுது பார்த்து உழவர்களுக்கு வழங்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

பயிர்களுக்குப் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கும்போது உயிர் இழப்பவர்களின் குடும்பத்திற்கு இந்த ஆண்டுமுதல் ரூபாய் 1,000 உதவித் தொகை வழங்கவும் இன்றையத் தமிழ்நாடு அரசு முடிவு எடுத்துள்ளது.

களைகள் விளைச்சலை வெகுவாகப் பாதித்து விடுவதால் களைக் கொல்லிகளைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கிட இன்றையத் தமிழ்நாடு அரசு ஆர்வம் காட்டி வருகிறது. களைக் கொல்லிகளின் விலை அதிகமாக இருப்பதால், உழவர்கள் களைக் கொல்லிகளைப் பயன்படுத்த முன்வருவதில்லை! எனவே இந்த ஆண்டில் இரசாயனக் களைக்கொல்லிகளை 75 சத விலையில் வழங்கி 25,000 ஏக்கர் பரப்பில் களைக் கொல்லிகளைப் பயன்படுத்தும் திட்டத்திற்காக ரூபாய் 3·75 இலட்சம் செலவு செய்யத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### காஃபி–தேயிலை

வேளாண்மை மறுநிதிக் கழக உதவியுடன், இந்தஆண்டில்ஏரிக்காடு, பழநி மலைப்பகுதிகளில் 1,300 ஏக்கரில் காஃபி பயிரிடவும், தீவிரத் தேயிலைச் சாகுபடித் திட்

டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் 1,000 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடவும், தேயிலை சாகுபடியாகும் பரப்பை விரிவு படுத்தும் திட்டத்தின் கீழ், 3,000 ஏக்கரில் புதிதாகத் தேயிலை பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறு நிலக்கிழார் மேம்பாட்டிற்கு உதவும் சிறு நிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டமும், குறு நிலக்கிழார் மற்றும் பண்ணைத் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கு உதவும் குறு நிலக்கிழார் — பண்ணைத் தொழிலாளர் மேம்பாட்டுத் திட்டமும் இந்த ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் கோவில்பட்டி பகுதியில் 8,000 ஏக்கரும், புதுக்கோட்டைப் பகுதியில் 6,000 ஏக்கரும பயன்பெறும்.

## இயந்திர மயமாக்குவோம் !

மாடுகளோடு பிணைந்த தொழிலை இயந்திரமயமாக்கி, உற்பத்தியை பெருக்கிடுவதற்காக அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத் திட்டத்தின் மூலம் 3·75 கோடி ரூபாய் மதிப்புள்ள 1,500 டிராக்டர்களையும், உதிரிப் பாகங்களையும், 2·025 கோடி ரூபாய் மதிப்புள்ள துளைக்கிணறு அமைக்கும் இயந்திரங்களையும், மண்வாரி இயந்திரங்களையும் இறக்குமதி செய்யத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நடப்பாண்டில் 12,000 ஏக்கர் நிலத்தைச் சமப்படுத்தவும், 54,000 ஏக்கரில் இயந்திர முறைச் சாகுபடி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் இதுவரை 2,145 இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை விற்றுள்ளது. இக்கழகம், வேளாண்மைக் கருவிகளைத் தயாரிப்பதற்காகக் கிண்டி தொழிற்பேட்டைக்கு அருகில், ரூபாய் 5.82 இலட்சம் செலவில் அமைத்து வரும் நவீனப் பணிக்களரி இந்த ஆண்டில் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டில் சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 2,750 தனியார் குழாய்க் கிணறுகள் அமைக்கவும், 900 கிணறுகளில் துளையிடவும், 3,300 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தவும், 900 கிணறுகளை ஆழப்படுத்தவும், 10 சமுதாயக் கிணறுகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 1.20 இலட்சம் ஏக்கரில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## புதிய ரகங்கள் !

பசுமைப் புரட்சிக்கு உதவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் சென்ற ஆண்டில் 'பவானி' நெல், 'கோ. 10' கேழ்வரகு, 'கோ. 1' சப்போட்டா, 'எம். சி. யு. 7' பருத்தி ஆகிய முக்கிய ரகங்களைக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளது. மேலும் பல புதிய, பயன் தரும் ரகங்களை இந்த ஆண்டில் வெளியிட முயன்று வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைத் துறையின் கீழ் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் நடப்பாண்டில் குறுகிய கால ரகங்கள், வறட்சி தாங்கும் ரகங்கள் ஆகியவைகளைக் கண்டுபிடித்து வெளியிடவும், குறிப்பாகப் புன்செய் நிலச் சாகுபடியை இலாபகரமானதாக ஆக்குவதற்கான முறைகளைக் கண்டறிந்து தெரிவிக்கவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு இந்த ஆண்டில் தமிழ் நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிட்டுள்ள தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டின் விளைபொருள்களின் உற்பத்திச் செலவை ஆராயவும், அவைகளுக் கேற்பக் கட்டுப்படியாகக் கூடிய விலைகளை நிர்ணயம் செய்து பரிந்துரை வழங்கவும் ஒரு குழுவை அமைக்க முடிவு செய்துள்ளது என்பதைத் தமிழ்நாட்டின் உழவர் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## ஒத்துழைப்பு நல்குவீர்!

பசிப்பிணி தீர்க்கும் மருத்துவர்களாகவும், நாட்டின் முதுகெலும்புகளாகவும் விளங்கும் உழவர் பெருமக்களின் வாழ்வை வளமாக்கிட முயன்று வரும் இன்றையத் தமிழ்நாடு அரசுக்கு உங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டும் என்று தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கின்றேன்.

(12—4—1973 அன்று மாலை 7-03 மணிக்கு திருச்சி வானொலியில் ஒலிபரப்புப் பெற்ற சொற்பொழிவு)

## இனிய கனி கிடைத்திட...!

பழத் தோட்டங்களை வளர்ப்பவர்களுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்குவதன் மூலமும், பழ உற்பத்தி குறித்து இலவசமாகத் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதன் மூலமும் பழத் தோட்டங்கள் உள்ள பகுதியை அதிகப்படுத்தவும் தமிழ் நாட்டின் பழ வளர்ச்சித் திட்டம் உதவுகிறது. ஒவ்வொரு தனியாருக்கும் திராட்சை பயிரிடுவதற்காக நபர் ஒருவருக்கு ரூ. 6,000 என்கிற உயர்ந்த அளவுத் தொகைக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதமும், ஏனைய பழ மரங்களை வளர்ப்பதற்கு நபர் ஒருவருக்கு ரூ. 2,000 என்ற உயர்ந்த அளவுக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதமும் நீண்ட காலக் கடன்கள் வழங்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டம் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1973—74-ஆம் ஆண்டில் 1,800 ஏக்கர் நிலம் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவர முடிவுசெய்யப்பட்டுள்ளது.

பழத் தோட்டங்களை அறிவியல் முறையில் வளர்ப்பதற்கும், பழ உற்பத்தியாளர்களுக்குத் தேவைப்படும் நாற்றுகளை வழங்குவதற்கும், தரமான பயிரிடு பொருட்களை வழங்குவதற்கும் விளக்கப்பாத்திகளாகப் பணிபுரியும் பழத் தோட்டங்களை நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போது தமிழகத்தில் 9 பழத் தோட்ட நாற்றுப் பண்ணைகள் உள்ளன. ஒவ்வொரு பழத் தோட்டத்திலும் வழங்கப்படும் பயிரிடு பொருட்கள் கணிசமான அளவு உயர்ந்துள்ளது.



# குட்டுவன் எடுத்த கோட்டம்

கோவை இளஞ்சேரன்

கண்ணகிக்கு ஆர் விகுதி கொடுத்தவர் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். '' கண்ணகியார் மதுரை மூதூர் யாதென வினவின் திறத்தையுடைய'' என்பது அவர் தொடர். சேரன் செங்குட்டுவன், கண்ணகியார்க்குச் சிலை வடித்துக் கோட்டம் எடுத்த நிகழ்ச்சி,

தமிழக வரலாற்றில் ஒரு புகழ்முடி ;
உலக வரலாற்றில் ஒரு புதுமை ஏடு ;
தமிழர் மறக்கமுடியாத பெருமைச் சின்னம்.
அது,
மறுக்க முடியாத வைரத் தூணாகவும்
திகழ வேண்டும்.
அதற்கு,
ஓர் ஆராய்ச்சி முத்திரை குத்தியாகவேண்டும்.

கண்ணகியார் தம் இறுதிக் காலத்தில் ஏறி நின்ற நெடுவேள் குன்றம் எது? அக்குன்றில் 14 நாட்கள் நின்று இயற்கையெய்திய வேங்கைக் கானலின் தடம் காண இயலுமா? சேர மன்னன் எடுத்த கோட்டம் எங்கே? வடித்த சிலையைக் காணக் கூடுமா?

—இவ்வினுக்கள் நிறைவாக விடுக்கப்படாத புதிர்களாகவே நின்றன. அவிழ்க்க முடியாத முடிச்சுகளாகவும் இறுகியிருந்தன.

புதிர்கள் சிறிது, அதிரக் கேட்கின்றோம்;
இறுகிய முடிச்சுகள்; நெகிழக் காண்கின்றோம்.

அதிர்வுக்கும் நெகிழ்வுக்கும் காரணமாகக் கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர் சி. கோவிந்தராசனரும், கேரள ஆராய்ச்சியாளர்களும் தம் தம் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

பேராசிரியர் கோவிந்தராசனர் சிலப்பதிகாரத்தை அடியொற்றிய ஆராய்ச்சிப் பணியைப் பத்தாண்டுகள் மேற்கொண்டார். வேங்கைக் கானலின் தடங் கண்டேன் என்கிறார். அக் கானல் சுருளிமலை மீது உள்ளது என்கின்றார். அங்குதான் குட்டுவன் எடுத்த கோட்டம் உள்ளது என்கின்றார். அவன் வடித்த இமயக் கற்சிலை 'இதோ' என்று படமெடுத்துக் காட்டியுள்ளார். தாம் கண்டுபிடித்ததை இதழ்களில் எழுதினர்; வாய்ப்பு நேரின் பேசினர். நாகைத் தமிழ்ச் சங்கத்தில் ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் பேசச் செய்தோம். ஆறு ஆண்டுகளுக்கு முன் யான் மலைநாடு சென்றபோது அந்நாட்டுக் கீழைக் கடற்கரையிலுள்ள மாச்சாங் என்னும் ஊரில் வாழும் தமிழன்பர் டாக்டர் துரைசாமி அவர்கள் இதனைக் கேட்டு உணர்ச்சி வயப்பட்டார். ஒரு நூறு உருவா இப் பேராசிரியர்க்கு வழங்குமாறு என்னிடம் அளித்தார்.

இருப்பினும். இக்கண்டுபிடிப்பு குடத்திலிட்ட விளக்காகவே இருந்தது. ஒளிக்கும் ஒளியூட்டும் நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் பறம்புமலைப் பாரி விழாவின் போது இக்கண்டுபிடிப்பைக் கூறினேன். பேரார்வமுடன் கேட்ட கலைஞர் அவர்கள் பேராசிரியரை அழைத்து வருமாறு பணித்தார். அழைத்துச் சென்றக்கால் விவரமாக உசாவி அறிந்தார். செயற்படும் செம்மலாம் அவர் கேரள அரசுடன் தொடர்பு கொண்டார். கேரள அரசினர் தம் ஆராய்ச்சியாளர் இது பற்றி ஆராய்ந்து வருவதாக விடை வந்தது. அவர்களது ஆராய்ச்சி முடிபையும் அறிவித்துள்ளனர்.

'' கேரள நாட்டிலுள்ள கிரங்கனூர்—பகவதிக் கோவிலே குட்டுவன் எடுத்த கண்ணகிக்கோட்டம்'' —இதுதான் கேரள ஆராய்ச்சியாளரின்—கேரள அரசின் அறிவிப்பாயிற்று.

இந்த அறிவிப்பிற்குப் பின்னர் '' தமிழரசு '' மூன்று இதழ்களில் தொடர் கட்டுரையாகக் கண்ணகிக் கோட்டம் பற்றிப் பேராசிரியர் சி. கோவிந்தராசனர் எழுதியுள்ளார்.

கேரள ஆராய்ச்சியாளர் முடிபும், தமிழ்ப் பேராசிரியர் முடிபும் மாறுபடுகின்றன. இவ்விரண்டையும் ஒருங்கு நினைந்து, மேலும் ஆராய்ச்சிகள் தொடர்தல் வேண்டும். இரு முனைகளிலும் இவ்வாராய்ச்சி நிகழ வேண்டும். இருவகைக் கருத்துக்களையும் அவ்வப்படியே தூங்கவிட்டுவிட்டால் உண்மை வெளிப்படாது. மேலும், ஒரு வரலாற்று உண்மையை நிலைநாட்ட முடியாத எளியவர்கள் என்னும் பழிச்சொல் தென்னக ஆராய்ச்சியாளர்களைச் சாரும்.

எனவே, ஆராய்ச்சி தொடர வேண்டும். ஆராய்ச்சிகளின் ஒருமித்த முடிபு ஒரு கருத்திற்கு அரண்கட்ட வேண்டும். உண்மை ஒன்ருகத்தானே இருக்கும். அவ்வுண்மையை ஏற்றுப் போற்றி மதிப்பது ஆராய்ச்சியாளரின் இயல்பு என்பதும் உண்மையாக வேண்டும்.

இந்நோக்கில் இக்கட்டுரை எழுகின்றது.

நம்முன் எழுந்துள்ள இவ்வாராய்ச்சிக்குக் களமாக அமைந்த கருத்துக்கள் இரண்டு.



ஒன்று, கண்ணகி ஏறி நின்ற வேங்கைக் கானல். இரண்டு, செங்குட்டுவன் இமயக் கல்லில் சிலை வடித்து எடுத்த கண்ணகிக் கோட்டம்.

முதற் கருத்தாகிய சிலப்பதிகாரத்தில் குறிக்கப் படும் வேங்கைக் கானல் அமைந்த நெடுவேள் குன்றம் திருச்செங்கோடு என்றும், திருச்செங் குன்று என்றும் தமிழகத்து இலக்கிய அறிஞர் களால் கருதப்பட்டது. இந்த அடிப்படையில் ஆங்காங்கு விழாக்களும் நிகழ்த்தப்பட்டன.

இதுபோது கம்பம் பள்ளத்தாக்கை அடுத்துள்ள சுருளிமலைதான் நெடுவேள் குன்றம் என்னும் கருத்து வெளிப்பட்டுள்ளது.

இவ்வேங்கைக்கானல் நெடுவேள்குன்றம் பற்றிய கருத்தைக் கேரள ஆராய்ச்சியாளர்கள் அணுகிய தாகத் தெரியவில்லை. நெடுவேள் குன்றம் சுருளி மலை அன்று என்பதை மறுத்தும் கருத்து அறிவிக்கப் படவில்லை. எனவே, அன்னார் இதில்—கண்ணகி நின்று மறைந்த வேங்கைக் கானல் கருத்தில் — கருத்தைச் செலுத்த வேண்டியதில்லை என்று கருதி யிருக்கலாம் ; அன்றி, உடன்பாடாகவும் அமைய லாம்.

ஆனால், இந்த முதற் கருத்து இரண்டாவது கருத்திற்குத் துணை நிற்பது மட்டுமன்றி அரண் கோலுவதும் ஆகும்.

எவ்வாறு ?

எந்த ஆராய்ச்சிக்கும் அகச்சான்றுகள், புறச் சான்றுகள், தடயங்கள், சின்னங்கள் முதலிய வற்றை நாடவேண்டும். இந்த ஆராய்ச்சிக்கும் அவையே கைகொடுப்பன. அவற்றுள், மூலச் சான்றாகத் தலைநிமிர்ந்து நிற்பது சிலப்பதி காரம் என்பது முடிந்த முடிபு. இது மறுக்கப் பட்டால் ஆராய்ச்சிக்கு அடித்தளமே இல்லாமற் போகும். எனவே, சிலம்பைத் தட்டிக் காண் போம் :

மதுரை தீக்கிரையாயிற்று ; கண்ணகியார் மதுரை நகரின் மேற்குத் திசை வாயில் வழியாக மதுரை நகரைவிட்டு வெளியேறினார். இரவும் பகலும் மயங்கிய நிலையில்,

'' உரவுநீர் வையை ஒருகரை கொண்டு''— மேற்கு நோக்கி நடந்தார். மேடு, பள்ளம், மலை-பள்ளத்தாக்கு எங்கும் ஏறி இறங்கி நடந்தார். பாண்டி நாட்டு எல்லையை நீங்கிச் சேர நாட்டு அக எல்லையில்,

'' நெடுவேள் குன்றம் அடிவைத் தேறிப்

பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ் '' பதி னான்கு நாட்கள் நின்றார். பின் இயற்கை எய்தினர்.

இந்த அகச்சான்றை அடியொற்றிச் சென்றால் கம்பம் பள்ளத்தாக்கை அடைந்து, சிறு மடிப்பு மலைகளில் ஏறி இறங்கிச் சுருளிமலையை அடைய லாம். இம்மலையே முருகனுக்குரியதாகச் சிலப்பதி காரம் குறிக்கும் நெடுவேள் குன்றமாகின்றது. சுருளிமலை முருகன் இடங்கொண்ட மலை என்பதை,

'' சுருளிமலை மீதில் மேவும் சீலா—உன்னைத்

தோத்தரித்தேன் சுப்பிரமணிய வேலா ''— எனும் பிற்காலப் பாடலும் கூறுகிறது.

எனவே, சிலம்பின் கருத்துப்படி நடந்து சென்ற தமிழ்ப் பேராசிரியர் கண்டுள்ள சுருளிமலையே நெடு வேள் குன்றம் என்பது பொருத்தமாகவும் உண்மை யாகவும் அமைகின்றது.

தொடர்ந்து சிலம்பு ஒலிபரப்பும் கருத்து இதனை உறுதிப்படுத்துகின்றது.

மலைவளங் காண வந்த செங்குட்டுவனிடம் மலைவாழ் குறவர் தாம் வேங்கைக் கானலில் கண்ட கண்ணகியார் பற்றி அறிவித்தனர். செங் குட்டுவன் கண்ணகியார்க்குச் சிலை வடித்துக் கோட்டம் அமைக்க முனைந்தான். வடநாடு சென்று இமயத்தில் கல்லெடுத்துக் கனக விசயர் தலைமேலேற்றிக் கங்கைக்கரை வரை தூக்கிவரச் செய்து நீராட்டிச் சேரநாடு மீண்டு சிலைவடித் துக் கோட்டம் எடுத்தான்.

கண்ணகியார் இயற்கையெய்திய சில திங்க ளுக்குப் பின்னரே குன்றக் குறவர் சேரனிடம் அறிவித்தனர். இமயக் கல்லெடுக்கச் சேரன் வஞ்சி நகரிலிருந்து நீங்கிக் கல்லெடுத்துக் கங் கையாற்றில் நீராட்டிக் கரையில் தங்கியிருந்த நாளில் காலத்தைக் கணித்துரைக்கும் கணி எழுந்து,

'' எண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது '' என்றான். எனவே, இந்த இடைக்காலம் 32 திங்க ளாகின்றது. பின்னர் வடநாட்டினின்றும் வஞ்சி நகர் மீண்டு சிலை வடித்துக் கோட்டம் அமைக்க 30 திங்களேனும் ஆகியிருக்கும். எனவே, கண்ணகி மறைவிற்குப் பின்னர் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் கழிந்த பின்னரே கண்ணகியார் கோட்டம் அமைக் கப்பட்டிருக்க வேண்டும் என்றாகிறது.

கோட்டம் அமைந்த செய்தி சோழநாட்டிலும் பரவியது. கண்ணகியாரின் வளர்ப்புத் தாயா கிய காவற்பெண்டு தோழி தேவந்தி முதலி யோர் கண்ணகிக் கோட்டம் கண்டு கண்ணகிச் சிலையைக் காணும் ஆர்வத்தில் புறப்பட்டனர். இச்செய்தியைச் சிலப்பதிகாரத்து வாழ்த்துரை காதையின் முன்னுரையாக அமைந்த உரைப் பாட்டுமடை பின்வருமாறு அறிவிக்கின்றது :

'' ..................காவற்பெண்டும் அடித் தோழியும் கடவுட் சாத்தனுடன் உறைந்த தேவந்தியும் உடன்கூடிச் சேயிழையைக் (கண்ண கியைக்) காண்டும் என்று மதுரை மாநகர் புகுந்து, முலைப்பூசல் கேட்டாங்கு அடைக்கலம் இழந்து உயிர் இழந்த இடைக்குல மகள் இடம் எய்தி, ஐயை அவள் (மாதரி) மகளோடும் வையையொடு வழிக்கொண்டு, மாமலை மீமிசை யேறிக் கோமகள் தன் கோயில் புக்கு, நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவன் திறம் உரைப்பர்மன் ''

இப்பகுதியில் தடித்த எழுத்தில் உள்ளவை கவனத்திற் கொள்ளத் தக்கவை. காவற்பெண்டு முதலியோர் கண்ணகிப் படிமத்தைக் காணப் புறப்பட்டனர்; மாதரி மகள் ஐயையை (வழிகாட் டுதற்காகவும்) உடன் கூட்டிக் கொண்டனர் ;—கண் ணகியார் சென்ற வழியாம் வையைக் கரையை வழியாகக்

கொண்டனர்; மலையின் உச்சியில் ஏறினர்; (அங்கிருந்த) கண்ணகிக் கோட்டத்துள் புகுந்தனர்—என்னும் இவை கண்ணகியார் வையை வழியே சென்றேறிய இடம் சுருளிமலை வேங்கைக்கானல் என்பதை உறுதிசெய்கின்றன. மேலும், அங்குதான் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதை இறுதித் தொடர் சுட்டுகின்றது. இக்கோட்டமே மங்கல தேவிக்கோட்டம் என்னும் பெயரால் பிற்கால மக்களால் வழங்கப்பட்டுள்ளது. மங்கலதேவி என்பது கண்ணகியாரைக் குறிக்கும் என்பது தமிழ் ஆராய்ச்சியாளர் கட்டுரையில் அகச்சான்றுடனும் புறச்சான்றுடனும் நிறுவப்பட்டுள்ளது. கண்ணகிக் கோட்டம் மங்கலதேவிக்கோட்டம்என்றபெயரால், வரந்தருகாதையில்,

'' மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
செங்கோட் டுயர்வரை சேணுயர் சிலம்பில்''
-எனவும்,

'' மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
அங்குறை மறையோ னாகத் தோன்றி ''

எனவும் இரண்டு இடங்களில் குறிக்கப்படுவதும் நினைக்கத் தக்கது. இம்மங்கல தேவிக் கோட்டமாம் கண்ணகிக் கோட்டமே இதுபோது இடிபாடுகளோடு காணப்படும் சின்னங்கள் கல்வெட்டுகள் எல்லாம் இதுதான் சேரன் அமைத்த இமயக் கற்சிலைக் கோட்டம் என்பதற்குச் சான்றுகளாக நிற்பதைப் பேராசிரியர் விளக்கியுள்ளார்.

மேலும் இக்கண்ணகிக் கோட்டம் காலப் போக்கில் விரிவடைந்துள்ளது. இக்கோட்டம் அமைந்த பரப்பில் மேலும் கோட்டங்கள் பக்கத்தில் எடுக்கப்பட்டுள்ளன. கண்ணகிக் கோட்டத்தின் பக்கத்தில் சமாதி அமைப்பான சிறு கோட்டம் இடிபாடுகளுடன் தென்படுகின்றது. இது கோவலனுக்கு அமைக்கப்பட்டதாகலாம். இதற்கு இயைபான கருத்து மணிமேகலைக் காப்பியத்தில் உளது.

கண்ணகிக் கோட்டத்திற்கு மணிமேகலை வந்தாள். இதனை அறிவிக்கும் மணிமேகலை காப்பிய அடிகள் ஒரு புதுச் செய்தியையும் தருகின்றன. அது கோவலனுக்கும் படிமம் அமைக்கப்பட்டது என்பதாம். அக்காப்பியத்து வஞ்சிமாநகர் புக்க காதையின் தொடக்கத்தில் மணிமேகலை,

'' தணியாக் காதல் தாய் கண்ணகியையும்
கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்
கடவுள் எழுதிய படிமம் காணிய
வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து
வணங்கி நின்று குணம்பல ஏத்தி'' னள்.

இதுகொண்டு கண்ணகிக் கோட்டம் எடுக்கப்பட்டதற்குப் பின்னர் சேரன் செங்குட்டுவனாலோ, பிறர் எவராலோ அக்கோட்டத்திலேயே கோவலனுக்கும் படிமம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு பல்வகைப் பொருத்தங்களும், சான்றுகளும் கூடிநிற்கும் சுருளிமலை மங்கலதேவிக் கோட்டமே நெடுவேள் குன்றத்துக்குக் கண்ணகிக் கோட்டம் எனக் கொள்ளவைக்கிறது.



கேரள ஆராய்ச்சியாளர் காட்டும் கிரங்கனூர்ப் பகவதி கோவில் எவ்வகைச் சான்றுகளுடன் கண்ணகிக் கோட்டமாகக் (இமயக்கல்லில் சிலையமைந்த கோட்டமாக) கொள்ளப்பட்டது என்பதற்கு விளக்கம் வெளிவரவில்லை. பெரும்பாலும் செவிவழிச் செய்திகளாலும் அப்பக்கத்துக் கதை வழக்காலும் கொள்ளப்பட்டுள்ளது.

கேரள ஆராய்ச்சியாளர் கருத்திற்கும், தமிழக ஆராய்ச்சியாளர் கருத்திற்கும் ஒரு பெரிய முரண்பாடு உள்ளது. அது மலைக்கும் மடுவுக்கும் உள்ள முரண்பாடாகும். ஆம், கேரளத்தார் அறிவிக்கும் பகவதிக்கோவில் உள்ள கிரங்கனூர் நிலமட்டத்தில் உள்ளது. தமிழறிஞர் அறிவிக்கும் மங்கலதேவிக் கோட்டம் மலையுச்சியில் உள்ளது. இது மலைக்கும் மடுவுக்கும் உள்ள முரண்பாடு அன்றோ? இம்முரண்பாட்டின் முடிபு காண இரண்டு வினாக்கள் எழுதல் இயல்பு. கண்ணகிக் கோட்டம் அமைந்த இடம்,

நிலமட்டமா ?
மலை உச்சியா ?

இவ்விரு வினாக்களுக்குக் கிடைக்கும் ஒரு விடை ஆராய்ச்சியின் முடிவிற்கு உறுதி கட்டும்.

சிலப்பதிகாரம் விடை கூறுகின்றது. காவற்பெண்டு, தேவந்தி முதலியோர் கண்ணகிக் கோட்டம் காணவந்த செய்தியை அறிவிக்கும் உரைப் பாட்டுமடையில் விடை துவங்குகின்றது.

''வையையொரு வழிக்கொண்டு மாமலை
மீமிசை யேறிக் கோமகள்தன் கோயில் புக்கு''

—இத்தொடர் குறிக்கும் கருத்து மலைமீது கண்ணகியார்க்குக் கோயில் இருந்தது; அதிற் புகுந்தனர் என்பதன்றோ? இந்த ''மாமலை மீமிசை கோமகள்தன் கோயில்'' என்பது மலைமேல்தான் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதற்கு முதற்சான்று.

இத்தொடரைத் தொடர்ந்து வரும்,

'' நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவன்
திறம் உரைப்பர்மன்''

—என்னும் தொடர் அவர்கள் வந்த போது அம்மலைமேல் கோட்டத்தில் சேரன் செங்குட்டுவன் இருந்தான் என அறிவிக்கின்றது. பின்னரும், வரந்தருகாதையில்,

''தெய்வமுற் றெழுந்த தேவந் திகைதான்
கொய்தளிர் குறிஞ்சிக் கோமான் தன்முன்
கடவுள் மங்கலம் காணிய வந்த
மடமொழி நல்லார் ''—எனத் தேவந்தி

கூறுவதாக உளது.

குறிஞ்சிக் கோமான் (மலையரசன் செங்குட்டுவன்) முன் கடவுள் மங்கலம் என இங்கே குறிக்கப்படுவதும் சேரன் மலைமீது கண்ணகிக் கோட்டத்தில் இருந்தான் என்பதைக் காட்டுகின்றது. இம்மலைமேல் கண்ணகிக் கோட்டத்தில் நிற்கும் செங்குட்டுவன் கண்ணகியாரின் மின்னொளிக் காட்சியைக் காணுகின்றான். கண்டு வியந்து பேசுகின்றான் :

''பொன்னஞ் சிலம்பில் புனைமே கலைவளைக்கை
மின்னுங் கொடியொன்று மீவிசும்பில்
தோன்றுமால் ''

—என்னும் அடிகள் பொன் போன்ற அழகிய மலையில் கண்ணகியின் காட்சியைக் கண்டதாகக் குறிக்கிறது. மலைமேல் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதற்கு இஃது இரண்டாவது சான்று.

இதைத் தொடர்ந்து கண்ணகியாரின் வான் நிழல் ஒலியாக, ''வென்வேலான் குன்றில் விளையாட்டு யான் அகலேன்''

—என்று குறிக்கப்படுகின்றது. இங்கும் நெடுவேள் (வென்வேலான்) குன்றின்மேல் (கோட்டத்தில்) எனப்படுவது,

மூன்ருவது சான்று.

வரந்தரு காதையில் தேவந்தி தெய்வமுற்றுப் பேசுகின்ருள் ;

''மங்கல மடந்தை கோட்டத்து ஆங்கண்
செங்கோட்டு உயர்வரை சேணுயர் சிலம்பில்
பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய
அணிகயம் பலவுள''

—என்னும் இவ்வடிகளில் கண்ணகியார்க்குக் கோட்டம் அமைந்த மலை நேராக உயர்ந்த உச்சியை உடைய உயர்ந்த மலை என்று குறிக்கப்படுகின்றது. இது,

நான்காவது சான்று.

இம்மலைப் பகுதியில் பல அழகிய சிறு நீர்ப் பள்ளங்கள் இருந்தன எனப்படுகின்றது. இதற்கேற்ப நீர்ப்பள்ளங்கள் சுருளிமலைப் பகுதியில் காணப்படுவன,

ஐந்தாவது சான்று.

சிலப்பதிகாரம் நிறைவேற்றும் இறுதிப் பகுதியில் மலைமேல் நிற்கும் சேரன் செங்குட்டுவன்,

'' பத்தினிக் கோட்டம் படிப்புறம் வகுத்து

தேவந் திகையைச் (பூசை) செய்கென் றேவி

வலமுற மும்முறை வந்தனன் வணங்கி ''

நின்ருன் எனப்படுகிறது.

ஆருவது சான்று.

இவ் ஆறு அகச்சான்றுகளையும் தொடர்புடன் நோக்குங்கால் கண்ணகிக் கோட்டம் மலைமேல் எடுக்கப்பட்டதே என்பது உறுதியாகின்றது.

கேரளத்தார் கூறும் கிரங்கனூர் மலைப்பகுதியன்று ; 20 கல் தொலைவிலேயே மலை உள்ளது. அம்மலை மேலும் குறிக்கப்படும் பகவதி கோவில் இல்லை. எனவே, எவ்வகையிலும் கிரங்கனூர் ஈடுகொடுக்க இயலாததாகின்றது.

மற்ருென்று இங்கே நோக்கத்தக்கது. சேரன் செங்குட்டுவன் முன்னர் மலைவளம் காணச்சென்ற செய்தி அது. அவன் வஞ்சிமாநகரிலிருந்து புறப்பட்டுக் கிழக்கே செல்பவன், யானை முதலிய கூட்டத்துடன் சென்றதால் மடிப்பு மலைகளை ஏறிக் கடக்காமல் பள்ளத்தாக்குகளின் வழியாக வளைந்து வளைந்து நெடுந்தொலைவு கடந்து மலைமேல் ஏறினன். அவன் சென்றதை,

'' பைந்தொடி ஆயமொடு பரந்தொருங்கு——
ஈண்டி—

வஞ்சி முற்றம் நீங்கிச் செல்வோன் ''—என இளங்கோவடிகள் அறிவிக்கின்ருர். '' நீங்கிச் செல்வோன் '' என்பது கொண்டு இதனை ஒரு பயணமாகவே கொள்ளலாம். இதனை (செல்வோன் என்பதை) மனத்தில் கொண்டு பின்னர் வரும் கண்ணகிக் கோட்டத்தில் கண்ணகிச் சிலையினைக் கடவுள் மங்கலம் செய்ய முனைந்த நிகழ்ச்சியோடு காணவேண்டும்.

இமயக் கல்லில் கண்ணகியார் வடிவம் வடித்தாகி விட்டது. அதற்கெனக் கோட்டமும் எடுத்தாகிவிட்டது. அதிற் சிலையை நாட்டிக் கடவுள் மங்கலம் செய்ய வேண்டும். அதற்கு முனைந்தான் செங்குட்டுவன். இதைக் குறிக்கும் சிலப்பதிகாரம், வஞ்சிமாநகரிலிருந்து '' சென்று'' அப்பணியை நிறைவேற்றிய குறிப்பைக் காட்டுகின்றது. செங்குட்டுவன், அந்தணன், ஆசான், பெருங்கணி,

'' சிறப்புடைக் கம்மியர் தம்முடன் சென்று

பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து ''—
கடவுள் மங்கலம்

செய்ததாகப் பேசுகின்றது. இங்கு, ''சென்று'' என்று குறித்திருப்பதையும் முன்னர் '' நீங்கிச் செல்வோன் '' என்றதோடு இணைத்து நோக்கினுல் சிலையை நாட்டவும் வஞ்சியிலிருந்து ஒரு பயணம் சென்றதாகவே கொள்ள நேரும். அப் பயணம் எவ்விடம் கருதியது ? அண்மையில் உள்ள கிரங்கனூர்க்கு எனக் கொள்ள இயலாது. கண்ணகி மறைந்த இடத்தில் கோட்டம் எடுப்பது பொருத்தமானது என்னும் கருத்தோடு இயைவதால் அம்மலை நோக்கிய பயணமாகக் கொள்ளலாம். இதற்கு முன்னர் கண்டுள்ள கருத்துக்களோடு பொருத்திப் பார்த்தால் இக்கருத்து



வலிந்து கொள்வதாகாது. எனவே, '' சென்று'' என்னும் சொற்குறிப்பு, பக்கத்துணையாய் நின்று கண்ணகிக் கோட்டம் அமைந்தது வேங்கைக் கானல் அமைந்த நெடுவேள் குன்றமாம் சுருளி—மலையே என்பதைக் குறிக்கிறது.

இறுதியாகக் கண்ணகியார் சிலையை ஆராய வேண்டும்.

இதுபோது காணப்பட்டுள்ள சிலை (சுருளிமலை மீது காணப் பட்டுள்ளது) அமர்ந்த தோற்றமுடையது. அடிப்பீடமும் சேர்ந்து இரண்டு அடிக்கும் குறைவான உயரமும், ஓர் அடி அகலமும், முக்கால் அடி பருமனும் கொண்ட தாம். இஃது ஓர் அம்மி அளவினதேயாகிறது. இந்த அளவுக் கல்லை இருவர் தூக்கலாம். நின்ற கோலத்தில் உள்ள கிரங்கனூர் பகவதிச் சிலைக் கல் இருவர் எந்நிலையிலும் தூக்கவோ, தாங்கவோ இயலாததாகும்.

மேலும் சுருளிமலைச் சிலையின் அடிப்பகுதியில் ஒரு மூளி உண்டாகி வேறு வகையான கல் பொருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ஓரளவு கவனத்தோடு நோக்கினுலும் இதனைக் காண முடிகிறது. இவ்வாறு நேர்வதற்குக் காரணம் உண்டு.

கனக விசயர் தலையில் கல்லை ஏற்றினன் என்பது அவர்களைத் தூக்கச் செய்ய வேண்டும் என்பதன் அறிகுறிச் செயலே அன்றி, இமயத்தில் ஏற்றி வஞ்சியில் இறக்கினன் என்பதன்று. ஆயிரம் கல் தொலைவு தூக்கிவரச் செய்தல் இயலாத ஒன்று. சிலப்பதிகாரப்படி நோக்கினும் கல்லை எடுத்த இடத்திலிருந்து நீராட்ட வேண்டிய கங்கைக் கரை வரைதான் கனக விசயர் தலையில் கல் கொணரப் பட்டது என்பதை உணரலாம். அவ்வாறு கங்கைக் கரைவரை வந்த கல் அல்லது சிலை பின்னர் வஞ்சிமாநகர் வரையும், மேலும்

கோட்டம் அமைந்த இடம் வரையும் கொண்டு வரப்பட்ட போக்குவரத்து வகையால் விழுந்தோ, மோதியோ மூளி உண்டாக்க வழி உண்டு. எனவே இந்த மூளியும் ஒரு சான்ருகின்றது.

மேலும்,

(1) சுருளிமலையில் காணப்பட்ட கண்ணகிச் சிலைக்கல் 1,800 ஆண்டுகள் பழமையைக் காட்டும் தேய்மானத்துடன் உள்ளது.

(2) அந்தத் தேய்மானத்திலும்,

'' கைவினை முற்றிய தெய்வப் படிமத்து வித்தகர் இயற்றிய விளங்கிய கோலம்''—எனச் சிலப்பதிகாரம் குறிப்பதற் கேற்பக் கலைத்திறம் விளங்குகின்றது. அதில் மேலோட்ட வரிகளாக அணிகலன் அமைப்பும் தெரிகின்றது.

(3) சிலையில் இடப்புற மார்பின் காப்புப் பகுதி சிதைந்து தோற்றமளிக்கிறது. (கண்ணகியார் திருகி எறிந்தது முலைக்காம்பு என்பதைத் ''தமிழரசு'' இதழில் ''முடிச்சவிழ்க்கும் சொல்'' என்னும் எனது கட்டுரையில் தெளி வாக்கப்பட்டுள்ளது).

(4) சிலையமைப்பு தெய்வப் படிவமேயாயினும் தெய்வ வடிவக் குறிகளுடன் மாந்தர் வடிவக் குறிகள் தென்படுகின்றன.

(5) கல்லின் நிறம் வெளிறிய மஞ்சள் நிறமாகத் தோற்றமளிப்பது, கந்தகக் கலப்புடைய இமயக் கல்லின் தன்மையைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

இவ்வைந்து சான்றுகளோடு முன்னர்க் காட்டப் பட்ட ஆறு சான்று களையும், பிற சின்னங்களை யும் தடயங்களையும் இயைத்து நோக்குங்கால் சுருளிமலை மங்கல தேவிக் கோட்டத்தில் காணப் பட்டுள்ள கண்ணகிச் சிலையே சேரன் செங்குட்டு வன் வடித்த சிலை என்று கொள்ளும் உறுதி நிலைக் கிறது. இதன் இயைபில் குட்டுவன் எடுத்த கோட் டம் சுருளிமலை என்று இதுபோது வழங்கப்படும் நெடுவேள் குன்றத்தின் மீது உள்ளதுதான் என்ற உறுதியும் நிலைக்கின்றது.

இவ்வுறுதிக்கும் ஒரு முத்திரை குத்த இறுதி யானதும், வேறு எவ்வகை மறுப்பும் கூற இயலா மற் போவதுமான ஆராய்ச்சி ஒன்று உண்டு. கருத்து மாறுபாடு எழுந்துள்ள இரு சிலைக் கற் களின் சிலை ஒவ்வொன்றை எடுத்து ஆராய்வதே அது. இக்கால அறிவியல் துணை கொண்டு எக்கல் இமயக் கல்லின் தன்மை கொண்டது எனக் கண்டு விடலாம். அவ்வாறு காண்பது முடிந்த முடிபான முத்திரையாகும்.

இம்முத்திரையையும் நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே குத்த மனம் பற்றியுள்ளார்கள்.

மேலும் இருமுனையிலும் ஆராய்ச்சிகள் தொடர் தல் பல உண்மைகள் வெளிப்பட வாயிலாகும். கேரளப்பகுதியினரும், தமிழக ஆராய்ச்சியாள ரும், குறிப்பாக மதுரைப் பகுதிப் புலவர்களும் அறிஞர்களும் இது குறித்த தம் கருத்துக்களையும் தாம் தாம் அவ்வப்பகுதிகளில் காணும் சின்னங்கள் தடயங்களையும் வெளிப்படுத்தி உண்மை நிலைக்கத் துணைபுரியுமாறு வேண்டுகின்றேன்.

## சூரியகாந்தி எண்ணெய் உடல் நலத்திற்கு உகந்ததே!

சூரியகாந்தி எண்ணெய்யின் பயன், அதிலுள்ள சத்துணவு பற்றித் தமிழக அரசு ஏற்கெனவே ஆராய்ந்து, அது உணவுடன் உட்கொள்ள உகந்தது என்றும் எவ்விதத் தீமையையும் பயப்பதில்லை என் றும் அறிவித்துள்ளது. சென்னையிலுள்ள, தமிழக அரசின் நல்வாழ்வு மற்றும் குடும்பக் கட்டுப்பாடு திட்ட உதவி இயக்குநர் அவர்கள் சூரிய காந்தி எண்ணெயையும், அதன் பிண்ணுக்கையும் ஆராய்ந்து விஞ்ஞான ரீதியான தன் கருத்தைப் பின்வருமாறு தெரிவிக்கிருர்.

வளர்ந்து வரும் நாடுகளில் சூரிய காந்தியின் உபயோகம் பலப் பல! அதிலும் சத்துணவில் அது முக்கிய இடம் பெற்றுள்ளது. சூரிய காந்தி எண்ணெய் சமையலுக்கு ஏற்றது. அதிலுள்ள "லினோலிக் அமிலம்" மனித உணவில் நாள் தோறும் இடம்பெற வேண்டிய கொழுப்புச் சத்தின் ஒரு பகுதியாகும். இரத்தக் குழாய்கள் கடினமாகி இரத்தக் கொதிப்பு உண்டாகும் நிலை யைத் தவிர்த்து "Artherosclerolosis" என்னும் வியாதி வராமல் தடுக்கிறது. இந்த லினோலிக் அமிலம் நீரிழிவு நோயாளிகளுக்கும் பயன்தர வல்லது.

சூரிய காந்திப் பிண்ணுக்கு புரதம் நிறைந்ததாகும். இதை ரொட்டி முதலிய தின்பண்டங்களில் இருபது சதம் வரை கலந்து உபயோகிக்கலாம்.

இவ்வாறு ஒரு நல்ல எண்ணெயையும், புரதம் நிறைந்த பிண்ணுக்கையும் கொண்ட இந்தச் சூரிய காந்தி அதிக அளவில் பயிரிடப்பட்டு, குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கும் சக்தியும், புரத மும் உள்ள பொருளாக விளங்க வேண்டும்.

மேற்கண்ட மருத்துவ நிபுணரின் கருத்துப்படி சூரியகாந்தி எண்ணெய் உடல் நலனுக்கு உகந்தது. பொதுமக்கள் இதுபற்றி எவ்வித ஐயப்பாடும் கொள்ளத் தேவையில்லை.

[தகவல்: கூடுதல் வேளாண்மை இயக்குநர், (ஆராய்ச்சி), திருச்சிராப்பள்ளி—18.]

(கும்பகோணத்தைச் சேர்ந்த திரு. சேஷகிரி என்பவர் 14—3—1973 நாளிட்ட "இந்தியன் எக்ஸ்பிரஸ்" இதழில் சூரியகாந்தி எண்ணெயைச் சமையலில் சேர்ப்பதால் சில தீமைகள் வரலாம் என்று ஐயப்பாடு தெரிவித்துள்ளார். இதனல் சிலருக்குச் சூரிய காந்தி எண்ணெய் பற்றிய ஐயம் ஏற்பட்டுள்ளது. அவர்களது ஐயத்தைப் போக்கிட மேற்கண்ட விளக்கம் உதவிடும்.)




தமிழ்நாட்டின் அழகெல்லாம் தழுவிமிகச் சுவைப்பதற்குக்
குமிழ்போன்ற வாழ்வொன்று! குறைவாகும் மிகக்குறைவாம்!
பிறவியின் பின் பிறவியெனப் பிறங்குகிற தமிழினத்தில்
திறமாகப் பிறந்தால்தான் சிறிதேனும் நுகர்ந்திடலாம்!
நலத்திட்டம் பற்பலவும் நடக்கின்ற தன்மையினைப்
புலத்தினிலே பூரிக்க அறிந்துவரப் போய்வந்தேன்!



குமரியிலே குலவுகிற சுழல்விளக்குச் சுடர்உமிழ
அமருகிற தென்முனையின் அழகொழுக ஆர்த்துவரும்!
அதனடியில் தமிழ்நாட்டின் சுற்றுலவின் அகமோங்கி
இதமூட்டும் இல்லம்போல் வசதியெலாம் பொதிந்தினிக்கும்!
அமைதிக்கே இடமாக ஆழ்கடலில் நிமிர்ந்திருக்கும்
சிமையத்தே அமர்ந்தங்கே சிந்தித்த நரேந்திரனின்
நினைவாக நிலவுகிற மண்டபத்தை நெருங்கிடவே
முனைநாடிப் பாரதத்தோர் மொய்ப்பதனால் மெய்சிலிர்த்தேன்!



நெல்லையிலே இயற்கையெழில் நிலவுகிற குற்றாலம்
அல்லென்றும் பகலென்றும் அறியொண்ணா விழியிழந்தோர்
பல்லாண்டும் தொல்லையுற்ற பாமரரும் கலைஞர்தம்
நல்லரிய திட்டத்தால் நாடுவதைக் கண்ணுற்றேன்!
சத்துணவை உண்ணாமல், தவறான பச்சிலைகள்
மெத்தவுமே விட்டதனால் விழியிழந்த கதையெல்லாம்
தொண்டாற்றும் மருத்துவர்கள் தொகுத்துரைக்கத் துணுக்குற்றேன்!
மண்டுகிற அறியாமை வறுமையினால் விழியிழந்த
பலநூறும் ஆயிரத்துப் பாமரரை அரவணைத்தே
நலவழியில் விழியளிக்கும் நலத்திட்டம் போற்றிட்டேன்!

எளியவரை வண்டிகளில் ஏற்றிவந்தே இருப்பித்தார்!
ஒளிமீட்டுத் திருமணத்தின் விருந்தைப்போல் உபசரித்துக்
கண்ணீரைத் துடைத்தெறிந்து கண்ணளிக்கும் திட்டமதன்
நன்மையினை எடுத்துரைக்க நாவுக்குத் திறனில்லை!



தஞ்சையிலே தாய்மார்கள் மகப்பேற்றைத் தடுத்திடவே
அஞ்சாமல் அணியணியாய் அறுவையினைச் செய்தேற்க
மருத்துவநன் மனைகளிலே மஞ்சத்தே வீற்றிருக்கக்
குருத்துகளாம் குழந்தைகட்குக் காப்பகத்தை அணித்தேயே
நிறுவியங்கு விளையாட நிறைச்சத்தின் உணவூட்டி,
வறுமையினால் வரும்நலிவைத் தடுப்பூசி போட்டு,
நல்லாடை அணிவித்து நற்றாயும் படுத்திருந்தே
புல்லரிக்கப் பார்த்துவக்கும் ஈடில்லாப் பொற்பணிகள்
கண்டுவந்தேன் ; தாய்சேயின் நலப்பணிகள் கருத்தாகத்
தொண்டர்தம் செயல்திறனால் துலங்குவதால் துள்ளுகிறேன் !
மக்கள்தம் மனவெழுச்சி தூண்டிவிடும் கவியுலகின்
பக்குவத்துப் பாட்டியவர் ஒளவைக்குக் கனிதந்த
அதிகனது பதியான தருமபுரி மாவட்டம்
புதிதான விழாக்கோலம் பூண்டிடுதல் பார்த்துவந்தேன் !
விடுதலையின் வெள்ளிவிழா கொண்டாடும் முகத்தானே
நெடுகபல ஊர்களிலும் நெடிதோங்கும் மாவட்ட
அதிகாரி அனைவருமே ஒவ்வொருநாள் ஓரூரில்
பதியெழுந்து செல்வதுபோல் பணிமனையே நகர்ந்ததுபோல்
திரண்டொருங்கு மக்களது சிக்கலெல்லாம் செவியுற்றே
இரண்டொன்றே மணித்துளியில் இடுக்கண்கள் களைந்தகற்றி,
இனிநடக்க வேண்டியதை எழிலாகத் தெரிவித்து,
நனிநடந்த விழாவதனைக் கனிவாக மாவட்ட
ஆட்சியதன் தலைவருமே அலுவல்செய் பாங்கான
காட்சியினைக் கண்டுவந்தேன் ! கண்ணனை குடியரசின்
தத்துவமே செயற்படுத்தும் தருமபுரி தகவுணர்ந்தேன் !
மெத்தவுயர் தமிழகத்தின் மேன்மையெல்லாம் காணஒல்லேன் !
நலத்திட்டம் பற்பலவும் நாட்டகத்தின் மக்களினை
இலக்காக அடைதவனால் இறும்பூதே எய்துகிறேன் !
தமிழாளும் தரணியிலே வாழ்வதற்கே தலைநிமிர்வேன் !
அமிழ்தான செயற்றிறனை அகமார வாழ்த்துவனே !



# வீடு பெற...

தமிழகத்தில் இன்றுள்ள 81,80,930 குடும்பங்களின் வீட்டுத் தேவைகளை நிறைவேற்றுவது கடினமான பணியாகும். பத்தாண்டிற்கு 22.01 விழுக்காடு மக்கள் தொகை பெருகி வருவதால் இப் பிரச்சினை தீர்க்க முடியாத அளவிற்கு வளர்ந்துவிடக் கூடும்.

இப்பிரச்சினையை ஒரு அறைகூவலாக ஏற்றுக் கொண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அதனை மிகக் குறுகிய காலத்தில் தீர்ப்பதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

சென்ற பத்தாண்டுகளில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சுமார் 4,178 ஏக்கர் நிலத்தைக் கையகப் படுத்திச் சுமார் 30,000 வீடுகளை எல்லா வருமான வகுப்பினருக்கும் கிடைக்க வகை செய்துள்ளது.

அரசு ஊழியர்களுக்காக, சுமார் 4,925 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

நீதித்துறை, வருவாய்த் துறையைச் சார்ந்த அலுவலகங்களுக்காகக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தையும் இவ்வாரியம் செயலாற்றிக் கொண்டு வருகிறது.

தொழிலாளர்களுக்காகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டிவருகின்றது. தமிழக அரசின் சாதனைகளில் ஒன்றாக குடிசைவாழ் மக்களுக்காகவும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இப்பணியை, கோவை, தஞ்சை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் மேற்கொண்டுள்ளது.

செங்கற்பட்டு. மதுரை, சேலம், திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமப் புற மக்களின் வருவாய்க்குத் தகுந்த நவீன வசதிகள் கொண்ட எழில்மிகு வீடுகள் கட்டுவதற்கான முன்னோடித் திட்டங்கள் உருவாகி வருகின்றன.

வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் ரூபாய் 8·63 கோடி செலவில் கொரட்டூர் கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், கோட்டூர்புரம் ஆகிய பகுதிகளில் கவர்ச்சிகரமான குடியிருப்புகள் உருவாகி வருகின்றன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தன் திட்டங்களுக்கான கட்டடப் பொருள்களை உருவாக்கும் பணியினையும் மேற்கொண்டுள்ளது. இதன் வாயிலாகத் தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்புகள் பெருகி வருகின்றன.

இயந்திர உதவியுடன் கூடிய செங்கல் சூளை, மொசைக் ஓடுகள், சுகாதாரத் துப்புரவுச் சாதனங்கள், குழாய்கள், கதவுகள், சன்னல்கள் தயாரிக்கும் துணைத் தொழில் முயற்சிகளை விரைவில் வாரியம் மேற்கொள்ள இருக்கிறது.

ஆசியாவிலேயே முதன் முதலாகத் தக்கைக்கல் (செல்-கிரீடு) உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று 1972-ஆம் ஆண்டு எண்ணூரில் தொடங்கப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், அவரவர் வசதிக்கும் ஏற்ப நவீன வீடுகள் கட்டித் தருவது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் குறிக்கோளாகும்.



# காட்டு வளமே நாட்டு வளம்!

நாட்டின் இயற்கை வளத்தையும், தொழில்களுக்கான மூலப் பொருள்களையும் வழங்குவது காடுகளேயாகும். காட்டு வளமே நாட்டு வளம் என்பதனை உணர்ந்த தமிழக அரசு காடுகளைப் பாதுகாத்து வளர்ப்பதில் தீவிர அக்கறை காட்டி வருகிறது.

காட்டு வளத்தினைப் பெருமளவில் பெருக்க அரிய திட்டங்கள் பலவற்றைத் தீட்டி வரும் வனத் துறையின் அரும்பணிகள் என்னென்ன என்பதனை அறிந்து கொள்வோம்!

வனத் துறையின்கீழ் வரும் மொத்தப் பரப்பளவு 21,400 சதுர கிலோ மீட்டராகும். இதில் 17,228 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கக் காடுகளும், 3,812 சதுர கிலோ மீட்டர் ஒதுக்க நிலங்களும் ஆகும். இம்மாநிலத்தில் உள்ள மொத்த நிலப்பரப்பில் காடுகள் 16 சதவிகிதமேயுள்ளது. ஏற்றத் தாழ்வில்லாத பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் அனைந்திந்தியக் காடுகள் உள்ளனவாய் இருத்தல் வேண்டும்.

வேளாண்மைக்கு அடுத்தபடி, காடுகளே நிலப்பயன் பாட்டில் முக்கிய இடம் பெறுவதாகும். விவசாயமும், காடுகளும், மக்களுக்குப் பலவகையில் பயனளிப்பவையாகும். விவசாயம் மக்களுக்கு உணவு அளிப்பதோடு விலங்குகளுக்குத் தீவனங்களையும் அளிக்கிறது. அதே போலக் காடுகளும், வெட்டு மரங்கள், விறகு, தொழிற் கூடங்களுக்குத் தேவையான மரங்கள், உரம் ஆகியவற்றை அளிக்கின்றன. இது தவிர முக்கியமாக, நிலவளப் பாதுகாப்பிற்கும், நிலத்தில் ஈரப் பசையைக் காப்பதற்கும், சுற்றுப் புறக் காற்று பாழ்படுதலைத் தடுக்கவும் காடுகள் பணிபுரிஇன்றன.

1971–72-ஆம் ஆண்டில் 35,241 ச.கி.மீ. பரப்பு காடுகளல்லாப் பிற காரியங்களுக்காகவும், நிலமில்லாத ஏழைகளுக்கு நிலங்கள் ஒதுக்கவும், வழங்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

தொழில் வளப்பெருக்கம், நகர்ப் புறங்கள் விரிவடைதல் ஆகிய காரணங்களால் சுற்றுப் புறக் காற்றின் தூய்மையைக் காத்தல், காடுவாழ் விலங்குகளை அழிவின்றிக் காத்தல் ஆகியவைகளுக்காகக் காடுகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும்.

பல தொழிற் கூடங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைக் காடுகள் வழங்குகின்றன. முக்கியமாகக் காகிதம், ரேயான், தோல் பதனிடல், பெட்டிக்குரிய அட்டை தயாரித்தல் ஆகியவைகளுக்குக் காடுபடு பொருள்கள் பயன்படுகின்றன. இவைகளுக்காகவும், காடுகளைப் பேணுதல் அவசியமாகும்.

1971–72-ஆம் ஆண்டில் வனத் துறையின் வருவாய் ரூ. 456 இலட்சம். 1972–73-ஆம் ஆண்டில், ரூ. 357 இலட்சம் எதிர்பார்க்கப்படுகின்றன. சந்தன மரங்கள் மூலமாகக் கிடைக்கும் தொகை, இத்துறையின் வருவாயில் கணிசமான பங்காகும். அதாவது, ஏறக்குறைய ரூ. 124 இலட்சம் கிடைத்து உள்ளது. மரங்களிலிருந்து வருவாய் ரூ. 85 இலட்சமும், விறகுகளால் வருமானம் ரூ. 99 இலட்சமும் 1971–72-ல் கிடைத்திருக்கின்றது.



காடுவளர்ப்பு நீண்டகாலத் திட்டமாகும். இவைகளின் வளர்ப்புக்கு முதலீடு செய்து பயன்பெறுவதற்கு நீண்ட காலம் ஆகும். இருந்தும், முந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்களின் வாயிலாக நமது மாநில வருவாயும், தொழில் வளர்ச்சியும் பெரிதும் மேம்பாடு அடைய அவை வழிகோலியுள்ளன. 1972-ல், முந்திரித் தோட்டங்கள் மூலம் சுமார் ரூ. 18 இலட்சம் கிடைத்துள்ளது. கன்னியாகுமரியிலுள்ள அரசினர் ரப்பர் தோட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கியதோடு, இந்த ரப்பரை விற்றதன் மூலம் 1971–72-ல் ரூ. 7·81 இலட்சம் கிடைத்துள்ளது. ரப்பர் தோட்டங்களில் பால் எடுக்கும் மரங்களின் தொகை மேலும் அதிகமாகி, வருவாயும் பெருக நல்ல வாய்ப்புகள் காணப்படுகின்றன.

காடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளாகிய காகித ஆலை, ரேயான் தொழிற்சாலை போன்ற தொழிற் கூடங்களுக்குப் பயன்படும் மூலப் பொருள்களை நீலகிரித் தைல மரங்களும், கற்பூர மரங்களும், மூங்கில் காடுகளும் தொடர்ந்து வழங்கி வருகின்றன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தொடங்கிய வனப்பண்ணைக் காடுகளும் தற்போது பயன் தரும் நிலையை அடைந்து வருகின்றன. கிராம மக்களுக்கு வேண்டிய விறகு வெட்டுமரம் போன்ற தேவைகளை அவை பெரிதும் நிறைவு செய்து வருகின்றன.

1971–72-ல் வனத் துறையின் மொத்தச் செலவு ரூ. 365 இலட்சமாகும். 1972–73-ல் ரூ. 442 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1971–72-ல் வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ. 101·78 இலட்சம் செலவிடப்பட்டது. இத்தொகையில் ரூ. 80 இலட்சம் ஆதாயம் தருகின்ற தொழில்களுக்குத் தேவைப்படுகின்ற தோட்டங்களை வளர்த்தல், பண்ணைக் காடு வளர்ப்புத் திட்டம், காடுகள், குறித்த ஆய்வு, செயல் திட்டங்கள், வன விலங்கு வாழ் இடங்களைப் பேணிப் பராமரித்தல், வைகை மேட்டூர் நீர் கோள் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு ஆகியவற்றிற்குச் செலவாயின.

இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில், வறட்சித் துயர் தணிப்புப் பகுதித் திட்டத்தின்கீழ் 1971–72-ல் ரூ. 4·89 இலட்சம் செலவில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை அகதிகளுக்குப் புது வாழ்வு அளிக்கும் பொருட்டுக் காடுகள் துறை, நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டம், கன்னியா குமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டம் வைத்துப் பயிரிட முற்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு மத்திய அரசு நீண்ட காலக் கடனுதவி வழங்குகிறது. 1971–72-ல், ரூ. 53·44 இலட்சம் இத்திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

முக்கியமான காடுபடு மூலப் பொருள்களை வழங்குவதன் வாயிலாக, வனத்துறை மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள் சிலவற்றின் வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாக இருந்து வந்துள்ளது.



1971–72-ல் சேலம் மாவட்டத்தில் உள்ள சேஷசாயி காகிதத் தொழிற்சாலைக்கு 55,047 டன் உலர்ந்த மூங்கில் வழங்கப் பட்டது. காகிதம் தயாரிப்பதற்குக் கற்பூர மரங்கள் போன்ற கடின மரங்களையும் இத் தொழிற்சாலை பயன்படுத்துகிறது. நடப்பாண்டில் இவ்வாலைக்கு 3,766 டன் கற்பூர மரங்கள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சன் காகித ஆலை, பாபநாசம் மலைகளிலிருந்து ' ஈட்டா ' புல் எடுத்துக் கொள்வது தொடர்பாக வனத்துறையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. 1971–72-ல் இந்த ஆலை சுமார் 4,212 டன் ' ஈட்டா ' வகைப் புல்லைக் கொண்டுவந்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், சிறுமுகை என்னும் இடத்தில் உள்ள சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்தார், ரேயான் கூழ் தயாரிக்க, கற்பூர மரக் கட்டைகளையும், மிலாறு மரக் கட்டைகளையும் பயன்படுத்துகின்றனர். 1971–72-ல் நீலகிரி, கோடைக் கானல் குன்றுகளில் 1,007 ஏக்கர் கற்பூர மரத் தோட்டங்களும், 3,267 ஏக்கர் மிலாறுத் தோட்டங்களும் இத் தொழிற்சாலையின் மூலப் பொருள்களுக்காக ஒதுக்கப்பட்டன.

இத்துறை, மிலாறுப் பட்டைகளை மேட்டுப் பாளையத்திலுள்ள டான் இந்தியா நிறுவனத்திற்குத் தோல் பதனிட உதவும் மிலாறுச் சாரம் எடுக்க வழங்கின. 1971–72-ல் 6,647 டன்கள் மிலாறுப் பட்டைகள் வழங்கப்பட்டன.

இத்துடன் இராச பாளையத்திலுள்ள ' மதரூஸ் சிப் போர்ட்ஸ், ஆலைக்கு 685 கன மீட்டர் மென்மரங்கள் வழங்கப்பட்டன. 1,352 டன் உலர்ந்த புல், பவானிசாகரிலுள்ள தமிழ் நாடு கார்டு போர்டு மற்றும் காகித ஆலைக்கு அளிக்கப்பட்டது.

வைகை அணையிலுள்ள காடு வளர்ப்புப் பயிற்சிக்கூடம், இத் துறையைச் சேர்ந்த வனப் பணியாளர்களுக்கும், வனக் காப்பாளர்களுக்கும் பயிற்சி அளிக்கிறது. 1971–72-ல் 60 வனப்பணியாளர்களுக்கும் 47 வனக்காப்பாளர்களுக்கும் பயிற்சி அளித்தது.

வனத்துறையில் நல்ல முன்னேற்றம் காண்பதற்கு அடிப்படையாக, நன்கு அமைக்கப்



பட்ட சிறந்த ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று அவசியமாகும். வன ஆராய்ச்சிக்குப் பொறுப்பு வகிக்கும் மாநில வனவியல் பிரிவு, மரவளர்ப்புப் பற்றியும் சில முக்கியமான மரவகைகள் பற்றியும் ஆராய்ச்சிகள் செய்து வருகிறது. காடுபடு பொருள்களை மூலமாகக் கொண்டு செயல்படும் தொழில்களின் தேவையை நிறைவு செய்ய, வெளிநாட்டு மர இனங்களைப் பயிரிடல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வினங்களை அதிக அளவில் காடுகளில் உண்டாக்குவதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம். காடு வளர்ப்புத் தொடர்பாகவும், முக்கியமான இனங்களில் பிற கூறுகள் தொடர்பாகவும், மண்வளம் பற்றிய பகுப்பாய்வு, வனப் பயிர்களின் நோய் பற்றிய ஆய்வு முதலிய பிரிவுகள், மாநில வனவியல் ஆராய்ச்சி அலுவலரின் கீழ் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் பலவித வன விலங்கினங்களும், பறவைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன கீழ்க்கண்ட வனவிலங்கு உய்விடங்கள் நமது மாநிலத்தில் உள்ளன.

1. முதுமலை வனவிலங்கு உய்விடம். 2. முண்டந்துறை புலிகல் உய்விடம். 3. கோடியக்கரை வனவிலங்குய்விடம். 4. கிண்டி மான் பூங்கா. 5. வேடந்தாங்கள் நீர்ப்பறவைகள் உய்விடம். 6. ஆனைமலை வனவிலங்குய்விடம்

சென்னைக்கருகாமையில், கிண்டிப் பூங்கா ஒதுக்கக் காட்டில், ஒரு தனிநபர், பாம்புப் பண்ணை நடத்தி வருகிறார். இப் பண்ணை, மக்களை வெகுவாகக் கவர்கிறது. இந்தப் பாம்புப் பண்ணையை அமைப்பதற்காக, அரசு குத்தகைஅடிப்படையில்ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுத்துள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கிளிக்கூடு என்ற கிராமத்தில் ஒரு முதலைப் பண்ணையும் உள்ளது.

இவ்வுய்விடங்கள் சரியானபடி பராமரிக்கப்பட்டால் பெரிய அளவில் சுற்றுலாப் பயணிகளை நிச்சயம் ஈர்க்கும். ஆகவே, பல வசதிகளை, முக்கியமாகத் தங்கும் விடுதிகள், சாலைகள், போக்குவரத்து வசதிகள் போன்றவைகளை இங்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு அதிக அளவில் செய்துகொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

காடுகளிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்கு, சந்தனமர விற்பனையின் மூலம் கிடைக்கிறது. சந்தன மர வளர்ப்பைப் பெருக்கும் நோக்குடன், செயற்கை முறையில் வளர்க்கும் பணி, தகுந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நான்காவது திட்டக் கால அளவில், 1,000 ஹெக்டேர் பரப்பளவில், ரூ. 10 இலட்சம் செலவில் சந்தன மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1972—73-ல் ரூ. 2·87 இலட்சம் செலவில், 113 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது.

1973—74-இல் 200 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரப்பர் தொழில், மோட்டார் தொழில் போன்றவற்றின் பெருக்கத்தால் ரப்பரின் தேவையும் விரைவாகப் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டம்தான் ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்றதாக உள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,000 ஹெக்டேரில், ரூ. 100 இலட்சம் செலவில் ரப்பர் பயிரிடப்படும்.

1972—73-ல் 174 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடப்படும். இதற்காக ரூ. 15·06 இலட்சம் செலவிடப்படும்.

1973—74-ல் 200 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடக் கருதப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 18·86 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



ஏறத்தாழ, 3,800 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள முன்னாள் ஜமீன் காடுகளை வனத்துறை தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டுள்ளது. சிறந்த பாதுகாப்பிற்காக, இக்காடுகள் நில அளவை செய்யப்பட்டு, முறையாக எல்லை வகுக்கப்பட்டு, தமிழ்நாடு காடுகள் சட்டத்தின் கீழ் இவை ஒதுக்கக் காடுகளாக அமைக்கபடவிருக்கின்றன. இத்திட்டத்திற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நமது மாநிலத்திலுள்ள காடுகளில் பலவகையான விலங்குகளும், பறவைகளும் உள்ளன. எனினும், விலங்குகளைக் கண்மூடித் தனமாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் சுடுதல், பொறி வைத்துப் பிடித்தல், நஞ்சிட்டுக் கொல்லுதல் காரணமாகவும், வேளாண்மை, நீர் மின்சாரத் திட்டங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்காக வனப் பகுதிகளை அழித்து வருவதன் காரணமாகவும், விலங்குகளின் எண்ணிக்கைவெகு வேகமாகக் குறைந்து வருகிறது. வன விலங்குகளைப் பாதுகாப்பதில், வன விலங்கு உய்விடங்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதாகவும் உள்ளன. ஆகவே, மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டத்தில், வன விலங்கு உய்விடங்களுக்கு உரிய சிறப்பிடம் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.



தமிழ்நாட்டில், வன விலங்கு உய்விடங்களின் மேம்பாட்டிற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1972—73-இல் ஓய்வு விடுதிகள் கட்டுதல், சாலைகளை அமைத்தல், அதிக அளவில் போக்குவரத்து வசதி செய்தல், தேவையான இடங்களில் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் ஆகிய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். வன விலங்குகளைப் பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகரித்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வன விலங்குகள் கணக்கெடுப்பு, மற்றப் பணிகள் முதலியன திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. 1972—73-ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஆனைமலை வன விலங்கு உய்விடம் என்ற புதிய உய்விடம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1972—73-ல் எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 4·08 இலட்சம் ஆகும்.

1973—74-ல் சாலைகளை மேம்படுத்துதல், ஆனைமலை வன விலங்கு உய்விடத்தில் ஓய்வு இல்லம் ஒன்று கட்டுதல் மற்றும் தேவையான வசதிகள் செய்தல் ஆகிய பணிகள் ரூ. 5·25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

புளி, கோக்கோ, இலவங்கம், குங்கிலியம், கற்பூரத் தைல மரம், எலுமிச்சை வகைச் செடிகள், கடுக்காய் முதலிய காடுபடு சிறு பொருள்கள் நல் நல்கும் மரங்களைச் செறிவாக வளர்ப்பதன் மூலம், விலை மதிப்புள்ள காடுபடு சிறு பொருள் நல்கும் மரங்களைச் செறிவாக வளர்ப்பதன் மூலம், விலை மதிப்புள்ள காடுபடு சிறு பொருள்களிலிருந்து வருவாய் அதிகரிக்கச் சாத்தியக் கூறுகள் உள்ளதால், இத்தகைய மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் 1,500 ஹெக்டேரில் காடுபடு சிறு பொருள்கள் பயிரிடப்படும். 1972—73-இல் ரூ. 2·28 இலட்சம் செலவில் 431 ஹெக்டேரில் காடுபடு பொருள்கள் நல்கும் மரங்கள் வளர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கைத்தறி.... கைத்தறி.... கைத்தறி!

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மிகத் தொன்மையான பெரிய குடிசைத் தொழிலாகும். இங்கு முறையே சுமார் 5.50 இலட்சம் கைத் தறிகள் உள்ளன. ஏறத் தாழ 20 இலட்சம் மக்கள் இத் தொழிலை நம்பியுள்ளனர். ஆண்டொன்றுக்கு ரூ. 48 கோடி மதிப்புள்ள சுமார் 39 கோடி மெஜம் கைத்தறித் துணி கள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப் புள்ள இத் தொழில் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

* * *

தமிழ்நாட்டிலுள்ள 2,000 பட்டுத் தறிகளில், 1972–73-ல் இராசிபுரத் தில் புதிதாகத் தொடங்கப்பட்ட பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுடன் 14 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ், 3,352 தறிகள் கூட்டுறவுத் துறையில் இயங்கி வருகின்றன

பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் சராசரி ஆண்டுதோறும் உற் பத்தி செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 1,45·00 இலட்சமாகும். இவை விற்பனை செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 1,67·98 இலட்சமாகும்.

* * *

கைத்தறித் துணிகளின் ரகங்களை வண்ணங்களை மேம்படுத்தும், நோக்கத்தோடு, நெசவாளர் சங் கங்களின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நீலகிரி, சென்னை நீங்கலாக, ஒவ்வொரு மாவட்டத் திலும் ஒரு பயிற்சி நிலையமாக 12 இடங்களில் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. அந்தந்த மாவட் டத்திலுள்ள நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கம் இத்திட் டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்கும். தகுதி வாய்ந்த கைத்தறித் தொழில் நுட்ப ஆசிரியர்களின் பணி, அரசுச் செலவில் இச்சங்கத்திற்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு நிலை யத்திலும் ஓராண்டில் 30 நெச வாளர்களுக்கு ஒவ்வொரு பாட முறையிலும் பயிற்சி அளிக்க, 5 பாட முறைகள் இருக்கும். அந்தத் திட்டத்தை நடத்தும், சங்க உறுப் பினர்களிலிருந்தும், அப்பகுதி யில் உள்ள பிற சங்கங்களிலிருந்தும் நெசவாளர்கள் இப்பயிற்சிக்குத் தெரிந்தெடுக்கப்படுவர்.

* * *

கைத்தறித் துணிகளில் புதிய கவர்ச்சிகரமான துணி வகைகளைத் தயாரிப்பதற்குக் கூட்டுறவு அமைப் பில் சேர்ந்துள்ள நெசவாளர் களுக்கும், கூட்டுறவு அமைப்பில், சேராத நெசவாளர்களுக்கும், மற்றும் தறி முதலாளிகள், நெசவுத் தொழிற்சாலை முதலாளிகள், துணி வடிவமைப்பாளர்கள் ஆகியவர் களுக்கும் நேரடியான ஊக்க மளிப்பதன் மூலம், கைத்தறித் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பச் செய்யும் நோக்கத்துடன், இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் போட்டி நடத்தி ஒவ் வொரு வகையிலும் சிறந்த ரகத் துணிக்குப் பரிசளிக்கும் திட்டம் அரசினால் ஆண்டு தோறும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய பரிசுகள் வழங்கப்படுவதற்காக மொத்தம் 10,000 ரூபாய் அரசால் செலவிடப்படுகிறது.

* * *

இம்மாநிலத்தில் 42 இலட்சம் கதிர்கள், 9,124 தறிகள் நிறுவப் பட்ட திறனுடன் 208 பஞ்சாலைகள் (184 நூற்பு, 24 நூற்பு நெசவு) உள்ளன. இம்மாநிலத்திலுள்ள கைத்தறித் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தித் திறன் திங்க ளொன்றுக்கு ஏறத்தாழ 20,000 பேல்களாகும். விசைத்தறிகள், உள்ளாடைத் தயாரிப்பு நிறுவனங் கள், பிற துணைத் தொழிற்சாலை களுக்குத் திங்களொன்றுக்கு 9,000 தேவைப் படுகின்றன. எல்லா ஆலை களின் மொத்த உற்பத்தியைக் கருதிப் பார்க்குமிடத்து, பருத்தி நூலுற்பத்தி யைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு எப்பொழுதும் உபரி நிலையிலேயே உள்ளது.

சரிகையுடன் கூடிய பட்டு நெசவுத் தொழிலில் ஏறத் தாழ 20,000 விசைத் தறிகள் ஈடுபட்டுள்ளன. இவற்றில் திங்களொன்றுக்கு 10,000 மார்க்குகள் (Mares) பொன் சரிகைப் பட்டு, நெசவில் கலந்து நெய்யப்படுகிறது. தமிழ் நாட்டுச் சரிகை நெசவுத் தொழில் தனது பொன் சரிகைத் தேவைக்குச் சூரத்தையே பெரிதும் சார்ந்துள்ளது.

சரிகைக்காகச் சூரத்தைச் சார்ந் திருக்க வேண்டிய நிலையைத் தவிர்க்கும் பொருட்டுக், காஞ்சி புரத்தில் சரிகை உற்பத்தி செய்யும் பிரிவு ஒன்றைத் தொடங்க அரசு முனைந்துள்ளது.

சரிகைத் தொழிற்சாலைக் கட்டடம் கட்டுவதற்காக, 4.05 ஏக்கர் நிலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப் பிரிவு 1973 ஏப்ரல் மத்தியில் உற் பத்தியைத்தொடங்குமென எதிர்பார்க் கப்படுகிறது. ரூ. 25 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட் டிருக்கிறது. இப்பிரிவின் பங்கு மூலதனத்திற்கு 1971–72-ல் ரூ. 2.00 இலட்சமும், 1972–73-ல் ரூ. 5.00 இலட்சமும் அரசு முதலீடு செய்துள்ளது.

* * *

தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற் பாலைகள் 12 உள்ளன. கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலை யில் நூல்களை வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நூற்பு ஆலைகள் அமைக்கப்பட்டன. இந்த ஆலை கள் 20-ம் எண் நூலிலிருந்து 100-ம் எண் நூல் வரை, பல்வேறு எண்களில் நூல்களை உற்பத்தி செய்கின்றன. கூட்டுறவுத் துறை யில் மொத்தம் நிறுவப்பட்ட திறனுக 1.98 இலட்சம் கதிர்களைக் கொண்டு 12 ஆலைகள் ஏற்படுத்தப்பட்டதால், இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களுக்கு நியாயமான விலையில் நல்ல தரமான நூல் கிடைக்கிறது.

## கைத்தறியாளர் துயர் நீங்கிட....

கைத்தறி நெசவுத் தொழிலாளருக்கு ஏற்பட் டுள்ள இன்னலை ஓரளவு தணித்திட, தமிழ்நாடு அரசு அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடனைத் தருகிறது. ஏறக் குறைய ஓர் இலட்சம் பேர் இதனால் பயனடைவர். ஆளுக்கு 100 ரூபாய் வீதம் கடனைத் தரப்படும். இதைப் பெறு வோர் ஆகஸ்டு மாதத்தி லிருந்து பத்துப் பத்து ரூபாயாகத் திருப்பிச் செலுத்தலாம்.

# வெண்பாப் போட்டி

## 55. குடிசை மாற்று வாரியப் பணி

*குப்பாயி தன்குடிசை காணோமே ! சப்பைக்கால்
சுப்பன் குடித்தனமும் போயிற்றே !—நம்சென்னைச்
சேரியெல்லாம் செத்து மடிகின்ற தையையோ !
வாரியத்தால் வந்த வினை.

—நா. வைகுந்தன், சின்னச்செங்காடு.

கொட்டும் மழைக்காகக் கும்பாவை வைக்கவிழும்
சொட்டைப்போல் கண்ணீர் சொரிபவளே—கட்டிவிட்டார்
வானுயர்ந்த மாளிகைகள் வாவா குடியிருப்போம்
தேனுமிழும் வாயே சிரி !

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

செங்கதிரும் சில்மழையும் தேன்நிலவும் என்னிருப்பில்
தங்க இடங்கேட்ட தோர்நாளில்—எங்கலைஞர்
வேறின்றிக் கீழ்மேலை வென்றார் குடில்மாற்று
வாரியமே கூட்டும் வளம்.

—சுசி. ஆறுமுகம், நாச்சியாபுரம்.

குப்பையினில் வாழ்ந்தோர் குடிசைமாற்று வாரியத்தால்
உப்பரிகை தன்னில் உலவுவதால்,—இப்புவியில்
செம்மைக் குணங்கொண்ட சீராள ரெல்லாரும்
நம்மரசை வாழ்த்துகின்றார் நன்கு.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

வானமே கூரை, வளர்புழுதி மெத்தையெனும்
ஈன நிலைபோக்கி, இங்குழைப்போர்—மானமுடன்
வாழக் குடிசைமாற்று வாரியத்தைக் கண்டவர்சீர்
வேழநடைப் பெண்ணே விளம்பு !

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

சின்னக் குடிசையெலாம் சிங்கார மாளிகையாய்
மண்ணிலே மாற்றி மகிழ்வீந்தார் — வண்ணத்
தமிழரசார் செய்கின்ற தக்கபணி யாவும்
சமதர்மத் தத்துவந்தான் சாற்று.

—எஸ். சுந்தரம், வெண்பாவூர்.

குடிசைமாற்று வாரியமேற் கொண்ட பணிகள்
எடுத்துரைக்கப் போதுமா இந்நாள்(கு)—அடிகளும் ?
எல்லார்க்கும் வீடுகள் ! எல்லாமே கட்டடங்கள் !
இல்லை குடிசை இனி.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
*திரு வைகுந்தன், ஆசிரியர்,
சின்னச்செங்காடு, செங்காடு அஞ்சல்,
வடஆர்க்காடு மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

முன்னால் இருந்தகொடை வள்ளல்கள் செய்தவற்றை
என்னால் இயலுமென்(று) ஏற்றனையே !—சொன்னாலே,
பாரிநள்ளி ஓரிகாரி அதியனைப் பேகனென
வாரியமாய் வந்தாய் வழங்கு.

—கவித, வே. கள்ளிப்பாளையம்.

வீடின்றி வாழ்வோர்க்கு வீடளிக்கும் நல்லரசு
நாடின்றி நற்குடிசை மாற்றளிக்கும்—கோடிபெறும்
திட்டத்தால் நற்பயனும் சீர்பெறுவர்—ஏழையரே
இட்டமுடன் வாழ்வோம் இனிது.

—கே. மு. கருணாகரன், கேட்டவரம்பாளையம்.

‘கிரிகோரி வோட்டா’ பெருவியப்பில் சொன்னார் ;
‘‘அரிதாம் செயலொன்றை ஆற்றித் — திருநாட்டை
முன்னோடி யாக்கி முழுப்பெருமை நீர்பெற்றீர் ;
பின்னோடு சேர்வார் பிறர்’’

— சிவ. கிருட்டிணன், கணியூர்.

எத்தனையோ நன்மைகள் ஏழைகட்குச் செய்யினும்
அத்தனைக்கும் வித்தாகும் ஆய்ந்திடில்—இத்தரையில்
நில்லாக் குடிசைகளை நீக்கி நிலைவீடு
நல்லரசு தந்ததே நன்கு.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

ஓட்டைக் குடிசையெலாம் ஓடிப் பறந்தனகாண் ;
நாட்டில் விரைந்தோங்கும் நான்மாடக் — கூடம்காண்!
நாட்டம் மிகக்கொண்டே நற்றூதர் பற்பலரும்,
நோட்டம் விடுகின்றார் நோக்கு.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

பண்டைத் தமிழகம்போல் பற்பலநல் வாரியங்கள்
தொண்டாற்றும் மேம்பாட்டைச் சொல்லிடுங்கால்-கண்ணே!
விடிவுபெற ஏழைகட்கு வீடளித்துப் போற்றும்
குடிசைமாற்று வாரியத்தைக் கூறு.

—புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன் கோட்டை.

ஓலைக் குடிசைகள் உள்ள இடமெல்லாம்
வேலைப்பா டுள்ளநல்ல வீடுகளாய்க் — கோலஎழில்
காட்டிநிற்க ஏழைகட்குக் கட்டுவித்த வாரியத்தின்
மாட்சிக் கிணையில்லை மற்று.

—உ. தாமோதரன், சூளை, சென்னை 7.

வெள்ளமே வந்தாலும் வெய்யிலே காய்ந்தாலும்
உள்ளம் கலங்காமல் உய்வதற்கு ; — வெள்ளடுக்கு
மாடிகட்டி வேய்குடிசை மாற்றும் தமிழரசை
நாடிப் புகழ்ந்திடுவோம் நாம்.

—அ. இராமச்சந்திரன், அம்மனூர்.

கள்ளி செழுங்கரும்பாய் ஆனதுபோல் காணுதடா
குள்ளக் குடில்மாற்றிக் கோலமனை — விள்ளரிய
காரியத்தை மெத்தக் கவனமொடு செய்துவரும்
வாரியத்தை நெஞ்சார வாழ்த்து.

— த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

ஈசலின் புற்றாய் இருந்த குடிசையெலாம்
வாசமலர்த் தேன்கூடாய், வான்முட்டும் — பாசறையாய்
மாறியதைக் கண்டோம் ; மனத்தாலே அக்குடிசை
வாரியத்தைப் போற்றுவோம் வா.

—அரங்க. முத்துமணி, கிழப்பழுவூர்.

வறுமை யொழிந்து வளத்தைப் பெருக்கிச்
சிறுகுடிசை மாளிகையாய்ச் செய்யப் — பெறுகின்ற
நல்லபல திட்டத்தை நங்கலைஞர் ஆற்றுவதால்
எல்லாரும் வாழ்வோம் இனிது!

—இரத்தின கோபால கிருட்டிணன், அளக்குடி.

கூடிக் குடிசையிலே கொந்தளிப்போர் மாடிபெற
நாடி நலம்புரியும் நம்மரசைச் — சேடியே!
‘‘கோடியீ லொன்றேநம் கொற்ற’’மென் றேபாடு!
வீடுபே றீவார்க்கே றிடு!

—புலவர் பூங்குழலி, பொருளூர்.

நாற்புறமும் சாக்கடைநீர் நாற்றமிகு குப்பைமணம்
காற்றுவர அஞ்சும் கழிவிடத்தில் — நேற்றுவரை
நின்றிருந்த மண்குடிசை நீடுயர்ந்த மாடிகளாய்
இன்றைக்குச் செய்தார் இசைந்து.

—கண்ணகாந்தி, தாராபுரம்.

ஓலைக் குடிசைகளில் ஒட்டுத் துணியுடனே
நாளைக் கழித்தே நலிவுற்ற — ஏழைகள்தாம்
வாழக் குடிசைமாற்று வாரியத்தார் கட்டியவை
போலப் பிறிதுண்டோ புகல்!

—நெல்லை ஆ. கணபதி, சைதை.

## வெண்பாப் போட்டி

பாடுபட்டு வாழ்கின்ற மக்கள் பறவைபோல்
கூடுகட்டி வாழ்வார் குடிசையிலே — கேடுகெட்ட
இந்நிலையை நீக்க இசைவுடனே முன்வருவார்
தந்நிலையைப் போற்றிடுவோம் சார்ந்து.

—புலவர் செந்தமிழ்க்கிழார், அருப்புக்கோட்டை.

மலடியெனும் பேர்போய் மகவடைந்தேன், வீடாம்
கலைஞர் குடில்மாற்றில் கண்டேன் — நிலைவாழ்வே
இல்லார் இருப்பாரென் றில்லா நிலைவந்தே
எல்லாம் பெறுவோம் இனி.

—எஸ். சூசையம்மாள், நாச்சியாபுரம்.

எட்டடுக்கு மாளிகையில் ஏழையரை வாழ்விக்கத்
திட்டமிட்டுச் செய்யும் திருத்தொண்டால் — பட்டாங்கில்
மக்கள் நலங்காக்கும் மாண்புடைய வாரியத்தை
நெக்குருகி வாழ்த்துமென் நெஞ்சு!

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

தலைநிமிர்ந்து வாழும் தமிழன்றன் வீட்டில்
தலைகுனிந்து செல்லும் தகாத —நிலைஉணர்ந்து
வாரியத்தால் சேரிவாழ் மக்களுக்கு வீடளிக்கும்
காரியத்தை ஆற்றினரே காண்.

—கே. ஏ. அர்ஜுனன், உத்தமபாளையம்.

குடியரசு நாட்டில் குடிசைவாழ் மக்கள்
படுகின்ற துன்பத்தைப் பார்த்து ; — அடியேகேள்!
வாடி இருந்தோர்க்கு வாகாய்த் 'தமிழரசு'ம்
மாடிகட்டித் தந்தார் மகிழ்ந்து.

—ப. குப்புசாமி, பொன்மலை.

நேற்றிங்கே கண்டதென்ன? கீற்றுக் குடிசைகளே!
மாற்றினர் ஓர்நொடிக்குள் மாளிகையாய்!—ஆற்றல்பார்!
அண்ணாவின் தம்பியர்கள் ஆட்சியிலே ஏழைமக்கள்
எந்நாளும் வாழ்வா ரினிது.

—மெய். சிவநேசன், கலையனூர்.

ஓட்டைக் குடிசையிலே ஒன்றிவாழ் ஏழையர்க்கு
வீட்டை வழங்கியவர் வேதனையை — ஓட்டியே
நாட்டைத் திருத்துகின்ற நற்பணியைக் கூட்டுபவர்
கோட்டையிலே வாழ்கவெனக் கூப்பு.

—புலவர் வி. துரைசாமி, தேவத்தூர்.

பொத்தலுள இக்குடிசை பொன்வேய்ந்த மாளிகையாய்
இத்தரையில் மாறுவதும் எந்நாளோ? — அத்தானே!
என்றவளே! என்னவளே! இன்றைக்கே மாறியது
மன்றிலுயர் வாரியத்தி னால்.

—வி. சேசாசலம், அரடாப்பட்டு கிராமம்.

இல்லார் எனும்நிலையை இல்லாது போக்கிடவே,
இல்லம் பலகட்டி ஈந்துவரும் — நல்லரசார்
சொல்லால் கவிதைச் சுவையூட்டச் செய்திடுவார்
செல்லாப் புகழைநிதம் சேர்த்து!

—வசந்தராசன், வெள்ளக்குட்டை.

வேற்றாரும் கண்டு வியக்கும் வகையினிலே
மாற்றினர் மண்குடிசை மாளிகையாய் — கீற்றோலை
வீடெல்லாம் மாற்றும் விளங்குபுகழ் நம்மரசின்
பீடெல்லாம் வாயாரப் பேசு.

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

மாடியிலே வாழ்கின்ற மாச்செல்வர்க் கீடாகக்
கூடிக் குடியிருக்கச் செய்திடவே — தேடிக்
குடிசைமாற்று வாரியத்தைக் கோலமுடன் தந்தார் ;
வீடிவுண்டோ மக்கட்கு வேறு.

—கவிப்பித்தன், ஆர்ப்பாக்கம்.

நாளும் உழைத்துவந்து நன்றாகத் தூங்கவரின்
தேளும் கரப்பானும் தீண்டுதற்குச் —சூளுரைக்கும்
பாழும் குடிசைகள் பற்பலவும் மாற்றியருள்
வாழும் அரசுக்கென் வாழ்த்து.

—இல. ஆலையழகன், வல்லம்.

களவும் கற்பனையும் கைக்குவர இங்குத்
தினமும் புதுத்திட்டம் தேர்ந்து — மனமகிழ்வாய்
எல்லாரும் வாழ்ந்திடவே இல்லம் எளிதாக
நல்குமோர் வாரியத்தை நம்பு.

—அ. அகத்தியன், தவசி.

சாலையின் ஓரத்தில் சாக்குத் திரைக்குள்ளும்
ஓலைக் குடிசையிலும் ஒன்றியோர்—காலைக்
கதிரின் முகத்தில் விழிக்கின்றார் கட்டடத்துள்
கதியாம் தமிழரசால் காண்.

—அன்பழகன், மயிலாடுதுறை,

உங்கள் பணத்தை சுலபமாகப் பெருக்க கார்பொரேஷன் பாங்கின் சீரிய திட்டங்கள்!

*எங்களது மாதவருவாய்த் திட்டங்களில் சேர்ந்திருக்கிறீர்களா?*

நிரந்தர டெபாசிட்டுகள், தொடர் டெபாசிட்டுகள் மற்றும் ஊனதா டெபாசிட்டுகளுக்கும் கார்பொரேஷன் பாங்க் கூடுதலாகவே வட்டி கொடுக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்குப் பின் உங்களை மகிழ்ச்சியிலாழ்த்தும் வகையில் பணம் சேர்ந்திருக்கும். இன்றே உங்கள் அருகாமையிலுள்ள கார்பொரேஷன் பாங்க் அதிகாரிகளை அணுகுங்கள்.

சில சமயம் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே உங்களுக்குப் பணம் தேவைப்பட்டால் இந்த டெபாசிட்டுகளிலிருந்து வட்டியுடன் பணத்தைப் பெற யாதொரு தடையும் இருக்காது. ஆனல் பணமுடையிருக்கும் காலங்களிலும் கூட எடுக்காமல் பேணி காத்து வந்தால் குறிப்பிட்ட காலத்தில் முழுமையான பலனை அடைவீர்கள்.

*—சினேக மனப்பான்மையுடன் விளங்கும் வங்கி*

ESTD. 1906

**கார்பொரேஷன் பாங்க் லிமிடெட்**

(கனரா பாங்கிங் கார்பொரேஷன் லிமிடெட் என்று முன்னுளில் அழைக்கப்பட்டது)

பதிவு அலுவலகம் : உடுப்பி நிர்வாக அலுவலகம் : மங்களூர்

mea/CBL/246 Tam




## திருச்சி மாவட்டத்தில் சீரிய பணிகள்

சிறு சேமிப்பு.—*1972–73*-ஆம் ஆண்டிற்கு இம் மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கீடு ரூபாய் *80* இலட்சம் மட்டுமே. ஆனல், இம்மாவட்டத்தில் *31—3—1973*வரை ரூ. *90,43,996* வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் மற்றொரு சிறப்பான அம்சம் ரூ. *53* இலட்சம் வரை குறிப்பிட்ட கால டிபாசிட்டில் பெறப்பட்டுள்ளது.

* * *

வறட்சித் துயர் தணிப்புப் பணி.—இம் மாவட்டத்திற்கு *1972–73*-ல் வறட்சி நிவாரணத்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ. *4* இலட்சமும் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகள் அமைக்கவும், தாத்தையங்கார் பேட்டை, ஆண்டிமடம், தா.பழூர் ஆகிய வட்டாரங்களில் *10* குடிநீர்க் குழாய்க் கிணறுகள் அமைக்கவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

* * * *

### வெள்ள நிவாரண வேலை

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட *5,738* குடும்பங்களுக்கு மொத்தம் ரூ. *4,08,212* நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்பங்களுக்குப் பாதிக்கப்பட்ட நேரத்தில் உணவு வழங்க ரூ. *13,005* செலவு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புதுப்பிக்க வீடு ஒன்றுக்கு ரூ. *250* வீதம் கடனுகக் கொடுக்க ரூ. *4* இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பெற்று, அவை வேப்பந்தட்டை, வேப்பூர், திருமானூர், முசிறி, செந்துறை ஆகிய ஒன்றியங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

சாலைகள் பழுது பார்க்க ரூ. *11* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பெற்று அதன் மூலம் *211* சாலைகள் பழுது பார்க்கப்பட்டு ரூ. *10·88* இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அதே போல் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிமன்றச் சாலைகளைப் பழுது பார்க்க ரூ. *7* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் மூலம் *187* சாலைகள் பழுது பார்க்கப்பட்டு ரூ. *7·58* இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு பாசனக் குளங்களைப் பழுது பார்க்க ரூ. *2* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன்மூலம் *136* வேலைகள் நடைபெற்று வருகின்றன. ரூ. *1·63* இலட்சம் செலவாகியுள்ளது. அதேபோன்று பொதுப் பணித்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள பாசனக் குளங்களைப் பழுது பார்க்க ரூ. *2·47* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு *36* வேலைகள் நடைபெற்று வருகின்றன. ரூ. *1·80* இலட்சம் செலவாகியுள்ளது.

# ஒப்பற்ற ஓமியோபதி

**நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பம் வளர்ந்து வரும் இக் காலத்தில் ஓமியோபதி போன்ற மருத்துவ முறைகள், ஆங்கில மருத்துவ முறைக்கு அடுத்ததாகவே இருக்கின்றன. இவ்வாறு இருந்த போதிலும் இந்த மருத்துவ முறை மனிதனின் உடல் நோயைப் போக்கும் பணியில் தனது பங்கை ஆற்றி வருகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.**

எந்த ஒரு மருத்துவ முறையும் சிறந்ததெனக் கூறமுடியாது; ஒரு மருத்துவ முறையின் மூலம் பெற முடியாத சிகிச்சையை மற்றொரு மருத்துவ முறையின் மூலம் பெறலாம். ஆஸ்துமா நோய், நோயாளிகளைத் துன்புறுத்தி வருகிறது. இதனால் இவர்களுக்குச் சில நோய்கள் தோன்றுகின்றன. ஆனால், நவீன மருத்துவர்களால் இத்தகைய நோய்களை விரட்டியடிக்க முடியவில்லை. இத்தகைய நோய்கள் அவர்களைத் திணறடித்து வருகின்றன; நவீன மருத்துவ விஞ்ஞானத்திற்கு ஊறு செய்யும் பொருட்டே இத்தகைய நோய்கள் இருந்து வருகின்றன என்று பிரபல மருத்துவர்கள் ஒத்துக் கொண்டுள்ளனர். ஆனால், ஓமியோபதி மருத்துவர்கள் இந்நோய்களை ஓட ஓட விரட்டியடித்துள்ளதாகக் கூறுகின்றார்கள். எந்த அளவுக்கு இத்தகைய நோயாளிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சைகள் அளிக்க முடியும் என்பது பற்றிப் பிரபல ஓமியோபதி மருத்துவர் மிகவும் அழகாகத் தமது கருத்துகளை இங்குக் கூறியுள்ளார்.

தொற்று நோய்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவும், அவற்றை விரட்டியடிப்பதற்காகவும் மனித உடலில் சில எதிர்ப்புப் பொருட்கள் உள்ளன. இவை, நோய்க் கிருமிகள் உடலில் எந்தவிதத் தீங்கையும் ஏற்படுத்தா வண்ணம் கவனித்துக் கொள்கின்றன. இவை, பாக்டீரியா போன்ற தொற்று நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடுவதோடு மட்டுமல்லாமல், சில சமயங்களில் உயிரற்ற சில அங்ககப் பொருட்களை எதிர்க்கும் திறன் வாய்ந்ததாகவும் விளங்குகின்றன. ஆகையால் உயிரற்ற பொருட்களை எதிர்ப்பதைத் தான் நாம் 'அலர்ஜி' என்று கூறுகிறோம். இந்த 'எதிர்ப்புப் பொருட்கள்' மிகவும் துடிப்பு மிக்கதாக உள்ளன. இத்தகைய எதிர்க்கப்படும் உயிரற்ற பொருட்களை மருத்துவர்கள் 'அலெர்ஜன்' அல்லது 'ஆன்டிஜென்' என்று கூறுகிறார்கள்.

மனித உடலில் இந்த அலெர்ஜெனை எதிர்த்து 'எதிர்ப்புப் பொருட்கள்' போராடுகின்றன. இந்த எதிர்ப்புப் பொருட்கள் எவ்வாறு, எதற்காக ஏற்படுகின்றன என்பது மிகவும் சிக்கலான விஷயமாகும். இவை பல பேருக்குப் பரம்பரையாக இருந்து வருகின்றன. உங்கள் தகப்பனாரோ அல்லது முப்பாட்டனாரோ ஆஸ்துமா அல்லது 'அலெர்ஜி' நோய்களால் அவதிப்பட்டிருந்தால், உங்களுக்கு இத்தகைய நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

அன்றாட வாழ்க்கையில் நாம் உபயோகிக்கும் பொருட்களில் நமது உடலுக்கு ஒத்துக் கொள்ளாத பொருட்கள் பல இருந்த போதிலும், மருந்துப் பொருட்கள், சுற்றுப்புறச் சூழ்நிலை, அசுத்தம் ஆகியவை நமக்கு அதிகமாக ஒத்துக் கொள்வதில்லை. 30, 40 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களைவிடத் தற்போது வாழும் மக்களில் அதிக எண்ணிக்கையினருக்குப் பல பொருட்கள் ஒத்துக் கொள்வதில்லை. துரதிஷ்ட வசமாக நவீன மருத்துவ முறையின் மூலம் இத்தகைய நோய்களைப் போக்க முடியாது. அதிக அளவு இத்தகைய நோய்களினால் ஏற்படும் உடல் துன்பத்தைக் குறைக்கலாம்.

நோயாளியின் உடல் பாகங்களை மரத்துப் போகச் செய்து பின்னர் மேல்தோல் பரிசோதனைகள் பல செய்து நோயாளிக்கு எந்தப் பொருள் ஒத்துக் கொள்ளவில்லை என்று கண்டுபிடிப்பதற்கும், நவீன மருத்துவ முறை பயன்படுகிறது. இதைக் கண்டுபிடித்த பின்னர், அலெர்ஜி நோயை உண்டு பண்ணக்கூடிய பொருளினால் தயாரிக்கப்பட்ட திரவத்தை ஊசி மூலம் சிறிது சிறிதாக நோயாளியின் உடலில் செலுத்திக் குணப்படுத்தலாம். இத்தகைய நோய்களைச் சிறந்த முறையில் ஓமியோபதி மருத்துவ முறையின் மூலம் குணப்படுத்தலாம்.

ஓமியோபதி மருத்துவத்தின் மூலம், சதச் சவ்வு அழற்சி, தோல் சம்பந்தப்பட்ட சொறி, சிரங்கு, ஆஸ்துமா போன்ற நோய்களைக்கூட குணப்படுத்த முடியும். நவீன மருத்துவப் பொருட்களை முதலில் உபயோகிக்காமல் இருந்தால் ஓமியோபதி மருத்துவத்தின் மூலம் குணப்படுத்துவது மிகவும் எளிதாகும். நவீன மருந்துகளை உபயோகித்த நோயாளிகளுக்கு ஓமியோபதி மருத்துவச் சிகிச்சை பலன் அளிக்காது.

உதாரணமாக, குழந்தைகளுக்கு வரும் ஆஸ்துமா நோய், அவர்கள் பருவம் அடைந்தவுடன் குணமாகிவிடும். இருந்தபோதிலும் ஓமியோபதி சிகிச்சை மூலம் இந்நோயிலிருந்து விரைவாக முழுவதும் விடுபடலாம். ஆஸ்துமா நோய் கிட்டத்தட்ட 10-வது வயதில் ஒரு சிறுவனைப் பிடிக்கிறது. சிறுமிகளைவிடச் சிறுவர்கள்தான் இந்நோயினால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

பரம்பரையாக ''அலெர்ஜி' ஏற்படக் கூடிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்குத் தொண்டைச் சதை வளர்ச்சியைத் தடுக்க நவீன மருந்துகளைக் கொடுத்தாலோ அல்லது அறுவைச் சிகிச்சை செய்தாலோ சாதாரணமாக அவர்களது சுவாசப் பைகளில் சில விளைவுகள் ஏற்படுகின்றன. ஆகையால், இத்தகைய குழந்தைகளுக்கு ஓமியோபதி மருத்துவம்தான் சிறந்ததாகும். சரியான ஓமியோபதி மருந்துப் பொருட்கள் கிடைக்கவில்லை என்றால்தான் இத்தகைய குழந்தைகளுக்கு நவீன மருந்துப் பொருட்களைக் கொடுக்க வேண்டும். இத்தகைய குழந்தைகளுக்கு அடிக்கடி தொண்டையில் சதை வளர்ச்சி ஏற்பட்டுத் துன்பப்படுகிறார்கள். மேலும், நவீன மருந்துப்பொருட்களால் இது குணமடைவதில்லை. 40 வயதுக்கு மேல் ஒருவருக்கு ஆஸ்துமா நோய் பிடித்தால் அவர் மிகவும் துன்பப்படுவார். ஆனால் இத்தகைய நோயாளிகளையும் ஓமியோபதி மருத்துவ முறை மூலம் பூரணமாகக் குணப்படுத்த முடியும் என்று ஓமியோபதி மருத்துவர்கள் கூறுகின்றனர். இந்நோயை ஓரளவு குணப்படுத்திவிட்டு, பிறகு சிகிச்சையை நிறுத்திக் கொள்ளக் கூடாது. இந்நோயை மறைத்து வைக்கவும் கூடாது. இவ்வாறு செய்யாமல் இருந்தால் செலவும் மிச்சப்படும். நோயும் கணிசமான அளவுக்குக் குறையும்.

தற்போதுள்ள நவீன மருந்துப் பொருட்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால், உடலில் ஏற்படும் விளைவுகளின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. தொடர்ந்து பல புதிய மருந்துப் பொருட்கள் புகுத்தப்பட்டு வருவது, நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. இம்மருந்துகள் தனி மனிதனின் உடல்நிலையில் பல்வேறு மாறுதல்களை விளைவிக்கின்றன. இதனால் சில பொருட்கள் சிலருக்கு ஒத்துக்கொள்வதில்லை. ஆனால், இதற்காக நாம் நவீன மருந்துகளை உபயோகிக்காமல் இருக்க முடியாது. ஏனெனில், அவை ஓரளவிற்கு நோய்களைக் குறைக்கின்றன. மூச்சுக் குழல், மூக்கு போன்ற சுவாச உறுப்புகளில் நீர்ப்பிடித்தல் தொண்டையில் சதை வளர்ச்சி, போன்றவை ஏற்பட்டால், மிகப் பிரமாதமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆனால் இத்தகைய நோய்களை ஓமியோபதி மருத்துவத்தின் மூலம் மிகச் சிறந்த முறையில், எளிதில் குணப்படுத்தலாம்.

ஓமியோபதி மருந்துப் பொருட்கள் எவ்வித அலர்ஜியையும் ஏற்படுத்துவதில்லை. மேலும், உடலில் நச்சுப் பொருட்களினால் ஏற்படும் விளைவுகளையும் ஓமியோபதி மருந்துகள் தடுக்கின்றன.

தற்போதுள்ள எல்லா மருத்துவமனைகளிலும் நவீன மருத்துவர்களுடன், திறன் மிக்க ஓமியோபதி மருத்துவர்களும் பணிபுரிய வேண்டும் என்று ஓமியோபதி மருத்துவ முறையை ஆதரிப்பவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

சாதாரணமாக ஏற்படக்கூடிய அலெர்ஜியை மிக எளிய முறையில் ஓமியோபதி மருந்துகள் மூலம் குணப்படுத்துவது பற்றிய தீவிரப் பயிற்சி வகுப்புகள், நவீன மருத்துவர்களுக்காக நடைபெற வேண்டும்.

சிக்கன வழியில், சிறந்த முறையில் உடல் நோயை அதிக அளவுக்குக் குறைக்க ஓமியோபதி மருத்துவ முறை மிகவும் அவசியமாகும்.

## வெண்பாப் போட்டி - 56

அரசு போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர்களுக்கு முதலீட்டில் பங்கும் நிருவாகத்தில் பொறுப்பும் அளிக்கும் தமிழக அரசின் சமதர்மச் சாதனையைப் பற்றி வெண்பா எழுதுக.

முடிவு நாள்: 2—6—1973.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.




ஆட்டுக்கடா யாருக்குச் சொந்தம்?

இதைப் பற்றி இரண்டு பெண்களுக்கிடையே தகராறு வந்தது.

முதல் பெண் "இது என் ஆடுதான். நான்தான் இதை வளர்த்து வருகிறேன்!" என்று சொந்தம் கொண்டாடினுள்.

இரண்டாமவளோ "இல்லை, இல்லை. இந்த ஆடு எனக்குத் தான் சொந்தம். இல்லாவிட்டால் இதற்குப் பணத்தைச் செலவழித்துத் தீனி போட்டு வளர்ப்பேனு?" என்று உரக்கக் கத்திஞள்.

இப்படி இருவருமே ஆடு எனக்குச் சொந்தம் என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தால் யாருக்குப் பயன் கிடைக்கப் போகிறது? பிறகு இருவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி நேரே காவல் நிலையம் சென்று புகார் செய்தார்கள்.

இருவரும் ஆடு என்னுடையதுதான் என்று பிடிவாதம் பிடித்ததைக் கண்ட காவல் நிலைய அதிகாரிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆடோ, அனைவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தது!

காவல் நிலைய அதிகாரிக்குத் திடீரென ஒரு யோசனை வந்தது. உடனே அவர் இருவரையும் பார்த்து. "இந்த ஆட்டை இங்கே விட்டு விட்டு நீங்கள் வீட்டுக்குப் போங்கள். இங்கிருந்து ஆடு யார் வீட்டுக்குப் போகிறதோ அந்தப் பெண்ணுக்குத்தான் அது சொந்தமாகும் என்று தீர்ப்புக் கூறினர்.

அதற்கு இருவரும் சரியென ஒப்புக் கொண்டு தத்தம் வீட்டுக்கு விரைந்து சென்ருர்கள். 'ஆடு நம்ம வீட்டுக்குத்தான் வரப் போகிறது!" என்று அதை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள் ஒருத்தி. 'நிச்சயம் அந்த ஆடு என்னைத் தேடித்தான் வரும்!' என்று ஆவலுடன் காத்திருந்தாள் மற்ருெருத்தி.

இரண்டு பேரும் வீட்டை அடைந்ததும் காவல் நிலைய அதிகாரி ஆட்டை அவிழ்த்து விட்டார். ஆடு யார் வீட்டுக்குப் போகிறது என்பதைப் பார்க்கப் பலர் அதன் பின்னலேயே சென்றனர். ஆடு நேரே தன் வீட்டுக்குச் சென்றது. அதாவது இதுவரை தான் யாரிடம் இருந்து வந்ததோ, அந்தப் பெண்ணிடமே வந்து சேர்ந்தது. அவள் அன்புடன் அதைத் தடவிக் கொடுத்துப் பெரிதும் மகிழ்ந்தாள். ஆடும் துள்ளிக் குதித்தது. இதைப் பார்த்தவர்கள் 'இவள் தான் ஆட்டுக்குச் சொந்தக்காரி!" என்று பேசிக் கொண்டார்கள்.



# ஆடும், குதிரையும்!

'பூங்கொடி'

ஆடு தனக்குத் தான் சொந்தம் என்று வீண் பிடிவாதம் பிடித்த மற்றவளோ, வெகு நேரமாகியும் ஆடு வராததைக் கண்டு ஏமாற்றமடைந்தாள்.

பொய்பேசி ஆட்டைத் தனதாக்கிக் கொள்ள நினைத்தவளுக்கு என்ன கிடைத்தது? அவமானமும், ஏமாற்றமும் ஏற்பட்டது!

பிறர் பொருளின் மேல் ஆசை வைப்பதும், அதைக் கவர நினைப்பதும் மனிதனுக்கு அழகில்லை என்பது இந்த உண்மைச் சம்பவத்திலிருந்து தெரிகிறதல்லவா?

அண்மையில், உண்மையில் நடந்த இந்த ஆட்டுக்கடா வழக்கைப் போல, அந்தக் காலத்திலும் ஒரு குதிரை வழக்கு நடந்தது.

ஒருவர் குதிரையிலேறிக் கொண்டு கடைத்தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு முடவன் போவோர் வருவோரிடம் தனக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொண்டிருந்தான். குதிரையில் வந்தவர், முடவன் மீது இரக்கப்பட்டுப் பணம் கொடுத்து உதவினர். பணத்தைப் பெற்றுக் கொண்ட முடவன், "ஐயா! என் வீடு இங்கிருந்து ஒரு கல் தொலைவில் இருக்கிறது. எனக்கோ கால்கள் இல்லை. ஆகவே, தயவு செய்து என்னை அங்கே கொண்டு போய் விட்டுவிட்டால் மிகவும் நன்றியுடையவனயிருப்பேன்!" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

குதிரையில் வந்தவரும் சரியென அவனைத் தம் குதிரையில் ஏற்றிக் கொண்டார். குதிரை




விரைந்து சென்றது. முடவனின் வீடும் வந்தது.

" தம்பி ! இதோ உன் வீடு. இறங்கிக் கொள். நான் சீக்கிரம் போக வேண்டும். எனக்கு நிறைய வேலை இருக்கிறது... " என்றார் குதிரையில் வந்தவர்.

" என்ன ! என் குதிரையில் ஏறிக்கொண்டு என்னையே இறங்கச் சொல்கிறீரா ? அதெல்லாம் நடக்காது. பேசாமல் குதிரையைவிட்டு இறங்கி, வந்த வழியே போங்கள் ! " என்றான் முடவன்.

குதிரைக்குச் சொந்தக்காரரோ இதைக் கேட்டுத் திடுக்கிட்டார். உதவி செய்யப் போய் உபத்திரவம் வந்ததே என்று மிகவும் மனம் வருந்தினார். இருவரும் ' இது என் குதிரை ' என்று தகராறு செய்து கொண்டிருந்தனர். இதைக் கண்ட வழிப்போக்கர்கள் கூட்டங் கூடிவிட்டனர் 'ஐயோ பாவம் ! முடவனுடைய குதிரையில் ஏறிக் கொண்டு, இந்தஆள் பிடிவாதம் பிடிக்கிறானே !'' என்று முடவனுக்கு ஆதரவாகப் பேசினர். ஆனால், குதிரைக்குச் சொந்தக்காரன் எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்பதாயில்லை !

இறுதியில் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து அவ்வூர் நீதிபதியான மரியாதை இராமனிடம் சென்று முறையிட்டனர். நீதிபதி இருவரையும் விசாரித்தார். இருவரும் ' குதிரை என்னுடையது ' என்றனர். நீதிபதி சிறிது நேரம் யோசித்து விட்டு, " சரி, குதிரையை இங்கே விட்டுவிட்டுப் போங்கள். நாளை காலை இருவரும் இங்கே வாருங்கள் !'' என்று அவர்களை அனுப்பிவிட்டுக் குதிரையை ஒரு குதிரைக் கொட்டிலில் கட்டி வைக்கச் சொன்னார்.

மறுநாள் காலை !

இருவரும் நீதிபதியிடம் வந்தனர். நீதிபதி அவர்கள் இருவரையும் தனித் தனியாகக் குதிரைக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே நிறையக் குதிரைகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருந்தன.

நீதிபதி குதிரைக் காரரைப் பார்த்து " எங்கே உங்கள் குதிரையை அடையாளம் காட்டுங்கள் பார்க்கலாம் ? " என்று கேட்டார். அவர் உடனே தன் குதிரையைத் தொட்டுக் காட்டினார். அவர் போன பிறகு முடவனை அடையாளம் காட்டச் சொன்னார். உடனே அவனும் அதே குதிரையைத் தொட்டுக் காட்டினான் !

ஆனால், குதிரைக்குச் சொந்தக்காரர் தொட்டதும் அது அன்பு காட்டி அவரை நெருங்கி வந்தது; முடவன் தொட்டதும் அது கனைத்துக் கொண்டு அவனை உதைக்கத் தொடங்கியது. இந்தக் குறிப்பிலிருந்து குதிரை முடவனுடையது அல்ல என்றும் அவன் வேண்டுமென்றே குதிரையைத் தனதாக்கிக் கொள்ளப் பேராசை கொண்டான் என்பதையும் அறிந்து அவனைத் தண்டித்துக் குதிரையை உரியவரிடம் சேர்ப்பித்தார் நீதிபதி.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வதென்ன?

உழைத்துச் சம்பாதித்தால் நாம் விரும்பியதை வாங்கிக் கொள்ளலாம். உழைப்பதற்கு அஞ்சிப் பிறர் பொருளை எளிதில் களவாடவும் தனதாக்கிக் கொள்ளவும் எண்ணினால் அது அவனுக்கே தீங்காய் முடியும். அத்தகையவர்களால் வாழ்க்கையில் கொஞ்சங் கூட முன்னேற முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### சுருக்கெழுத்தின் சரித்திரம்

இப்பொழுதுள்ள சுருக்கெழுத்து முறை இருபதாம் நூற்றாண்டின் தேவைக்காக ஏற்பட்டதல்ல. சுருக்கெழுத்துக்கு நீண்ட சரித்திரம் உண்டு.

இந் நூற்றாண்டில் சுருக்கெழுத்து நல்ல வளர்ச்சி பெற்றிருக்கலாம். ஆனால் கி. மு. முதலாம் நூற்றாண்டில் ரோமாபுரியில் சுருக்கெழுத்து புழக்கத்தில் இருந்ததாம். சிசிரோ என்ற சொற்பொழிவாளர் தனது பேச்சுக்களை எடுக்கத் திரான் என்ற சுருக்கெழுத்தாளரை வைத்திருந்தாராம்.

# தேனே தேனல்லவோ!

பொதுவாக மருந்தென்றால் கசக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆனால், இனிக்கும் மருந்தொன்று இருக்கிறது. அதுதான் தேன்! இந்தத் தித்திக்கும் தேன் ஊட்டந்தரும் உணவாகவும். உடற்பிணிகளைப் போக்கும் அரு மருந்தாகவும் பயன்பட்டு வருகிறது.

பேரிச்சம்பழத்திற்கு அடுத்தாற் போல அதிக ஊட்டம் தருவது எது?

கிலோவுக்கு 3,200 கலோரி ஊட்டம் தந்து உடலுக்கு உரம் கொடுப்பது எது?

பாலைவிட 6 மடங்கு அதிகமாகப் பயன் தருவது எது?

எல்லாம் இந்த இனிக்கும் இன்னமுதான தேன்தான்!

தேனீக்கள் ஒன்று சேர்ந்து வாழும் இயல்புள்ளவை. அவை, கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. ஒரு கூட்டத்தில் பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி அலுவல்கள் உள்ளன. ஒரு தேனீக் கூட்டத்தில் ஒரு இராணி ஈ இருக்கும். அதுதான் அந்தக் கூட்டத்திற்கே தலைவி. ஆண் ஈக்களும் உள்ளன. இவற்றின் பணி இனவிருத்திக்கு உதவுவது மட்டும்தான். அடுத்தாற்போல் பணி ஈக்கள் உள்ளன. தேனீக் கூட்டத்தில் மிக அதிக எண்ணிக்கையில் இருப்பவை பணி ஈக்களே; தேனீக் கூட்டத்தின் நலனைப்பேணுவது இவற்றின் அலுவலாகும்.

தேனீக்கள் புழு அறைகளையும் தேன் அறைகளையும் பூசும் வேலைகளையும், கொண்டு வரும் உணவுப் பொருள்களைச் சேமித்துப் பாதுகாக்கும் வேலையையும் கவனித்துக் கொள்கின்றன. ஆண் ஈக்கள், குஞ்சுகள் ஆகியவற்றின் தேவைகளைக் கவனித்துக் கொள்வது, ஈ மெழுகை உற்பத்தி செய்வது, தேன் கூட்டைச் சுத்தி செய்வது ஆகியவையெல்லாம் கூட்டுக்குள் இருக்கும் இளம் ஈக்களின் பணியாகும். 20, 25 நாட்கள் இத்தகைய வேலை செய்த பிறகுதான் அவை வெளியே பறக்கத் துவங்குகின்றன. வெளியே சென்று பூந்தேனைச் சேகரிக்கின்றன.

ஒரு சாதாரண தேனீக் கூட்டத்தில் 20,000 விருந்து 30,000 வரை பணி ஈக்கள் இருக்கும். ஒவ்வொரு ஈயும் பலதடவை வெளியே பறந்து சென்று வரும். ஒவ்வொரு தடவையும் கிட்டத்தட்ட இரண்டு கிலோமீட்டர் வரை பறக்கும். ஒரு பணி ஈ தனது வாழ்நாளில் இலட்சக்கணக்கான மலர்களுக்குச் சென்று வரும்.

ஒரு ஈ ஒரு கிலோ தேனுக்குத் தேவையான பூந்தேனைச் சேகரிப்பதற்குப் பூமியை நான்கு தடவை சுற்றி வருவதற்குத் தேவையான தூரம் பறந்து செல்ல வேண்டியிருக்கும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்!

பூந்தேனை மலரிலிருந்து உறிஞ்சிய பிறகு, உமிழ்நீருடன் தேன் பையில் விழுங்குகிறது. தேன் பையில் பல வால்வுகள் உள்ளன. தேன் பையிலிருந்து தேனை மறுபடியும் வாய்க்குக் கொண்டுவர முடியும். பணித் தேனீயின் முன் பக்கத்து கால் ஒவ்வொன்றிலும் மயிர் வரிசைகள் உள்ளன. இதைச் சீப்பு என்று சொல்வார்கள். வயிற்றிலிருந்து வாய்க்குக் கொண்டுவரும் தேனை இந்தச் சீப்புக்களுக்கிடையேயுள்ளஇடைவெளியில் வைத்திருக்கும். அந்த இடைவெளியில் தேன் நிறைந்ததும், அதன் மேல் மெழுகினால் பூசி விடுகிறது. ஒரு தேனீக் கூட்டம் நாலு கிலோ தேன் வரை சேகரிக்கும்.

தேனுக்குப் பல சுவைகளும், பலவிதமான நறுமணமும், வண்ணமும் உள்ளன. வெள்ளைத் தேனும் இருக்கிறது, மஞ்சள் தேனும்இருக்கிறது.

டெக்ஸ்ட்ரோஸ், லெவுலோஸ் எனும் இருவகை சர்க்கரைப் பொருள்கள் தேனில் அடங்கியிருக்கின்றன. வலிவான உடலுக்குத் தேவைப்படும் தாதுப் பொருள்களும், விட்டமின் சத்துக்களும் தேனில் அடங்கியுள்ளன.

200 கிராம், அதாவது 10 மேசைக் கரண்டி தேனை அருந்தினால் ஒரு லிட்டர் பாலையோ, 330 கிராம் இறைச்சியையோ, 8 ஆரஞ்சுப் பழங்களையோ, 10 முட்டைகளையோ உண்பதால் கிடைக்கும் சத்துப் பொருளை விட அதிகச் சத்துப்பொருள் கிடைக்கிறது என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்!

21 கிராம் எடையுள்ள ஒரு மேசைக்கரண்டி தேன், 67 கலோரி ஊட்டம் தருகிறது 1938-லேயே ஒரு அமெரிக்க விஞ்ஞானி தேனின் சத்துணவுச் சிறப்பை மெய்ப்படுத்திக் காட்டினார். அவர் பாலையும் தேனையும் மட்டுமே அருந்தி 12 வாரங்கள் அவரது வழக்கமான அலுவல்களை எந்தவிதச் சிரமமுமின்றிக் கவனித்து வந்தார்.

அதிகமாக வேலை செய்து களைப்புற்றிருக்கும் எந்த மனிதனும் 1 மேசைக் கரண்டி தேனை ஒரு கோப்பைத் தண்ணீரில் கலந்து அருந்தினால் உற்சாகமும் சுறுசுறுப்பும் பெற முடியும்.

கண்நோய், தொண்டைப்புண், இருமல், நீர்ப்பிடித்தல், மலச்சிக்கல், காய்ச்சல் ஆகியவற்றைத் தடுப்பதற்குத் தேனைப் பயன்படுத்துகிறார்கள். ஆயுர்வேத, சித்த மருத்துவ முறைகளில் தேனை மிகவும் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

இரத்தத்தைச் சுத்தப்படுத்துவதற்கும், நெருப்புப் புண்களுக்கும் இதைப் பயன்படுத்துவது உண்டு. டை பாயிட் அணுக்களைத் தேன் இரண்டே நாட்களிலும், நிமோனியா அணுக்களை நன்கே நாட்களிலும் வயிற்றுப் போக்குக் காரணமாக உள்ள அணுக்களை 10 நாட்களிலும் கொன்று விடுவதாக மதிப்பிட்டிருக்கிறார்கள்.

தேயிலை, காப்பி, பால் அல்லது எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்து தேனை அருந்தலாம். ரொட்டி, கேக், பிஸ்கட்டுகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் போது தேனைப் பயன்படுத்தினால் அவை நல்ல தரமுள்ளவையாகக் கிடைக்கின்றன.

தோல் பராமரிப்பு, அழகுப் பராமரிப்பு ஆகியவற்றுக்கான திரவங்களை உற்பத்தி செய்வதற்குத் தேனைப் பயன்படுத்துகிறார்கள். கறவைப் பசுக்களுக்குத் தேன் கொடுத்தால் அதிகப் பால் கிடைக்கிறது. பந்தயக் குதிரைகளுக்குத் தேன் கொடுத்தால் அவை மேலும் வேகமாக ஓட முடிகிறது.


சுற்றுலா சுந்தரம்
கதை: இளவல் ... சித்திரம்: முத்து
நீதானே தம்பி டூர் கிளம்புறே! நான் அழைச்சிட்டு போறேன்!
நானும் என் சிநேகிதன் அருளும் வர்றோம்; எங்க எக்ஸாமினேஷன் எல்லாம் இரண்டு வாரத்திலே முடிஞ்சிடும்; அப்புறம் கிளம்புறோம்!
தம்பி, இந்தக் கார்மேகம் எதை நினைச்சாலும் அதை செய்து முடிப்பான்! நீயும் அடிக்கடி வா! உன்னிடம் நிறையப் பேசணும்...
ரொம்ப தாங்க்ஸ் சார்.
மாலாவைச் சந்திக்க மீரா வருகிறாள்
வா மீரா! உனக்காகத்தான் காத்திருக்கிறேன்
செல்வமணி கடிதம் எழுதியிருக்கிறாள்; அதைச் சொல்லத்தான் ஓடி வந்தேன்!
ஊட்டிக்கு எப்ப போகலாம்னு எழுதியிருக்கா...?
இப்ப வேண்டாம்னு எழுதியிருக்கா! அங்கே யாரோ இறந்துட்டாங்களாம்! என்ன செய்றதுண்ணு எனக்குத் தெரியலே
சுந்தரமும் அருளும் சும்மா விட மாட்டாங்களே! சுற்றுலா போகவேண்டாம் தேர்வு முடிந்த பிறகு நானே அழைச்சிட்டுப் போறேன்னு சொன்னேன்! இப்ப என்ன செய்றது? செல்வமணி நம்மை இப்படி வம்பிலே மாட்டி விட்டுட்டானே....!
மீரா அத்தை ஆறு மணிக்கெல்லாம் வரச்சொன்னாங்க... நம்ம டூரைப்பத்தி முடிவு செய்யுறாங்களாம். மாலா அக்காவும் எங்க வீட்டுக்கு வர்றாங்க வா... போவோம்
டேய் அருள், இதிலிருந்து எப்படியாவது தப்பிக்கணும்..


சுந்தரம் நீதாண்டா அது இதுன்னு சொல்றே.... நானும் சரின்னு சொல்லி வர்றேன்...எனக்கு ஒண்ணுமே புரியலே... அவுங்களோட சேர்ந்து போனாலும் போவோம்! நாம கோட்டை விடவேண்டாண்டா
போடா மண்டு! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு பெரிய திட்டம் போட்டிருக்கேன். நான் கவனிச்சுக்கிறேன், நீ, நான் சொல்றதுக்கு ஆமாம் போடுடா போதும்!
அக்கா ஒரு நல்ல சேதி! அப்பாவும் ஒத்துக்கொண்டாங்க நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து அருளோட அப்பா-சொன்னால் ராஜா மாமாவும் சரி என்பாங்க...
பீடிகை பிரமாதமா இருக்கே! விஷயம் என்ன?
எங்கள் ஓவிய ஆசிரியர், கன்னியாகுமரிக்கு உல்லாசப் பயணம் போகிறார். எங்கள் இரண்டு பேரையும் அழைத்துச் செல்கிறேன் என்றார். ராஜா மாமாவிடம் சொல்லுங்க.....
உம்... எங்களுடன் வர பிடிக்கலே....! மீரா.. ராஜா அண்ணாவிடம் சொல்லி அனுமதி வாங்கிக் கொடு... சரி நீங்க போங்க....
நம்ப வேலை சுலபமா முடிஞ்சிடுச்சு நம்ப நாடகத்துக்கே வேலை இல்லாமல் ஆக்கிட்டானே, சுந்தரம்!
செல்வமணி ஏமாற்றியதால் நம்ப ரூம் கான்சலாகிவிட்டது!
மறு நாள் சுந்தரமும், அருளும் சுற்றுலாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்....
சார் தந்தி!
தொடரும்





நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு





# TANSI
# டான்ஸி

**தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்**
**தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது**

- மலிவானது
- உத்திரவாதமானது
- வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமான கட்டமைப்புகளுக்கும், கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் ''டான்ஸி'' தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

விவரங்களுக்கு அணுகவும் :

நிருவாக இயக்குனர்
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
26, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-14.
தொலைபேசி எண்: 83061.
Telegraphic Address—"STATE INDCO"

3177

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்.
அச்சிட்டவர் தமிழ் நாடு அரசு அச்சக எழுது பொருள் இயக்குநர்,
தமிழ் நாடு அரசினர் அச்சகம், சென்னை-1.




Criterion CO 2882

பதிவு எண். M. 8676







# தமிழகம் ஒரு பொற்காலத்தை உருவாக்கிவருகிறது!

உழுபவனுக்கே நிலம் உடைமையாகச் சட்டம்:
பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரு மடங்காவதற்கு
அடித்தளத்திலிருந்து திட்டமிடும்
மாநில திட்டக்குழுவின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட
குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் - மின்வசதி!
கிராமப் புறங்களிலும் வீட்டுவசதி!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை!
பசுமைப் புரட்சியில் முதலிடம்!

இரத்தப்புரட்சி இல்லாமல் இனிய வாழ்வு உருவாக்கும்

இந்தத் திட்டங்கள்
இன்றையத் தலைமுறைக்கு நன்மை நல்க
நாளையத் தலைமுறைக்கும் நல்வாழ்வு அளித்திட
தமிழகத்தில் பொற்காலம் அமைந்திட
நாம் ஆற்றவேண்டிய பேருதவி

## அளவான குடும்பம்

சீரான வாழ்வுக்கு மட்டுமல்ல
சிறு குடும்பம்—
செழித்திடும் நன்மைகளை-நாட்டில்
நிலைத்திடச் செய்ய
அமையட்டுமே அளவான குடும்பம்!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்பநலத்துறை
தமிழ்நாடு அரசு